
அல்லயன்ஸ்
சொர்கத்தில் புயல்
ஜாவர் சீதாராமன்

மின்நூல் உருவாக்கம்

சுபாஷ் சண்முகா

# சொர்க்கத்தில் புயல்

ஜாவர் சீதாராமன்

அறிவே விளக்கு

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ் புத்தக நிறுவனம்)

உரிமைப் பதிப்பு

முதல் பதிப்பு 1993
இரண்டாம் பதிப்பு : 1997
மூன்றாம் பதிப்பு 2010

© ஆசிரியருக்கு

**விலை ரூ. 70/-**

அல்லயன்ஸ் கம்பெனி
ப. எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை
தபால்பெட்டி எண்: 617
மயிலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி : 044-24641314
இணைய தளம்: www.alliancebook.com
தொலை நகல் : Srinivasan@alliancebook.com

Printed by Sekar Graphics, Chennai-5

# பதிப்புரை

எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று நினைப்பவர் பலர்; இப்படித்தான் வாழவேண்டும் என்று நினைப்பவர் சிலர். அந்தச் சிலருள் ஒருவ ராகத் திகழ்ந்தவர் 'ஜாவர்' சீதாராமன் அவர்கள். அவர் நமக்கு அளித்துச் சென்ற கதை களின் எண்ணிக்கை மிகக் குறைவு. ஆனால் அந்த ஒரு சில நாவல்கள் நம்மிடையே மறக்காமல், மறையாமல் இன்றும் நிலவி வருகிறது. அதற்குக் காரணம் அந்தக் கதையின் தரம்தான். எவ்வளவு பெரிய கதையாக இருந்தாலும் பக்கத்திற்குப் பக்கம், ஏன் வரிகளுக்கு வரி விறுவிறுப்பைத் தருகிறது. இப்படிப்பட்ட கதைகளை ஒரு சிலரால் தான் எழுதமுடியும். இவை காலத்தால் அழியாத பொக்கிஷங்கள் எனலாம்.

இந்த அருமையான நூல்களை எங்கள் மூலம் வாசகர்களுக்குக் கிடைக்கச் செய்த திரு. எம். ஆர். நாராயணன் அவர்களுக்கும், ஜாவர் சீதாராமன் அவர்களின் குமாரர் திரு. எஸ். நீலகண்டன் அவர் களுக்கும் நாங்கள் வாசகர்கள் சார்பில் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறோம்.

—பதிப்பகத்தார்

**நூற்றாண்டை நோக்கி...**

''தமிழில் நல்ல நூல்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸ் ஸ்தாபகர் ஸ்ரீ.வி. குப்புசாமி ஐயரை நான் பாராட்டுகிறேன்.''

—மகாத்மா காந்தி

''நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளையும், பல நாடகங்களையும், பல மொழிபெயர்ப்புக்களையும் இன்னும் பல விஷயங்களையும் எளிய அழகிய நடையில் வெளியிட்டு வரும் அல்லயன்ஸாரை நான் பாராட்டுகிறேன்.

—மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்

''Books published by Alliance Company are highly Popular Books.''

—Rt. Hon'ble V.S. Srinivasa Sastri

''தமிழில் அழகிய புத்தகங்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸாருக்கு நன்றி செலுத்தி அவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுகிறேன்.''

—சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

''அல்லயன்ஸ் கம்பெனியார் நல்ல நூல்களை வெளியிடுவதில் தேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தமிழ் நாட்டார் தக்க ஊக்கம் தரவேண்டும் என விரும்புகிறேன்.''

—சத்தியமூர்த்தி

''மயிலை அல்லயன்ஸ் கம்பெனியாரின் வெளியீட்டுத் திறத்தை ஈண்டு விரித்துக் கூறவேண்டியதில்லை. அதை நாடறியும். அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப் பெற்ற நூல்கள் யாவும் தமிழ்நாட்டுக்குப் பலவழிகளிலும் பயன் விளைத்து வருவது கண்கூடு. நாட்டு நலங்கருதி ஒழுங்கு முறையில் உழைக்கும் அவர்களுக்கு நாடு கடமைப் படுவதாக.''

—திரு. வி. க.

# இந் நூலாசிரியரைப் பற்றி...

''கரணம் தப்பினால் மரணம்'' என்று சொல்லு வார்கள். ''மரணம் தப்பினால் மண்டையாவது உடையும்; காலாவது முறியும்; அல்லது பல்லாவது உடையும்'' என்று சேர்த்துச் சொல்லவும் முடியும். ஆனால் இந்த ஆபத்து எதுவுமே இல்லாமல் ஒருவர் 'கரணம் போட்டுத் தப்பினார்' என்றால் அது மிக ஆச்சரியந்தானே!

''ஏழை படும்பாடு'' படத்தில் போலீஸ் இன்ஸ் பெக்டர் ஜாவரின் பாத்திரத்தை ஏற்று அமரத்துவம் பொருந்திய, அந்த சீதாராமன் 'இந்தியன் சிவில் சர்வீஸ்' (ICS) பரீட்சையில் தேறி, கலெக்டராக ஆகிவிட என்று ஆசை கொண்டார். அதன்படி பரீட்சையும் எழுதி னார். ஆனால் சர்க்காரின் துரதிருஷ்ட வசமாய்— ஐ.ஸி.எஸ் பரீட்சையில் தேறவில்லை. அதுகுறித்து சிறிதும் வருந்தாது சினிமா உலகில் பிரவேசித்து விட்டார்.

சினிமா உலகில் பிரவேசித்த பின்னர் அவருக்கு வெற்றி மேல் வெற்றி; புகழுக்கு மேல் புகழ்தான். இந்தியன் சிவில் சர்வீஸிற்கும், இந்தியன் சினிமா சர்வீஸிற்கும், முதல் எழுத்துக்கள் (ஐ.ஸி.எஸ்.) விஷயத் தில் பூரண ஒற்றுமை இருந்தபோதிலும் புகழ் விஷயத்தில் எவ்வளவு வேற்றுமை பார்த்தீர்களா?

இவர் சினிமா உலகில் பிரவேசித்ததே ஒரு எதிர் பாராத சம்பவம்தான் காரணம். ஐ.ஸி.எஸ். பரீட்சையில் தேர்வு பெறாத இவர் எந்தத் தொழிலில் நுழையலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, ஒருநாள் ஜெமினி அதிபர் எஸ்.எஸ். வாசன் அவர்களைப் பார்க்கச் சென்றார். சினிமா உலகில் நுழைய வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் அங்கு செல்லவில்லை. ஏதோ காரணமில்லாத ஆவல்தான் அவரை இழுத்துச் சென்றது.

ஜாவர் சீதாராமன் அவர்கள் பேச்சும், பாவனையும், நடையும் வாசன் அவர்களைக் கவர்ந்தது. இருவருக்கும் பேச்சு ஆரம்பமாயிற்று. சினிமா உலகைப்பற்றியும், படங் களைப் பற்றியும் சீதாராமன் தன் அபிப்பிராயங்களை அள்ளி வீசினார். "ஜெமினி படங்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று திரு. வாசன் கேட்டார். உடனே இவர் தாக்கு தாக்கு என்று தாக்கி, தன் அபிப்பிராயங்களைத் தைரியமாக வெளியிட்டார்.

இதற்காக வாசன், அவரைக் கோபித்துக்கொள்ள வில்லை. பெரிய மனிதரின் சுபாவம்! அதற்குப் பதில் அவர், "இவ்வளவு தூரம் நீங்கள் பேசுகிறீர்களே, உங்களால் நடிக்க முடியுமா? சொல்லுங்கள்" என்று கேட்டார்.

"ஏன் முடியாது? தாராளமாய் முடியும்" என்று அழுத்தமாகப் பதில் அளித்தார் சீதாராமன்.

"அப்படியானால் அதையும்தான் பார்த்து விடலாமே; உங்கள் விலாசத்தைக் கொடுத்துவிட்டுப் போங்கள். கூடிய சீக்கிரத்தில் உங்களுக்குச் சொல்லி அனுப்புகிறேன்" என்று கூறினார் வாசன்.

ஆனால் இவர் சினிமாவில் சேருவதை உற்றார், உறவினர், நண்பர்கள் எவரும் விரும்பவில்லை. ஆனால் திரு. வாசன் அவர்களிடமிருந்து அழைப்பு வந்ததும்,

''எப்படியானாலும் சரி; சினிமாவில் சேர்ந்தே விடுவது'' என்று அவர் சென்னைக்குப் புறப்பட்டார்.

தன் அழைப்பின் பேரில் சென்னைக்கு வந்த சீதாராமனுக்கு ''மிஸ் மாலினி'' படத்தில் நாடக டைரக்டராக நடிக்கும் சந்தர்ப்பத்தைக் கொடுத்தார். இவர் இந்தப் படத்தில் மிகவும் அபாரமாக நடித்து, நடிப்பு என்பதை விட நிஜமாகவே எல்லாம் நடப்பதுபோல் தத்ரூபமாய் நடித்துக் காட்டினார். பிறகு இவர் சந்திரலேகா, ஏழை படும் பாடு போன்ற படங்களில் நடித்தார்.

'ஏழை படும் பாடு' சீதாராமனை ஒரு உன்னத நடிகரென்று ஊர்ஜிதம் செய்து வைத்தது. அதில் இவர் 'ஜாவர்' பாத்திரத்தில் திறம்பட நடித்ததால் இவருக்கு இப் பெயரே நிலைத்துவிட்டது. பிறகு, அவருக்குப் பட உலகில் கிராக்கி அதிகரித்துவிட்டது.

இவர் சினிமா உலகில் படத்தின் மூலமே பிரகாசிக்கத் தொடங்கியதற்குக் காரணம், பள்ளிக்கூட நாடகங்களில் நடித்தும், மேடையில் பிரசங்கம் பேச்சுப் போட்டி இவைகளில் நிறைய அநுபவம் பெற்றிருந்ததுதான் என்று கூறலாம்.

திருச்சி ஜில்லாவிலுள்ள அழகிய மணவாளன் கிராமத்தில் 1920-ல் ஜூலை மாதம் 6ஆம் தேதி பிறந்தார். ஆரம்பத்தில் படித்தது கோயம்புத்தூரிலுள்ள சர்வ ஜன ஹைஸ்கூலில்தான். இப் பள்ளியின் ஹெட்மாஸ்டராயிருந்த ஸ்ரீ. ஆர். ஸ்ரீநிவாச ஐயங்கார் சீதாராமனிடம் மிகப் பிரியம் கொண்டிருந்தார். நாடகங்களில் இவரை நடிக்கத் தூண்டி உற்சாகமூட்டியவர் அவர்தான். பள்ளிப் பிரசங்கங்களிலும், போட்டியிலும் இவர் முதன்மையாக நின்று 'கப்'கள், மெடல்கள் முதலியவைகளைப் பெற்றிருக்கிறார். 1940-ல் சர்வகலா சாலை சங்க விவாதத்திலும், 1941-ல் கஸ்தூரிரங்கய்யங்கார் ஞாபகார்த்தப் பிரசங்கப் போட்டிலும், 1956-ல் சட்டக்கல்லூரி பிரசங்கப்

போட்டியிலும் முதன்மையாக நின்று அவர் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்.

சர்வ ஜன ஹைஸ்கூலில் எஸ். எஸ். எல். ஸியை முடித்துக் கொண்டு, திருச்சி நாஷனல் காலேஜில் இன்டர் மீடியட்டை முடித்து, செயின்ட் ஜோசப் கல்லூரியில் பி. ஏ. ஹானர்ஸ் பாஸ் செய்தார். அவர் தேசியக் கல்லூரியில் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். இதன் பின் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி. எல். பட்டமும் பெற்றார்.

படிப்பிலும் நடிப்பிலும் தேர்ந்த சீதாராமன் எழுது வதிலும் திறமையுடையவர். பத்திரிகைகளில் ''கௌசி'' என்ற புனைப் பெயரில் பல நல்ல கதைகளை எழுதியிருக் கிறார். திரைப்படங்களுக்குப் பல நல்ல கதைகளை எழுதி யுள்ளார். இவர் பணம்-பெண்-பாசம், நானே நான, சொர்க்கத்தில் புயல், மின்னல்-மழை-மோகினி உடல்-பொருள்-ஆனந்தி போன்ற கதைகளைப் பத்திரிகைகளில் தொடராக எழுதினார். இவர் திரைக்கதையைத் தவிர வசனம் டைரக்ஷன் போன்ற பொறுப்புகளையும் திறம்பட செயலாற்றியுள்ளார்.

இப்படிச் சகலகலா வல்லவனாகத் திகழ்ந்த இவர் 1969 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் மறைந்தாலும் அவருடைய புகழும் எழுத்துக்களும் நம்மிடையே இன்றும் நிலவி வருகிறது.

# சொர்க்கத்தில் புயல்

## 1

பெருங்காற்று! கடற்கரையில் பேரிரைச்சல்! பெரிய ஆலவிருட்சம் குனிந்து நிமிர்ந்து 'நமாஸ்' செய்வது போல, அலைகளின் வீழ்ச்சியும் எழுச்சியும் பயங்கரமாக இருந்தன. முதல் நாள் மாலை பொழுது போக்குவதற்காக பீச்சுக்கு வந்திருந்த குடும்பங்கள் தின்றுவிட்டுப் போட்டிருந்த சுண்டல் கட்டிய காகிதங்கள் காற்றில் பறந்தன. நடைபாதையை ஒட்டி நடப்பட்டிருந்த விளக்குக் கம்பங்கள் சில, குடிகாரன் போல் இப்படியும் அப்படியும் அசைந்தாடின. சில வேரோடு பிடுங்கி எறியப்பட்டுப் 'பிரக்ஞையற்று'க் கிடந்தன. ஒன்றிரண்டு கம்பங்கள் முறுக்கி எறியப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து வெளிக் கிளம்பிய கம்பிகளில் மின்சாரம் பாய்ந்து தரையில் ஒழுகிக்கொண்டிருந்தது. தெரியாத்தனமாக அதன் மீது கால்வைத்து விட்ட மாடு ஒன்று தீய்ந்து கருகிக் கிடந்தது. புயல்காற்றின் ஊழிக்கூத்து நிகழும் அந்தக் கடற்கரையில் மனித நடமாட்டமே இல்லை. அண்மையில் உள்ள கட்டிடங்களின் ஜன்னல் கதவுகள் அடித்துக் கொள்ளும் 'படபட' ஓசை நாடகத்தின் நடுவே வரும் பொருத்தமில்லா நகைச் சுவைக் காட்சிபோல் அமைந்தது. எங்கோ இருந்த ஒரு ஷெட்டுக்குக் கூரையாய் இருந்த துத்தநாகத் தகடுகள் காற்றின் வேகத்தால் பிடுங்கப்பட்டு, காகிதப் பட்டம்போல் வானவீதியில் பறந்து திரிந்தன.

காற்றுக்கும் நீருக்குமிடையே நடைபெற்ற அந்தக் கலவியைப் பார்த்தபடி அசையாது நின்ற கமலாவின் மனத்தில் டாக்டர் நாதனுக்கும் அவளுக்குமிடையே நடைபெற்ற கலவிதான் நினைவுக்கு வந்தது. காற்று என்ற ஆணின் அணைப்புக்குத் துடித்து எழுந்து வரும் பெண்ணாகத் தோன்றியது கடல். புயலின் நடுவே கடலின் ஓலம், இன்பத்தின் உச்சியில் பெண் முனகும் முனகலாக ஒலித்தது. கமலாவின் உள்ளத்தில் வீசிய புயலுக்குக் கடற்கரைப் பெருங்காற்று நடு அங்கமாகத் தோன்றியது. 'பிண்டத்தில் இருப்பதே அண்டத்திலும், அண்டத்தில் இருப்பதே பிண்டத்திலும்!' என்ற தத்துவ வாக்கியம் கமலாவின் அப்போதைய மன நிலைக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது.

எங்கு நடக்கிறோம் என்ற உணர்வு இல்லாமல் அவள் நடந்தாள். காற்று ஒரு முறை அவளைத் தரையில் சாய்த்தது. மெள்ள எழுந்தாள். மார்பிலிருந்து சேலையை அப்புறப்படுத்தியது காற்று. இளமையின் சிறப்புக்கும், பருவத்தின் பூரிப்புக்கும் விளம்பரம் நான்தான் என்று சொல்லுவதுபோல அவள் மார்பு நிமிர்ந்து நின்றது. தன் மார்பைப் பார்த்ததும் டாக்டர் நாதன் சொன்ன வார்த்தைகள் கமலாவின் காதுகளில் மீண்டும் ஒலித்தன.

''உன் இளமை ஆண் உள்ளத்தில் ஆசைப் புயலை எழுப்புகிறது! நீ உடல் மூடி நடக்க வேண்டும், கமலா. இல்லாவிட்டால் ஊருக்கு ஆபத்து!''

அன்று நாதன் மனத்தில் ஆசைப் புயலை எழுப்பிய தன் 'கவர்ச்சி' தான் இன்று கடற்கரையில் புயலை எழுப்பி விட்டதோ என்று நினைத்துத் தன் மார்பை ஒரு முறை பார்த்துக் கொண்டாள்.

இதே கடற்கரையில் அன்று அந்திவேளையில் ஆசை வார்த்தைகள் கூறி, அனாதைப் பெண்ணின் மனத்திலே, இன்ப அலைகளை ஏற்படுத்தியவன்தான் டாக்டர்

நாதன். நர்ஸ் என்ற முறையில் கமலா டாக்டர் நாதனிடம் பக்தியும் மதிப்பும் கொண்டிருந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் பக்தியும் மதிப்பும் அப்படியே இருந்து விடுகிறதா? பாழாய்ப்போன பெண் மனத்தில் பக்தி பாசமாக மாறுகிறது; மதிப்பு மயக்கமாக மாறி விடுகிறது! அதிலும் குறிப்பிட்ட நபர் நாதனைப்போல் கவர்ச்சியான தோற்றமுடையவனாயிருந்தால் மயக்கமென்ன, ஆசை வெறியே ஏற்பட்டு விடுகிறது! இதே கடற்கரையில், மணல் திட்டில் அசையாது புதைக்கப் பட்டிருக்கிறதே அந்தப் பழைய படகு, அதன் பின்புறம் தான் கமலா முதன்முறையாக சொர்க்கத்தை அடைந்தாள். இல்லை சொர்க்கத்தை அடைந்ததாக அன்று நம்பினாள். அது சொர்க்கமல்ல; நரகம் என்பது இன்று அவள் மனம் அளிக்கும் தீர்ப்பு.

மனம் எவ்வளவு சுலபத்தில் சூழ்நிலைக்குத் தக்கபடி தீர்ப்பளிக்கிறது! அதே மனம் சூழ்நிலைக்குத் தக்கபடி தன் தீர்ப்பையும் கூசாமல் மாற்றிக் கொள்கிறது!

ஒரு வருஷத்துக்கு முன்பு, பௌர்ணமி நிலவில், அந்தப் படகின் பின்புறம் டாக்டர் நாதனின் இனிய பேச்சும் இளமைத் தோற்றமும் எப்படிப்பட்ட இன்ப நாடகத்தைத் துவக்கின! அவன் குரலில் ஒரு மயக்கும் இசை! அவன் விரல்களில் ஒரு மின்சாரம்! எல்லாமாகச் சேர்ந்து கமலாவை இன்பக் கேணியில் தள்ளின. கமலா அன்று மணலில் புரண்டாள். 'இது போதாது; இன்னும் வேண்டும்' என்று துடித்தது அவளது பேராசை மனம். அவள் கரங்கள் நாதன் தன்னைவிட்டு விலகாதபடி தடுத்துக் கொண்டன.

நாதன் சிரித்தான். ''முதலில் பயந்தவளா இப்படி?''

கமலாவின் மனத்தை வெட்கம் சூழ்ந்தது. ஒன்றும் பேசாமல் தலை குனிந்தபடி நகர்ந்தாள்.

ஆனால் நாதன் விடவில்லை. தேர்ந்த வீணை வித்வான் வீணையில் ஸ்வரங்களோடு விளையாடுவது

போல், அன்றிரவு பூராவும் நாதன் அவள் உடலை வீணையாக்கி, அவளது உணர்ச்சி ஸ்வரங்களோடு விளையாடினார் .

அதுவரை ஆண் பிறவியென்றால் பயந்து நடுங்கியவள், அவர்களிடமிருந்து ஒதுங்கி வாழ்ந்தவள், அன்று நாதனின் ஆண்மைக்குப் பலியானாள்.

காதல் பாதை என்பதே ஒரு முள் பாதை என்பதைத் தன் தாயின் வாழ்விலிருந்து அவள் உணர்ந்திருந்தாள். கமலாவின் தாய் ராணி கண்ணியமற்ற காதலுக்குப் பலியாகி மடிந்தவள். அந்தப் பொல்லாத காதல், ராணியைப் பாழுங் கிணற்றிலும் கமலாவை சேவா சதனத்திலும் கொண்டு சேர்த்தது. அனாதைக் குழந்தையாக வளர்ந்த அவளுக்குத் தன் தகப்பன் யார் என்று தெரியாது. ஆனால் தாயின் சோகக் கதை நன்றாகத் தெரியும்.

'என் தாயின் தவறான உணர்ச்சியில் உருவானவள் நான். அந்த உணர்ச்சிக்கு ஒரு நாளும் பலியாக மாட்டேன்' என்று, பருவம் வந்ததும் விரதம் பூண்டாள் அவள். எவ்வளவோ அழகான ஆண்களைப் பார்த்த போதும் அவள் சலனமடைந்ததில்லை. அனாதை விடுதியில் ஒழுக்கத்துக்காகப் பரிசு வாங்கியவள் அவள். சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் நர்ஸாகச் சேர்ந்த போதும் அவளுக்கு இனக் கவர்ச்சி ஏற்பட்டதில்லை.

அன்று படகின் மறைவில் நாதன் அவளை அணைத்த போது முதலில் நடுங்கினாள். எங்கோ காத்திருந்த புயல் ஒன்று திடீரென்று வீசியதுபோல், அவளது உடலைத் திடீரென்று ஒரு வெறி பற்றிக்கொண்டது. சேவா சதனத்தில் உருவான விரதம், பல ஆண்டுகளாகப் பழகி வந்த கற்புநெறி எல்லாம் ஒரு நொடியில் டாக்டர் நாதனின் கவர்ச்சியில் கரைந்து மறைந்தது. கமலாவுக்கு உட்புறம் இன்னொரு கமலா இருந்து அன்று வெளி வந்தது போலிருந்தது!

அன்று பௌர்ணமி நிலவில் ஏற்பட்ட மாறுதல் கமலாவுக்குக் குழப்பத்தை உண்டாக்கியது. ஆனால், நாதன் படித்தவன் அல்லவா! கமலாவின் நிலையை அழகாகக் கமலாவுக்கே விளக்கினான்.

''கமலா, உன் பரம்பரைக் குண விசேஷம் உன்னிடம் இல்லாமல் போகுமா? ஒரு தாய் எப்போதுமே மகளுக்குள் தொடர்ந்து வாழ்கிறாள். அதனால்தான் 'தாயைப் போல பிள்ளை; நூலைப்போல சேலை' என்று நம் நாட்டில் சொல்கிறார்கள்.''

அவன் தன்னைப் புரளி செய்கிறானா, போற்று கிறானா என்று புரியவில்லை கமலாவுக்கு. அப்போது அவளுக்கிருந்த உடற்பயிசியில் டாக்டர் நாதனின் உட்கருத்தை ஆராயப் போதிய பலமும் அவகாசமும் இல்லை.

டாக்டர் நாதனின் விஷயம் எப்போதுமே அப்படித் தான். அவன் ஒருவரைப் பார்க்கும்போது அவரைத் தான் பார்க்கிறானா, அவரை ஊடுருவிப் பின்புறம் பார்க்கிறானா என்ற ஐயம் ஏற்படும். அவன் சிரித்தால் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறானா, நம்மோடு சேர்ந்து சிரிக்கிறானா என்ற சந்தேகம் ஏற்படாமல் போகாது. அவன் ஒருவரிடம் உதவி பெறும் போதுகூட, அவர்களுக்கு உதவி செய்துவிட்டவன் போன்ற ஒரு பிரமையை உண்டு பண்ணுவான்! ஆஸ்பத்திரியில் இரு டாக்டர்கள் மனவேற்றுமை கொண்டவர்களாக இருப் பார்கள். ஒருவருக்கு மற்றவரைப் பிடிக்காது. ஆனால், நாதனை மட்டும் எப்படியோ இருவருக்கும் பிடித்திருக் கும்! குறைந்த வார்த்தையில் நிறையச் சாதிக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்வான். சொல்கிற மாதிரியே சாதித்து வெற்றியடைந்தும் வந்தான். இல்லாவிட்டால் இத்தனை நாளும் கமலாவின் மனத்தில் ஒரு நம்பிக்கையை ஊட்டிவிட்டுக் கடைசியில் இப்படிச் செய்திருப்பானா?

கமலா சிந்தித்துப் பார்த்தாள்.

அவன் என்ன தவறு செய்தான்? எதுவுமில்லை. உண்மையில் தவறு முழுக்க அவளுடையதுதான். அவளை மணந்து கொள்வதாக அவன் ஒரு நாளும் அப்பட்டமாகச் சொன்னதில்லை. ஆனால், அவன் தன்னை மணந்துகொள்வான் என்ற நம்பிக்கையை மட்டும் எப்படியோ கமலாவுக்கு ஊட்டியிருந்தான்! அது எப்படியோ!

அன்று மாலை ஆஸ்பத்திரியில் நாதன் தனது திருமண அழைப்பிதழைக் கமலாவிடம் கொடுத்தபோது தான் அவளுக்கு உண்மை புரிந்தது.

''என்ன டாக்டர், இப்படிச் செய்து விட்டீர்கள்!'' என்று அவள் அலறிக் கேட்டபோது, நாதன் சிறிதும் பதற்றப்படாமல், ''என்ன செய்வது? பெரிய லட்சாதிபதி! ஒரே பெண்! பெரிய வீடு வாங்கி, நர்ஸிங்ஹோமே ஏற்பாடு செய்கிறேன் என்கிறார். இவ்வளவு நல்ல சந்தர்ப்பத்தைத் தட்ட முடிகிறதா?'' என்றான்.

''நீங்கள் என்னை மணந்து கொள்வீர்கள் என்று நம்பினேன்!''

''உன்னை மணந்துகொள்வதாக எப்போதாவது சொல்லியிருக்கிறேனா?''

அவன் கேள்வியிலிருந்த உண்மை அப்போதுதான் அவளுக்குப் புலப்பட்டது. அவளை மணந்துகொள்வ தாக அவன் வாய் திறந்து சொன்னதில்லை. அவன் பழகிய விதத்திலிருந்து அவளாகவே அனுமானித்துக் கொண்ட ஒன்றுதான் அந்த நம்பிக்கை.

''ஆனால், நீங்கள் பழகிய விதம்...உங்களுக்கு என்மீது இருந்த ஆசை...''

அவள் பேசிக் கொண்டிருக்கையிலேயே நாதன் சிரிக்கத் தொடங்கினான். ''இப்பொழுது மட்டும் எனக்கு உன் மேலே ஆசையில்லை என்கிறாயா? நிறைய

இருக்கிறது! ஆனால், நாம் நாகரிக உலகத்தில் வாழ்கிறோம் கமலா. ஆணுக்குப் பெண் தேவை; பெண்ணுக்கு ஆண் தேவை! ஏதோ இரண்டு பேரும் கொஞ்ச நாள் சந்தோஷமாக இருந்தோம். அத்தோடு விடுவாயா...''

''நான் எப்படி விடமுடியும், டாக்டர்?'' கமலா ஆவேசத்தோடு கத்தினாள்.

''இதோ பார், சும்மா கூச்சல் போடாதே உன்னோடு மட்டுமல்ல; உனக்கு முன்னால் எத்தனையோ நர்சுகளோடு பழகியிருக்கிறேன். அதையெல்லாம் உன்னிடம் சொன்னதில்லை. ஏன்? அவர்களை அவமானப் படுத்த நான் விரும்பவில்லை. அதே மாதிரி உன் விஷயத்தையும் வெளியே சொல்ல மாட்டேன். அதற்காக நீ எனக்கு நன்றி செலுத்த வேண்டும். தெரியுமா?'' அவன் பேச்சில், கமலாவுக்கு அவன் ஏதோ பெருத்த உதவி செய்துவிட்டது போன்ற தோரணை இருந்தது!

கமலா சீறினாள். ''ஓஹோ! மற்ற நர்சுகளிடம் சொல்லி என்னை அவமானப்படுத்திவிடுவதாகப் பயமுறுத்துகிறீர்களா? பரவாயில்லை. என் வாழ்வு உங்களால் பாழானதை உங்கள் வருங்கால மனைவியிடமே தெரிவிக்கிறேன்'' என்று கூச்சலிட்டாள்.

சாவதானமாக சிகரெட் பற்ற வைத்தான் நாதன். பிறகு, ஒரு முறை புகையை இழுத்து ஊதிவிட்டுப் பேசினான்.

''உன்னைப் பாழாக்கி விட்டேனா நான்! எவ்வளவு அபத்தம்! நீ யார்? சேவாசதனத்தைச் சேர்ந்த அநாதைப் பெண்! உன் அப்பா யார்? உனக்கே தெரியாது! உன் அம்மா யார்? போலீஸ் ரிக்கார்ட்லே இருக்கிறது விவரம்! உன் வாழ்வை நான் பாழாக்கிவிட்டேன் என்று சொன்னால் பொருத்தமிருப்பதாக எனக்குத் தெரியவில்லையே!

என் எதிர்கால மனைவியிடமே நீ புகார் செய்ய விரும்பினால் எனக்கு ஆட்சேபணை இல்லை. அவள் ஒரு மாடர்ன் கேர்ள்! எனக்குப் பல பெண்களின் தொடர்புகள் உண்டு என்று நான் அவளிடம் சொன்னபோது, உண்மையை இப்படி வெளிப்படையாகச் சொன்னதற்காகப் பாராட்டினாள்!''

சிலமுறை உறிஞ்சிய அந்தச் சிகரெட்டை அப்படியே கீழே போட்டு மிதித்துவிட்டு வெளியேறினான் அவன்.

கையில் மணவோலையுடன் திகைத்து நின்ற கமலாவுக்குத் தான் இரண்டு மாதமாக 'முழுகவில்லை' என்ற செய்தியை அவனிடம் சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் அந்த நிமிஷமே அவள் தன்னை அடக்கிக் கொண்டாள். இதயமற்ற அந்தக் கொடியவனிடம் அவன் கருவைத் தாங்குவதாகச் சொல்வதே அவமானம்!

அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அளவு மீறியது. பிறந்த நாள் முதல் அவமானத்தில் வாழ்ந்தவள், தன் முயற்சியால் படித்து நர்ஸாகி, தாய் தந்தையரால் பெற முடியாத தன்மானத்தைத் தன் உழைப்பால் பெற்றாள். அப்பனில்லாத மகள் என்ற அவச்சொல்லுக்குத் தப்பி ஓடி ஒளிந்தவள் முடிவில் அதே நிலையில் ஒரு சிசுவைச் சுமப்பதை உணர்ந்த போது வாழ்வு, உலகம் இரண்டுமே அர்த்தமற்றவையாகத் தோன்றின.

பிறக்கும் போதுதான் நம்மைக் கேட்காமல் ஆண்டவன் நம்மைப் பிறப்பித்துவிடுகிறான். ஆனால், மடிந்து, இந்த உலகத்தை விட்டு மறைந்து செல்ல நாம் யாரையும் கேட்க வேண்டாமே என்ற முடிவுக்கு வந்தவள், ஆஸ்பத்திரியில் அன்று செய்ய வேண்டிய பணிகளைச் செவ்வனே செய்து முடித்துவிட்டு அமைதியுடன் வெளியேறினாள்.

ஆஸ்பத்திரிக்கு வெளியே சீராளன் எதிர்ப்பட்டான். அவன் ஓர் ஆண் நர்ஸ். அவனைப் பார்க்கும்போதே யாருக்கும் சிரிப்பு வரும். அவன் கமலாவிடம் பேசும்

போதெல்லாம் .அசடு வழியச் சிரிப்பான். இன்பக் கனவுலகில் சுற்றிச் சுழன்று கொண்டிருந்த கமலாவுக்கு அவன் ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை. சீராளன் ஓர் அப்பாவி; பிழைக்கத் தெரியாத கோமாளி என்பது அவளது முடிவு. சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் சீராளன் கமலாவிடம் பேச முன்வருவான். கமலாவுக்கு அது எரிச்சலாக இருக்கும்.

ஆனால், இன்று இவ்வுலக வாழ்வை விட்டு வேற்றுலகப் பயணம் செல்லும் நிலையிலிருந்த அவளுக்கு அவனிடம் ஓர் இரக்கம் தோன்றியது. அவன்மீது ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. இத்தனை நாள் இல்லாத ஏதோ ஒரு வாஞ்சை பிறந்தது.

சீராளனைப் பார்த்து ஒரு சோகப் புன்னகை பூத்தாள்.

''என்ன மிஸ்டர் சீராளன், இன்றைக்கு இரவு டியூட்டியா?'' என்று கேட்டாள்.

சீராளன் முகத்தில் ஆச்சரியமும் அசடும் போட்டி போட்டுக் கொண்டு வழிந்தன. பற்கள் வெளியே தெரிய அவளைப் பார்த்துச் சிரித்தான்.

அவன் முகத்தைப் பார்த்த கமலாவுக்கு அவன் மீது அனுதாபம் ஏற்பட்டது. 'பாவம், நல்லவர். ஏழை, இந்த உலகம் இவரை ஒருநாள் வதைக்காமல் விடாது' என்று எண்ணினாள்.

அவனுக்கு ஏதாவது செய்ய வேண்டும்போல் தோன்றியது. தன் கழுத்தில் கிடந்த டாலர் கோர்த்த ஒற்றைவடச் செயினை எடுத்தாள். அவளது ஒரே சொத்து அதுதான். நாதன் தன்னை மணந்து கொண்டால், அந்த டாலரை அகற்றிவிட்டுத் திருமாங்கல்யத்தைக் கோர்த்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டிருந்தாள். வெகுநாள் உழைப்பின் பலனாகச் சேமித்த தொகையில் ஆசையாக அவள் செய்துகொண்ட ஆறு பவுன் சங்கிலி அது.

அதைக் கழற்றிச் சீராளனிடம் கொடுத்துவிட்டு, அத்தோடு ஒரு கவரையும் கொடுத்தாள்.

வியப்புடன் நிமிர்ந்து பார்த்தான் சீராளன்.

''நான் அவசரமாக வெளியூர் போகிறேன். இந்தக் கவரில் என் லீவ் லெட்டர் இருக்கிறது. இதை நாளைக் காலை ஆஸ்பத்திரியில் கொடுத்து விடுங்கள்'' என்றாள் கமலா.

''இந்தச் செயின் எதற்கு?'' என்று கேட்டாள் சீராளன்.

என்ன சொல்வதென்று புரியாமல் ஒரு வினாடி திகைத்தாள் கமலா. பிறகு, ''அது உங்களிடம் இருக் கட்டும்-நான் திரும்பும்வரை'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

'நான் திரும்பும் வரை' என்று சொன்னபோது அவள் குரலில் வெளிப்பட்ட ஒருவிதக் குழைவு சீராளனை உலுக்கியது. அவன் அடிவயிற்றில் என்னவோ செய்தது. எதுவும் பேசத் தோன்றாமல் செயினையும், கவரையும் மாறி மாறிப் பார்த்தபடி, ஸ்தம்பித்து நின்றான்.

கமலா கடற்கரைக்கு வந்து விட்டாள்.

வங்காளக் குடாக் கடலின் மத்தியிலிருந்து புயலும் கடற்கரையை நோக்கி நகர்ந்தது. மனப் புயலோடு வந்த கமலாவும் நிஜப் புயலோடு நின்ற கடலும் சந்தித்த போது இரவு மணி ஏழு இருக்கும்.

புயலின் மையத்தில் நின்று கொண்டிருந்தாள் கமலா. மனப் புயல் கடற் புயலோடு கலந்து, மனச்சுமை இறங்கி விட்டாற் போன்ற ஒரு பிரமை! மின்சாரத்தில் கால் வைத்துக் கருகிக் கிடக்கும் மாடு, பொங்கியெழும் கடல் இரண்டையும் பார்த்துவிட்டுத் தன் கையிலிருந்த தூக்க மாத்திரைப் பாட்டிலையும் பார்த்தாள். அதிலிருந்த மாத்திரைகளை விழுங்கிவிட்டுக் கடற்கரையில் நிம்மதி

யாகப் படுத்துவிடுவது என்று நினைத்தவள் சிறிதும் பயமில்லாமல் கடலை நோக்கி நடந்தபோது திடீரென்று ஓர் அச்சம் அவளைப் பற்றிக் கொண்டது.

உயிரைப் பற்றிய அச்சமல்ல அது! பெண்மையின் கூச்சம்! கடற்கரையில் இறந்து கிடந்தால், பொழுது புலர்ந்ததும் புயல் சேதத்தைப் பார்க்க வரும் செம்படவர்கள், போலீசார் இவர்கள் பார்வையில் தன் உடல் எந்தக் கோலத்தில் தென்படுமோ! ஆடை குலைந்து அனாதைப் பிணமாகக் கிடக்கும் பரிதாப நிலைக்கா தன் உடல் வரவேண்டும்?

ஒரு பக்கம் அவளுக்கே சிரிப்பு வந்தது. 'இறந்து போன பிறகு நானாவது, என் உடலாவது! நான் யாரோ, என் உடல் எதுவோ? அதற்கு என்ன நேர்ந்தால் எனக்கு என்ன?'

மறுநாள் காலை அதிகாரிகள் பேசப் போகும் வார்த்தைகளை இப்போதே எண்ணிப் பார்த்தாள்.

'அம்மா கிணற்றிலே, மகள் கடலிலே!'

'வாழ்விலேதான் எனக்குக் கண்ணியம் கிடைக்கவில்லை. சாவிலாவது அது கிடைக்கட்டும். என் வீட்டிலேயே, என் படுக்கையிலேயே, ஆடை குலையாமல், கண்ணியமாக என் உடல் காணப்பட வேண்டும்.''

இந்தத் தீர்மானத்துக்கு வந்து அவள் திரும்பிய வேளையில்தான் பனைமர உயரத்துக்குப் பொங்கியெழுந்த பேரலையொன்று அவளைச் சூழ்ந்து கொண்டது! நீருக்குள் மூழ்கிய கமலாவுக்கு நினைப்பெல்லாம் ஒன்றே ஒன்றுதான். கடலில், கடற்கரையில் தன் உடல் கிடைக்கக் கூடாதென்பதுதான் அது!

## 2

உயர்ந்து எழுந்த அலை, கமலாவை இப்படியும் அப்படியும் சொருகி இழுத்துச் சென்றது. எங்கு செல்

கிறோம். நமக்கு என்ன ஆயிற்று என்று தெரியாமல், மூச்சில் நீர் முட்டத் தவித்தாள். ஒரு விநாடி நேரத் துக்குள் அவள் கண் முன்பு, அவள் வாழ்வின் நிகழ்ச்சிகள் எல்லாம் திரைப்படம் போல் வரிசையாகச் சென்றன. கடற்கரையிலே புயல்; அதற்கு முன்பு அவள் சீராளனிடம் லீவ் லெட்டரையும், செயினையும் கொடுத்தது; நாத னுடன் பழகிய நாட்கள்; அப்போது அவள் அனுபவித்த இன்பம்; சேவாசதனத்தில் அனாதைப் பெண்ணாக வாழ்ந்த சீலமான நாட்கள்; பாவாடை அணிந்திருந்த பருவத்து நிகழ்ச்சிகள். இப்படி ஒவ்வொரு நிகழ்ச்சியும் பின் நோக்கி வேகமாகவும் தெளிவாகவும் சென்று கொண்டிருந்தன. ஒரு விநாடி விடாது அவளது கடந்த காலம் பூராவுமே மிக மிகத் தெளிவாக மனத்திரையில் தோன்றின. அவள் கண்ட முடிவுக் காட்சி, சிறு குழந்தை யாக தாயின் மடியில் படுத்து, அவள் வீறிட்டலறிக் கொண்டிருந்த காட்சி. அந்தக் காட்சியில், தன்னைக் குனிந்து கண்ணீரோடு பார்க்கும் தாயின் முகம் தெரிந்தது. தாய், கண்ணீரோடும் எல்லை கடந்த சோகத்தோடும் தன்னைப் பார்ப்பது தெரிந்தது. பாவத் தில் பிறந்துவிட்ட சிசுவைப் பரிவோடு பார்க்கிறாளா என்று நினைத்தாள் கமலா. அது கடந்த காலத்தில் நிகழ்ந்த காட்சியல்லவா? மிகவும் நீண்ட காலத்துக்கு முன் நிகழ்ந்தது அல்லவா? வாழ்க்கையின் ஆரம்பத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி அல்லவா? என்ன இது! நிகழ்காலமும் இறந்த காலமும் இப்படித் தாறுமாறாகப் பின்னிக் கொண்டிருக்கின்றனவே என்று கமலா நினைத்தாள்.

அதே வினாடியில் டாக்டர் சத்யன் என்ற மனோ தத்துவ மேதை, ஆஸ்பத்திரியில் ஒருநாள் பிரசங்கம் செய்தபோது கூறிய வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன.

''மரணத்தின் முன்பு மனிதனுக்கு ஒரே விநாடியில் அவன் வாழ்வு பூராவும் படமாக ஓடும். ஆத்மா ஆண்டு

அனுபவித்த நிகழ்ச்சிகளையெல்லாம் பரிசீலித்து, அதன் சாரத்தை ஞாபகப்படுத்தித் தன்னோடு எடுத்துச் செல்கிறது போலும். அந்த ஒரு விநாடியில் மனிதன் வாழ்ந்த எண்பது ஆண்டு வாழ்க்கையும் அவன் மறுபடி வாழ்கிறான்.

டாக்டர் சத்யன் மரணத்தின் போது மனிதனின் மனநிலையை விளக்கியது ஞாபகத்துக்கு வந்தது. நாம் மடியப்போகிறோம் என்று அதிர்ச்சியோடு நினைத்தாள் கமலா.

அடுத்த செகண்டில் 'சோ' என்ற பேரிரைச்சலுடன் அவள் தூக்கி எறியப்படுவதை உணர்ந்தாள். அவள் உடல் மணலில் சரிந்தது. அவள் மூக்கு வழியே கடல்நீர் வழிந்தது. கண்களைத் திறந்தாள். இருண்ட வானம் தெரிந்தது. உடனே அலை மறுபடியும் அவளை தாண்டிச் சென்றது. அவள் உடல் இரண்டடி மணலில் கடல் நோக்கி இழுக்கப்படுவதை உணர்ந்தாள். மறுபடியும் வானம் தெரிந்தது. உடனே அவள் மனதில் தற்காப்பு உணர்ச்சிதான் எழுந்தது. அடுத்த பேரலை வருவதற்குள் நாம் இந்த இடத்தை விட்டு நகர்ந்துவிட வேண்டுமென்ற பயம் பிடித்துக் கொண்டது.

முயற்சித்து தள்ளாடியபடி நடந்தாள். மறுபடியும் 'பொத்'தென்று தரையில் விழுந்தாள். இப்போது வந்த அலை', அவள் கால்களை மட்டும் கழுவிச் சென்றது. தன் தலைக்கு ஒரு அடி தூரத்தில் தூக்க மாத்திரை பாட்டில் கிடப்பதைப் பார்த்தாள். அவளுக்குச் சிரிப்பாக வந்தது. தூக்க மாத்திரை சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்ள வந்தவளைக் கடலும் விழுங்கவில்லை. அந்தத் தூக்க மாத்திரைகளைக்கூட விழுங்காமல் விட்டு விட்டதை நினைத்துச் சிரித்தாள்.

உடனே நகர்ந்து அந்தப் பாட்டிலை எடுத்துக் கொண்டாள். மெள்ள எழுந்தாள். ஓலமிடும் காற்று வெடவெடவென்று அவள் ஈரப்புடவை மீது வீசியது.

மெள்ள நடக்க ஆரம்பித்தாள். அவள் குடியிருக்கும் வீட்டில் போய்தான் மடிய வேண்டுமென்று சற்றுமுன் தீர்மானித்தது அவள் ஞாபகத்துக்கு வந்தது. அதனால் தான் கடவுள் தூக்க மாத்திரைகளை விட்டு வைத்திருக்கிறார் என்று நினைத்தாள்.

கடற்கரையில் எந்தவித வண்டியோ, வாகனமோ இல்லை. மெள்ள நடந்தாள். ஈரமாகிவிட்ட புடவை பெருஞ்சுமையாக இருந்தது. இன்னும் சில விநாடிகளில் உடல் சுமையே, ஏன் வாழ்க்கைச் சுமையே விலகப் போகிறதே என்று மனத்தைத் திருப்திப்படுத்திக்கொண்டாள். புயலின் வேகம் குறைந்து கொண்டிருந்தது. வழியெங்கும் விழுந்த மரங்கள், சரிந்த கூரை, உடைந்த ஓடுகளாகக் காட்சியளித்தன. யாருமே சாலையில் இல்லை.

தன் வீடு இருக்கும் சாலையை அடையும்போது, அந்தச் சாலை பூராவும் கும்மிருட்டில் இருந்தது. தெரு விளக்குகள் எரியவில்லை. அந்தச் சாலைக்குப் பெயரே 'டாக்டர் சத்யன் ரோடு'. அந்தத் தெருவிலுள்ள வீடுகளெல்லாம் சமீப காலத்தில் கட்டப்பட்ட வீடுகள். இரண்டு மூன்று லட்ச ரூபாய்களுக்கு நவநாகரிகமாகக் கட்டப்பட்ட வீடுகள். தெருவின் நடுமையத்திலிருக்கும் வீடுதான் டாக்டர் சத்யன் வீடு. மிகப் பெரிய அவரது வீடு அங்கு இருப்பதினால் அந்தத் தெருவுக்கே அவர் பெயர் சூட்டப்பட்டது. டாக்டர் சத்யன் வீட்டுக்கு, அடுத்த வீட்டு அவுட் ஹவுஸில்தான் கமலா தங்கியிருந்தாள். கார் ஷெட்டை அவுட் ஹவுஸாக மாற்றியிருந்தார் கமலா வீட்டுச் சொந்தக்காரர். அரசாங்க உத்தியோகத்தில் இருந்தவர். எப்படியோ லட்ச ரூபாய் சேர்த்து டாக்டர் சத்யன் வீட்டுக்கு அடுத்த மனையை வாங்கி வீடு கட்டி விட்டார். ரிடையர் ஆன பின்பு அந்த வீட்டை மரத் தடுப்புகள் கொண்டு பல பகுதிகளாக

வாடகைக்குக் கொடுத்து, அந்த வாடகையிலேயே அவரும் அவர் மனைவியும் வாழ்ந்து வந்தனர். அந்த வீட்டுக் கார்ஷெட்டில்தான் கமலா வாழ்ந்து வந்தாள்.

கமலா, டாக்டர் சத்யன் வீட்டைக் கடக்கும்போது, அதிசயமாக அன்று அந்த வீட்டில் விளக்குகள் எரிவதைப் பார்த்தாள். டாக்டர் சத்யன் ஊரில் இல்லை. வெளி நாட்டுக்கு ஏதோ மாநாட்டுக்குப் போயிருக்கிறார் என்பது கமலாவுக்குத் தெரியும். இந்தப் புயல் வீசும்போது, அந்த வீட்டு வெளிக்கதவு விரியத் திறந்து கிடந்தது. வீட்டில் அவர் மனைவி சீதா மட்டும்தான் இருந்தாள் என்பதும் தெரியும். சீதாவிடம் அவளுக்கு மதிப்பு, மரியாதை உண்டு. ஒவ்வொரு முறையும் அந்த வீட்டைக் கடக்கும் போது கமலாவுக்கு மனதில் பொறாமை ஏற்படும்.

''சீதா கொடுத்து வைத்தவள்! நல்ல அழகான, இளவயதுக் கணவர்; செல்வந்தர்; உலகப்புகழ் பெற்றவர்; டாக்டர் சத்யனும் சீதாவும் அவர்கள் வாழும் வீட்டுக்கு 'சொர்க்கம்' என்று பெயர் வைத்திருந்தனர். அது பொருத்தம் என்றே கமலாவுக்குத் தோன்றியது. சீதாவின் சிரிப்பொலியும், அதைத் தொடர்ந்து டாக்டர் சத்யனின் சிரிப்பொலியும் கமலா குடியிருக்கும் கார் ஷெட்டுக்குக் கேட்கும்.

கமலா, நர்ஸ் என்ற முறையில் சீதாவின் பிரசவத்தின் போது, அவர்கள் வீட்டில் பணியாற்றினாள். டாக்டர் நாதன்தான் அனுப்பினான். அப்போது அவளுக்கும் சீதாவுக்கும் பரிச்சயம் ஏற்பட்டது. அதற்கு சன்மானமாக டாக்டர் சத்யன் 500 ரூபாய் கொடுத்தார். சீதா, ''என்னங்க, ஆண் குழந்தை பொறந்திருக்கு; 500 ரூபாய் கொடுக்கறீங்க? முழுசா ஆயிரம் கொடுங்க!'' என்று கணவனைக் கண்டித்தாள்.

அப்புறம் கமலா, அடிக்கடி சீதாவின் வீட்டுக்குச் செல்வாள். பணத்தின் செருக்கு சிறிதும் இல்லாத பெண்

சீதா என்பதை உணர்ந்திருந்தாள். சமூகத்தில் டாக்டர் சத்யன் மிகவும் முக்கியமானவராக விளங்கியதால், அவருக்குப் பல கலை விழாக்களிலிருந்து நாடகங்களுக்கும் கச்சேரிகளுக்கும் மரியாதை டிக்கெட்டுகள் வரும். டாக்டர் சத்யனும் சீதாவும் போகாதபோது, அந்த டிக்கெட்டு களைச் சீதா, கமலாவுக்குத்தான் கொடுப்பாள்.

டாக்டர் நாதன் விஷயமாக சீதாவிடம் சொல்லி ஆலோசனை கேட்போமா என்று கமலா நினைத்தாள். ஆனால், டாக்டர் சத்யன் குடும்பம் பரம்பரையாக ஒழுக்கத்துக்கும் செல்வத்துக்கும் பேர்போன குடும்பம். சத்யன் தந்தை ஜட்ஜாக இருந்தவர். அவர் பெரியப்பா மந்திரியாக இருந்தவர். அந்த வீட்டுப் பெண்ணிடம், தன் கேவலமான நடத்தையை எப்படிச் சொல்வது என்று யோசித்தாள்.

மணிப்படி சாப்பிடுவது, தூங்குவது என்று ஒழுங்கு முறை உள்ள டாக்டர் சத்யன் வீட்டில், இன்று இரவு இந்த வேளையில் விளக்கெரிவது ஆச்சரியமாக இருந்தது. ஊருக்கே மின்சாரம் தவறியபோதும், டாக்டர் சத்யன் வீட்டில் விளக்கெரிவதற்காக, தனி ஜெனரேட்டர் வைத் திருந்தார்கள். பொது மின்சாரம் தவறும் போது ஜெனரேட்டர் வேலை செய்யத் தொடங்கும்.

கமலா, வீட்டைக் கடக்கும்போது, ஜெனரேட்டரின் ''ஙொய்'' என்ற சத்தம் கேட்டது. சீதா வசிக்கும் 'சொர்க்கம்' என்ற பிரம்மாண்டமான வீட்டைப் பார்த்து பெருமூச்சு விட்டாள். சிலருக்குத்தான் சொர்க்கம் கிடைக் கிறது என்று நினைத்தபடி, தன் குடியிருப்பை நோக்கி நடந்தாள்.

கார்ஷெட்டைத் திறந்து உள்ளே நுழைந்தாள். மெழுகுவர்த்தியை ஏற்றினாள். அதன் வெளிச்சத்தில்

தன் ஈரப் புடைவையைக் களைந்தாள். தன்னுடைய, உடலின் அழகை ஒரு முறை பார்த்துக் கொண்டாள். பிறகு அளிக்கும் அறைக்குச் சென்று, கடல்நீரின் கசகசப்பு நீங்க ஒரு முறை குளித்தாள்.

பிறகு பெட்டியிலிருந்து, கடந்த தீபாவளி அன்று சீதா அவளுக்குச் சன்மானமாகக் கொடுத்த வெண்பட்டுப் புடைவையை எடுத்து உடுத்திக் கொண்டாள். அழகாகக் குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டாள்.

ஜன்னல் புறமிருக்கும் கட்டிலில் உள்ள படுக்கையைத் தட்டி உதறினாள். தூக்க மாத்திரை பாட்டிலை எடுத்தாள். அதிலிருந்து மாத்திரைகளைக் கையில் எடுத்துக் கொண்டாள். ஒரு கண்ணாடி கிளாஸில் தண்ணீர் எடுத்துக் கொண்டாள். தூக்க மாத்திரைகளுடன் படுக்கையில் போய் உட்கார்ந்தாள்.

எரியும் நீண்ட மெழுகுவர்த்தியைப் பார்த்தாள். 'நீ எரிந்து முடிவதற்குள் என் வாழ்வு முடிந்துவிடும்!' என்று நினைத்தபடி மாத்திரைகளை எடுத்தாள், விழுங்க. அதே வினாடி அடுத்த வீட்டில் வீறிட்டலறும் சத்தம் கேட்டது, குரல் சீதாவின் குரல் போல இருந்தது. கமலா தன்னையும் மறந்தபடி கார்ஷெட்டை விட்டு வெளியே வந்தாள்.

டாக்டர் சத்யனின் வீடு நோக்கி நடந்தாள் கமலா நடந்து கொண்டிருக்கும்போதே, துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது. கமலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்போது இருந்த காற்றின் இரைச்சலில் துப்பாக்கி சத்தமோ, ஒரு பெண் வீறிட்டலறும் சத்தமோ யாருக்கும் கேட்கவில்லை போலும். காற்றின் வேகத்தில் உயரத்திலிருந்து விழுந்த ஏதாவது தகடு அல்லது பலகை ஏற்படுத்திய சத்தத்தை நாம் துப்பாக்கிச் சத்தம் என்று எண்ணி விட்டோமோ என்று கமலா கூட சந்தேகித்தாள். வீறிட்டு அலறும்

பெண் குரல், பலகை விழுவதால் ஏற்பட முடியாதே என்று நினைத்து மறுபடியும் தொடர்ந்து நடந்தாள்.

'சொர்க்கம்' என்ற வீட்டின் வெளிப்புறக் கதவு திறந்து கிடந்தது. சீதாவின் மாடி அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஜன்னல் கதவுகள் படபட வென்று காற்றில் அடித்துக் கொண்டிருந்தன. கமலா, மெள்ள அடி எடுத்து வைத்து வீட்டினுள் நுழைந்தாள். எதிரே தெரிந்த மாடிப் படிக்கட்டின் வழியே சீதா விரிந்த தலையோடு கிழிந்த ஜாக்கெட்டோடு தடதடவென்று இறங்கி ஓடி வந்தாள். நல்ல வேளை! சீதாவுக்கு ஒரு ஆபத்துமில்லை என்று கமலா, திருப்தி அடைந்தாள். முதலில் சீதா, கமலாவைப் பார்க்கவில்லை. கண்களி ருந்தும் ஒரு குருடிபோல் வெளியே ஓடினாள். போர்ட்டி கோவுக்கு வந்ததும், திகைத்து நின்றாள். கமலாவுக்கு ஒன்றும் புரியவில்லை. இக்கட்டான சமயத்தில் அழை க்காமல் அந்த வீட்டுக்குள் நுழைந்து விட்டோமே என்று பயந்தாள். சீதா போர்டிகோவிலிருந்து மறுபடியும் ஹாலுக்குள் நுழைந்தாள். அப்போது கமலா அங்கு நிற் பதைப் பார்த்தாள். உடனே கலவரம் அடைந்தாள்.

''கமலா நீயா! எப்போ வந்தே?'' என்று சொல்லி விட்டு நிறுத்தினாள்.

கமலா அமைதியாக, ''நீ வீறிட்டலறியபோது வந்தேன். துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டு வந்தேன்'' என்று பதில் சொன்னாள்.

சீதாவின் கண்கள் சுழன்றன. முகத்தில் பீதியும் அசட்டுத்தனமும் கலந்து நின்றன.

''அப்படியா!...அப்படியா! உனக்குக் கேட்ட வெடிச் சத்தம் வேலைக்காரர்கள் காதில் விழவில்லையா? யாரும் எழுந்திருக்கவில்லையே!'' என்றாள்.

கமலா, ''வீசும் புயல் காற்றின் திசை என் வீட்டுப் பக்கம் இருப்பதால், ஒருவேளை எனக்குச் சத்தம் கேட்டி ருக்கலாம். வேலைக்காரர் விடுதி, வீட்டின் வலது பக்கம்

அல்லவா! உன்னுடைய அறை, என் ஷெட்டுக்கு அருகில் இருக்கிறதனாலும் எனக்குக் கேட்டிருக்கலாம்'' என்று சொன்னாள்.

சீதா, தனக்குத் தானே சிந்தித்தபடி ''இருக்கலாம், அப்படியும் இருக்கலாம்'' என்று எங்கேயோ பார்த்தபடி சொன்னாள். அடுத்த வினாடி, அறையில் மாட்டப் பட்டிருக்கும் கணவனின் படத்தைப் பார்த்ததும் 'ஓ' வென்று அழ ஆரம்பித்தாள்.

கமலா, அவளை நெருங்கி, ''சீதா! சொர்க்கத்தில் வாழும் நீ கூட அழுகிறாயே! என்ன நடந்தது சீதா?'' என்று கேட்டாள்.

சீதா பதில் சொல்லவில்லை. ''இந்த வீட்டின் பெயரை இன்று முதல் 'நரகம்' என்று மாற்றி எழுத வேண்டும், கமலா!'' என்று சொல்லி விட்டு மறுபடியும் அழுதாள்.

கமலா, ''என்ன நடந்தது? சொல், சீதா!'' என்று கேட்டாள். உடனே சீதா, கமலாவை மாடிக்கு வரும்படி சைகை செய்தாள். இருவரும் மாடிக்குச் சென்றனர்.

மாடியில் சீதாவின் படுக்கை அறையில் நுழைந்தனர். சீதா முகத்தைத் திருப்பிக்கொண்டு, ஒரு மூலையை நோக்கி கையைக் காட்டினாள். மூலையில், சூட் பேண்ட் அணிந்த ஒருவன் மயங்கிக் கீழே கிடந்தான். அவன் கழுத்தின் பின்புறத்திலிருந்து ரத்தம் வழிந்தோடியது. அவன் அசைவற்றுப் பிணம் போல் கிடந்தான்!

## 3

கமலாவுக்கு, விழுந்து கிடக்கும் ஆளின் தோற்றம், அவள் அதுவரை பார்த்தறியாத தோற்றம். அவன் முகம் இது வரையில் அவள் பார்த்ததாக இல்லை.

உண்மையிலேயே தான் இதுவரை பார்க்கவில்லையா தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள். அந்த முகம் பார்த்த முகமாகவும் இருந்தது. எங்கு பார்த்தோம்? ஆம், இப்போது தான் அவளுக்கு ஞாபகம் வந்தது. அவள் இந்த மனிதனை ஆஸ்பத்திரி வராண்டாவில் பார்த்திருக்கிறாள். டாக்டர் நாதனின் அறைக்கு வெளியே பார்த்திருக்கிறாள். தன் வாழ்வைப் பாழாக்கிய நாதனுக்கும் இவனுக்கும் எந்த விதமான தொடர்பு இருக்கமுடியும்?

உயர்ந்த நாசி, அழுத்தமான கீழ் உதடுகள், எதையும் துணிந்து செய்வான் என்பதை எடுத்துக் காட்டின. உதடு களில் இருந்த ஒரு மிருக வெறி, கமலாவின் மனதில் டாக்டர் நாதனின் மிருக வேட்கையை ஞாபகப்படுத்தின. விழுந்து கிடப்பவன் உடல் கரடு முரடாக, வைரம் பாய்ந்து இருந்தது. அவன் வாழ்க்கையில் வெறும் தென்றலை மட்டும் தீண்டி மென்மையாக வளர்ந்தவ னல்ல. டாக்டர் சத்யனின் பூப்போன்ற கண்யம் அவன் முகத்திலோ உடலிலோ இல்லை. கீழ்த்தர உணர்ச்சிகள், ஆசைகள் நிறைந்தவன்! உயர்ந்த ரக ஆடைகள் அணிந் திருந்தான். ஆனால் அவன் ஒரு பொறுக்கியாக இருப் பானோ என்று கூட எண்ணத் தோன்றியது. நீக்ரோக் களின் சுருட்டை முடிபோல் இருந்தது அவன் தலைமுடி. மொத்தத்தில் விழுந்து கிடந்தவன் அந்த வீட்டில் உள்ள வர்கள் யாருடனும் தொடர்பு வைத்துக் கொள்ளத் தகுதியற்றவனாகவே தெரிந்தான்.

''இது யார் சீதா?'' என்று கேட்டாள் கமலா. கமலா வின் கேள்விக்குப் பதில் அளிக்காமல், ''இவனை முதலில் அப்புறப்படுத்த வேண்டும்!'' என்றாள் சீதா. கமலாவுக் கும் சீதா சொல்வது சரியென்றுபட்டது.

''நீ, அவன் தலைப்புறத்தைப் பிடித்துக் கொள். நான் அவன் கால் புறத்தைப் பிடித்துக் கொள்கிறேன்.

இருவருமாகத் தூக்கி தெருவில் போட்டு விடுவோம்'' என்றாள் படபடப்புடன் கமலா.

''வேண்டாம்! இந்தத் தெருவில் போடக் கூடாது! எங்காவது தூரமாகத் தூக்கிச் சென்று போட்டு விடுவோம்'' என்றாள் சீதா.

''அதற்குக் காரில் அல்லவா எடுத்துச் செல்ல வேண்டும். டிரைவரை எழுப்பி, அவனுக்கும் விஷயத்தை தெரிவிக்கப் போகிறாயா?'' என்று கேட்டாள் கமலா.

''அய்யய்யோ! டிரைவரை எழுப்புவதா? நானே கார் ஓட்டி வருகிறேன்! நல்ல வேளை, என் கணவர் கட்டாயத்தின் பேரில் நான் கார் ஓட்டக் கற்றுக் கொண்டது இப்போது நல்லதாகி விட்டது!'' என்றாள் சீதா. இந்த நிலையில் அவள், கணவனுக்குப் பாராட்டுத் தெரிவிப்பது கமலாவுக்கு சுவைக் குறைவாகத் தோன்றியது!

''நான் சத்தமில்லாமல் காரேஜிலிருந்து காரை எடுத்துக்கொண்டு வருகிறேன், பொறு'' என்று சொல்லி விட்டு சீதா மறுபடியும் கீழே ஓடினாள்.

தனியாக அந்த உடலோடு அங்கு நிற்க, கமலாவுக்குப் பயமாக இருந்தது. அவளும் அறைக்கு வெளியே வந்தாள். ''ஙொய்...'' என்ற ஜெனரேட்டர் சத்தம், மற்ற சத்தங்களை மறைக்க உதவியது. வேலைக்காரர்களுக்குத் தெரியாமல் கார் வெளியே வருவதற்கும் அது உதவும் என்று நினைத்தபடி நின்றாள்.

''இம்மாதிரியான மனிதன், இந்த இரவில் தனிமையில் சீதாவைச் சந்திக்க வேண்டும் என்றால்? அதுவும் அவள் கணவன் இல்லாதபோது...! சீதா குணத்தளவில் எப்படிப்பட்டவள்...?'' என்ற எண்ணம் கமலாவின் மனதில் எழுந்தது.

சில பெரிய இடத்துப் பெண்மணிகள், அழகான இளமையான கணவன் இருந்தும் மிருகத்தனமான, கோணலான வெறி ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்ள

மட்ட ரகமான மனிதர்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று டாக்டர் நாதன் கூறியது ஞாபகம் வந்தது.

ஒரு முறை கமலா டாக்டர் நாதனிடம், சீதாவின் பண்பைப் பற்றி அவள் ஒரு தெய்வம் என்று புகழ்ந்து பேசியபோது டாக்டர் நாதன் அலட்சியமாக சிரித்து விட்டுக் கூறிய வார்த்தைகள் இப்போது ஞாபகத்துக்கு வந்தன. ''சீதா தெய்வமா? லட்சக்கணக்கான ரூபாய்கள், சொத்து, உலகப் புகழ் பெற்ற கணவன் எல்லாம் இருந் தாலும் பெண் ஒரு எரிமலை. கமலா, அவள் உள்ளம் ஒரு கோடவுன்! அதில் ஆவி வீசி குமுறிப் பொங்கும் உஷ்ணமான ஆசைகள் மலிந்து கிடக்கும். அவள் மனதில் இருக்கும் மூடியைத் திறக்கத் தெரிந்தவன் திறந்து விட்டால், அவள் விபரீத ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ளத் துடிப்பாள். தெருவில் திரிவாள். அந்த மூடி திறக்கப்படாத வரையில், ஆசைகளின் ஆவி வெளி வராது. எல்லாப் பெண்களும் கற்பரசிகள்தான்! தெய்வம் தான்!'' என்று எகத்தாளமாகப் பெண் இனத்தைப் பற்றி கூறிய வார்த்தைகளும் ஞாபகத்துக்கு வந்தன. ஒரு வேளை அவள் மனதின் மூடியைத் திறந்து அவளை மிருக மாக்கிய நாதன்போல், சீதாவின் கீழ்த்தரமான மிருகப் பகுதிக்கு உயிர் கொடுத்தவன் இந்த மனிதனாக இருக்குமோ என்று நினைத்தாள். ஒரு பெண்ணின் உள்ளத்திலுள்ள பேயுணர்ச்சிகளைக் கிளப்பி, அவளைத் திருப்திபடுத்தும் ஆணிடம் அவள் வெறியோடு அணைக்க லாம். ஆனால் ஆசை தணிந்ததும், அவளுக்குத் திருப்தி அளித்தவனையே அவள் வெறுப்பாள். ஆணவம் உள்ள வர்கள் ஏழ்மை நிலையில் அவர்களுக்குப் பண உதவி செய்பவர்களையே வெறுப்பதுபோல்! திடீரென்று கமலா வின் மனதில் சீதாவைப் பற்றிய மதிப்பு மரியாதை யெல்லாம் குறைந்தன. சீதாவும் என்னைப்போல் தானோ? என்று நினைத்தாள் கமலா?

காரைச் சத்தமில்லாமல் கொண்டு வந்து போர்டி

கோவில் நிறுத்திவிட்டு சீதா மறுபடியும் மாடிக்கு வந்தாள். அப்போதுதான் சீதாவின் ஆடை குலைந் திருப்பதையும் கமலா கவனித்தவள்.

சீதாவின் நைலான் ப்ளவுஸ் கிழிந்து அதற்குள்ளி ருந்து அவளுடைய பொன்னிற மார்பு தெரிவதைக் கவனித்தாள். வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது. அறைக்குள் ஓடினாள். விழுந்து கிடப்பவன் அருகில் பழைய தோல் பையையும், சிதறிக் கிடக்கும் சில காகிதங் களையும் எடுத்து அவசர அவசரமாகத் தோல் பையில் திணித்தாள். உடனே தோல் பையை எடுத்து எதிரே உள்ளே காட்ரேஜ் இரும்பு அலமாரியில் வைத்துப் பூட்டினாள்.

அதை அறையின் வெளிப்புறமிருந்து கமலா கவனித் துக்கொண்டிருந்தாள். இந்த ஒரு செய்கை, சீதாவை குற்றவாளி என்று காட்டியது. அந்தத் தோல் பையில் இருந்தது என்னவென்று சிந்தித்தாள்.

சீதா, ''கமலா! நீ தலைப்பக்கம் பிடி, நான் கால் பக்கம் தூக்குகிறேன்'' என்றாள். சீதா அந்த உடலின் முகப் பகுதியைப் பார்க்கவே பயப்படுகிறாள் என்பது தெளிவாகத் தெரிந்தது. இருவரும் உடலைத் தூக்கிக் காரின் பின்புறம் போட்டனர்.

கமலா ஓடிப்போய், வீட்டு மெயினை அணைத்தாள். சீதா, காரின் டிரைவர் ஸீட்டில் அமர்ந்துகொண்டாள். காரை ஸ்டார்ட் செய்து, மெள்ளமாக ஓட்டினாள். கார் வீட்டைவிட்டு வெளியே வரும்போது யாரும் பார்க்க வில்லை என்ற விஷயம் நிம்மதியைக் கொடுத்தது. இருவரும் பேசாமல் சென்றனர்.

கார், கடற்கரையோரமாகச் சென்றது. இப்போது புயல் குறைந்திருந்தது. கடல் இரைச்சல் மட்டும் கேட்டது.

''சற்று முன் உயிரைப் போக்கிக் கொள்ள திட்ட மிட்ட நான், இப்போது ஒரு கொலையின் துணைக்

குற்றவாளியாக இருக்கிறேன்'' என்று கமலா நினைக்கவும் அவளுக்குச் சிரிப்பாக வந்தது.

காரைத் திருவல்லிக்கேணி வழியாக சீதா ஓட்டினாள். நல்ல வேளை, புயல் காரணமாக மின்சாரம் தடைப்பட்டு எங்கும் இருள் நிலவியது. இருளே ஒரு துணைபோல் அவர்களுக்கு ஆறுதல் அளித்தது.

கார், சிந்தாதிரிப்பேட்டை அருகில் வந்ததும், சீதா காரை நிறுத்தினாள். அந்த இடம் இருளில் வெறிச் சென்று கிடந்தது. ஆள் நடமாட்டமே இல்லை. இடம் பூராவும் சகதியும் நீருமாக இருந்தது. சிறு தூற்றல் பெய்து கொண்டிருந்தது.

''சீக்கிரம்! சீதா, உடலை எடுத்து இங்கேயே போட்டுட்டுப் போயிடலாம்'' என்றாள் கமலா.

சீதா, கார் பின் சீட்டில் கிடக்கும் உருவத்தை இரக்கத்தோடு பார்த்தாள். ''நடுரோட்டிலே போட வேண்டாம். அந்தப் பெட்டிக் கடைக்கு அடியிலே போட்டால் நனையாது!'' என்றாள். கமலாவுக்கு, அவள் இப்படி அக்கறைப்படுவதன் அர்த்தம் விளங்கவில்லை.

இருவரும் மறுபடியும் உடலைத் தூக்கினர். பெட்டிக் கடை மரப்பலகை மீது போட்டனர். கார் தலை விளக்குகளின் வெளிச்சம் பெட்டிக்கடை மீது விழுந்தது.

''கார் சீட்டிலே முன்னேற்பாடா சாக்கு விரிச்சு வச்சிருந்தியா சீதா?'' என்று கேட்டாள். ''இல்லை. காரேஜிலிருந்து எடுத்துக்கிட்டு வந்தேன். கார் சீட்டிலே ரத்தக்கறை படக்கூடாது பாரு!'' என்றாள் சீதா.

இருவரும் சாக்கில் கிடந்த உருவத்தைச் சாக்கோடு பெட்டிக் கடையில் விட்டு விட்டுக் காருக்குத் திரும்பும் போது, பூட்டியிருந்த அந்தப் பெட்டிக் கடையின் கதவுகளின் மேல் தாரினால் கறுப்பாக எழுதியிருந்த வார்த்தைகளை சீதா கவனித்தாள். அவள் உடல் சிலிர்த்தது. அந்தப் பெட்டிக் கடைக் கதவுகளில் எழுதியிருந்த 'செல்வ

ராஜ் சோடா ஸ்டால்' என்ற விலாசம்தான் சீதாவைத் திடுக்கிடச் செய்தது! சீதா சமாளித்துக் கொண்டு காருக்கு வந்தாள்.

"என்ன சீதா, அந்தப் பேரைப் பார்த்து நடுங்கிறே? அந்தக் கடைக்காரனை உனக்குத் தெரியுமா?" என்றாள் கமலா.

"எந்தப் பேரைச் சொல்றே? நான் எதையும் பார்த்து நடுங்கலியே! வா, காருக்குப் போகலாம்" என்று மழுப்பிப் பேசியபடி சீதா காரில் வந்து ஏறிக்கொண்டாள். காரை ரிவர்ஸ் எடுத்துத் திருப்பும்போது, மறுபடி ஒருமுறை காரின் தலை விளக்குகளின் ஒலி அந்த "செல்வராஜ்" என்ற பெயர் மீதும், அதனடியில் கிடந்த உருவத்தின் மீதும் விழுந்து பிரகாசப்படுத்தியது.

இருவரும் பேசாமல் வீட்டுக்குத் திரும்பினர். சீதா சத்தமில்லாமல் காரை மறுபடியும் கொண்டுபோய் காரேஜில் விட்டுவிட்டு வந்தாள். இருவரும் மௌன மாகவே வீட்டினுட்புறம் சென்றனர்.

சீதா, வியர்த்திருந்த முகத்தைக் கர்சீப்பால் துடைத்துக் கொண்டாள். அருகிலுள்ள ஐஸ் பெட்டியைத் திறந்து, அதிலிருந்து இரண்டு கோக்கோ-கோலா பாட்டில்களை உடைத்து ஒன்றைக் கமலாவிடம் நீட்டினாள். மற்ற பாட்டிலிலுள்ள குளிர்பானத்தை சீதாவே குடித்தாள்.

கமலா ஒன்றும் பேசாமல் சீதாவைக் கவனித்தபடி இருந்தாள்.

சீதா அசடுவழியச் சிரித்தபடி, "கமலா, நீ செய்த உதவிக்கு நன்றி. நான் என் வாழ்நாளிலே உன்னை மறக்கவே முடியாது. இன்றிரவு நடந்த விஷயத்தை நீ யாரிடமும் சொல்லாதே கமலா!" என்றாள்.

கமலா சாவதானமாக, "நாம் இருவரும் அப்புறப் படுத்தினோமே அவன் யார் சீதா?" என்று கேட்டாள்.

''அவனா? எனக்குத் தெரியாதே! அவன் திடீரென்று வந்தான். என்கிட்டே தவறாக நடந்து கொண்டான். நான் கணவருடைய ரிவால்வரை எடுத்து மிரட்டினேன். அவன் சட்டென்று பாய்ந்து ரிவால்வாரைப் பிடுங்கப் பார்த்தான். அப்போது அது வெடிச்சுடுத்து, அவ்வளவு தான் கமலா!'' உளறினாள்.

சிறு குழந்தைபோல் தன்னிடம் விஷயத்தை மூடுகிறாள் என்பதை உணர்ந்து கொண்டாள் கமலா.

''சீதா, உனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு நினைச்சேன். ஆனா, நீ நல்லா சமாளிக்கிறே. என்கிட்டச் சமாளிக்கிற மாதிரி ஒரு போலீஸ் அதிகாரியிடம் சமாளிச்சா அவர் கண்டு கொள்வார். அந்த ரிவால் வார்லே ஒரு குண்டு காலியாக இருக்கும். அதைச் சரிக் கட்டியாகணும். அந்த அறையில் இரத்தக் கறைகள் இருக்கும், அதைக் கழுவணும். கார்லே எங்காவது சாக்கையும் தாண்டிக் கறைகள் சீட்லே இருந்தா, அதைத் துடைச்சாகணும். உடலை அப்புறப்படுத்திட்டா எல்லாக் கவலையும் தீர்ந்து போச்சுன்னு நினைச்சு எங்கிட்டே விஷயத்தை மறைக்காதே'' என்றாள்.

உடனே சீதாவைப் பீதி பற்றிக் கொண்டது. ஓடி வந்து கமலாவைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

''எனக்கு ஒன்றும் தெரியலை கமலா, நான் உன் கிட்டே எப்படிச் சொல்வேன்!'' என்றாள். கமலாவுக்கு அவள் நிலையைப் பார்த்து இரக்கமே ஏற்பட்டது.

''சீதா! எப்போ அந்த உடலோடு நான் கார்லே ஏறினேனோ அப்பவே நான் உன்னோடு சேர்ந்து ஒரு துணைக் குற்றவாளியாகி விட்டேன். இப்போ அந்தக் குற்றத்தின் சுமையை இரண்டு பேரும்தான் தாங்கியா கணும். இந்த நிலையில் நீ ஒண்ணையும் மறைக்காமல் தெளிவாகச் சொல்ல வேண்டியது அவசியம் இல்லையா?'' என்று கமலா கேட்டாள்.

சீதா, கமலாவை ஏறிட்டுப் பார்த்தாள்.

''கமலா! இதுநாள் வரையிலே என்கிட்டே நீ ரொம்ப மரியாதையா பயந்து பேசுவே, இன்னிக்கு 'நீ' போட்டுப் பேசறியே! என் நிலை அப்படி ஆயிடுத்து! ஒருத்தனுடைய மிரட்டலிலிருந்து தப்பப்போய் இன்னொருத்தியின் மிரட்டலுக்குப் பயந்து சாகும் நிலைக்கு வந்துட்டேன்'' என்று அழுதாள்.

''இறந்தவன் உன்னை மிரட்ட வந்தானா?'' என்று கமலா கேட்டதும்தான் சீதாவுக்கு அவள் மறுபடியும் ஏதோ சொல்லக் கூடாத ஒன்றைச் சொல்லி விட்டாள் என்பது புரிந்தது. குழந்தைபோல் திகைத்தாள். அசடு வழிய, ''என்னை மிரட்ட வந்தான்னா நான் சொன்னேன்?'' என்று சொல்லி விழித்தாள்.

உடனே கமலா, ''பாரு சீதா, எங்கிட்டேயே இப்படி உண்மையைத் தானா உளறும் நீ, போலீஸிடம் விசாரணையின்போது என்ன செய்வாய்?'' என்று கேட்டாள்.

''ஆமாம் கமலா. என் வாழ்வு முடிந்துவிட்டது. இனிமேல் ஜெயில்தான்!'' என்றாள்.

உடனே கமலா, அவளை அணைத்தபடி ''கவலைப் படாதே சீதா! அவனைப் பற்றி எனக்கு மட்டும் தெரிஞ்சாப் போதும். நான் எல்லாத்தையும் பார்த்துக் கறேன். நீ சும்மா எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு இருந்துடு. துப்பாக்கிக் குண்டு வெடிக்கிறப்போ, நான் தூக்க மாத்திரைகளை விழுங்கிச் சாகும் நிலையிலே இருந்தேன். சத்தம் கேட்டு ஓடிவந்து உன்னைச் சந்திச் சேன். நான் ஏற்கனவே சாகத் துணிந்தவள்! அப்படி விஷயம் என்கொயரி வரையிலும் வந்தா, நீ ஒண்ணும் கவலைப்படாதே! உன்மேலே சந்தேகம் வராதபடி நான் தடுத்துடறேன்!''

''அதெப்படி முடியும் கமலா?''

''சந்தேகத்தை என் மேலேயே நான் திருப்பி விட்டுட்டா? நான் உன் மாதிரி இல்லே சீதா! நான் மடிந்தாலும் சொர்க்கத்தை இழக்கப் போறதில்லை. நான் இழக்கப் போறது ஒரு நரகம் சீதா! உனக்காவாவது பிரயோஜனப்பட்டு என் வாழ்வு முடிந்தால், அதுவும் நல்லதுதானே! அப்பனில்லாத மகள் நான். அப்ப னில்லாத சிசு ஒன்று என் வயிற்றிலே வளருது. இந்த நிலையிலே உனக்காக என் வாழ்வைத் துறந்தால், நீயாவது என்னை மறக்காமல் இருப்பே, இல்லையா?'' என்றாள்.

சீதா, ''தங்கச்சி!'' என்று சொல்லி அவளைக் கட்டிக் கொண்டாள். ''உங்கிட்டே போய் மூடிவச்சேனே! நான் ஒரு முட்டாள் கமலா! நான் எல்லாத்தையும் விளக்கமாகச் சொல்றேன்'' என்று சொல்லிவிட்டு, ஒன்றும் சொல்லாமல் நின்றாள். அவள் பார்வை வீட்டின் போர்டிகோவில் நுழையும் உருவத்தில் நின்றது.

''யாரு சீதா?'' என்று கமலா கேட்டாள். சீதா பேச வில்லை. அதே சமயத்தில் கமலாவும் போர்டிகோ நோக்கித் திரும்பினாள். உள்ளே நுழைந்த உருவத்தைப் பார்த்ததும் கமலா அதிர்ச்சியடைந்தாள்!

## 4

புயல் இரவில் ஊரே அடங்கிக் கிடக்கும் போது வீட்டின் போர்டிகோவில் அமைதியாக அடிமேல் அடி வைத்துத் திருடன் போல் நுழையும் உருவத்தைப் பார்த் ததும் சீதா பீதியே அடைந்தாள். கீழே விழுந்து கிடந்த உடலை அப்புறப்படுத்திவிட்டோம், சென்னை நகரத் தின் வேறு பகுதிக்குக் காரில் எடுத்துச் சென்று, தனக்கும் அந்த உடலுக்கும் எந்தவித சம்பந்தமும் யாரும் கண்டு

பிடிக்க முடியாதபடி செய்துவிட்டோம் என்று சிறு அமைதியைத் தொடுமுன்பே தன்னுடைய ரகஸ்யத்தைக் கமலாவோடு பகிர்ந்து கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இரண்டு பேருக்குத் தெரிந்தாலே ஒரு ரகஸ்யம், ரகஸ்யமல்ல என்று சொல்வது வழக்கம். அதில் பங்கு கேட்க வரும் இந்த மூன்றாவது நபர் யாராயிருக்கும் என்று யோசித்தபடி வைத்த கண் வாங்காமல் அந்த உருவத்தைப் பார்த்தபடி நின்றாள். போர்டிகோவில் நுழைந்த உருவம் தயங்கித் தயங்கித்தான் நடந்து வந்தது. கமலாவுக்கு அந்த உருவத்தைப் பார்த்ததும் அதிர்ச்சியே ஏற்பட்டது. ஏனென்றால் தலையைச் சுற்றிய மப்ளருக்குள்ளிருந்து வெளியே தோற்றம் கொடுத்த அந்த முகம் அவளுக்கு மிகவும் பரிச்சயமான முகம். யாரை அந்த நிமிஷத்தில் கமலா பார்க்க விரும்பவில்லையோ அவனை சீதாவின் வீட்டுப் போர்டிகோவில் கண்டாள்.

சீராளன் மெதுவாக வீட்டின் முன் வராண்டாவுக்கு போர்டிகோவிலிருந்து நுழைந்து கொண்டிருந்தான்! அவன் நடையில் ஒரு தயக்கம் இருந்தது. சீராளனை யார் என்று தெரியாத சீதாவுக்கு ஒரே திகிலாக இருந்தது. அன்று இரவு நடவடிக்கைகளில் சீராளனுக்கு எவ்வளவு தெரியும் என்று புரியாமல் விழித்தாள் கமலா. லீவ் லெட்டர் என்று ஒரு கடிதத்தை மட்டும் ஆஸ்பத்திரியின் வெளிப்புறம் அவனிடம் கொடுத்தது அவளுக்கு ஞாபகம் வந்தது. அந்தக் கடிதத்தில், கடற்கரையில் தூக்க மாத்திரைகளை விழுங்கி அவள் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகவும், தன்னுடைய தற்கொலைக்கு யாரும் காரணமல்ல என்று மட்டும் எழுதியிருந்தாள். அந்தக் கடிதத்தை உடனே பிரித்துப் படித்துவிட்டு தன் வீடு தேடி வந்திருப்பானோ, சீராளன் என்று நினைத்தாள். அந்தக் கடிதத்தை யாரிடமாவது அவன் காட்டியிருப்பானோ என்று பயமும் உடனே

அவள் மனதில் எழுந்தது. கமலாவின் மனதில் எழுந்த பயத்தைப் புரிந்து கொண்டவன்போல் சீராளன் பதில் அளித்தான்.

''கமலா, நீ கடிதம் கொடுத்த போது உன் முகத்தில் இருந்த ஒருவித ஒளி எனக்குப் பயத்தைக் கொடுத்தது. அம் மாதிரி முகத் தோற்றத்தின் அர்த்தம் எனக்குத் தெரியும். உடனே கடிதத்தைப் பிரித்துப் படிப்போமா? என்று நினைத்தேன். அது முறையல்ல என்று தயங்கினேன். அப்புறம் முறையல்லாத சில காரியங்களைச் செய்வதனால்தான் பலன் கிடைக்கிறது என்று நினைத்து, கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்...''

இங்கு சீராளன் பேச்சை நிறுத்தினான். ''ஆனால் கடிதத்தை நான் யாரிடமும் காட்டவில்லை. உடனே பீச்சுக்கு ஓடினேன். பீச்சில் யாரும் இல்லை. பயங்கர மான பேரிரைச்சல் காற்றின் நடுவே நிர்மானுஷ்யமான பீச்சில் உன்னை எங்கு தேடுவது என்று தெரியாமல் தவித்தேன். வெகு நேரம் காத்திருந்தேன். ஒரு வேளை நீ இறந்திருப்பாயோ என்று நினைத்தேன். புயலும் அடங்கியது. நீ நனைந்த ஆடைகளுடன் பீச்ரோடில் நடந்து வருவதைப் பார்த்ததும், உன் முடிவை நீ மாற்றி விட்டாய் என்று புரிந்து கொண்டேன். மகிழ்ச்சியுடன் உன்னைச் சற்றுத் தூரம் தொடர்ந்தேன். இந்தத் தெருவில் நுழைந்தாய். தெருவில் இருள் சூழ்ந்திருந்த போது இந்த வீட்டில் மட்டும் விளக்கு எரிந்து, அதன் ஒளி தெருவில் வீசியது. நீ தெருவில் நின்றபடி இந்த வீட்டைக் கவனித்தாய். அப்போது இந்த வீட்டின் வெளிச்சத்தில் உன் கையிலுள்ள பாட்டிலைக் கவனித் தேன். மறுபடியும் எனக்கு அச்சம் ஏற்பட்டது. கடற் கரையில் சாகத் துணிவு இல்லாமல், வீட்டுக்கு வந்து அதை நிறைவேற்றப் போகிறாயோ என்று பயந்தேன். நீ வீட்டுக்குள் சென்று குளித்துவிட்டு ஆடை மாற்றி கொண்டு வரும் இடை நேரத்தில் நீ மேஜைமீது வைத்

திருந்த தூக்க மாத்திரைகளை எடுத்து, அதற்குப் பதிலாக உன் வீட்டு சமையல் அறையிலிருந்த சர்க்கரைக் கட்டிகளை சிறு துண்டுகளாக வெட்டி தூக்க மாத்திரைக் குப் பதிலாகப் போட்டு விட்டு வந்து மறைந்து கொண் டேன். நீ குளித்துவிட்டு வந்து மாத்திரைகளைக் கையில் எடுத்து விழுங்கப் போகுமுன், இந்த வீட்டில் துப்பாக்கி சத்தம் கேட்டு வெளியே வந்ததைப் பார்த்தேன்'' என்று சொல்லிவிட்டு நிறுத்தினான்.

''சீதா ஆத்திரத்துடன் அப்புறம் நடந்ததையெல்லாம் கூட கவனித்துக் கொண்டுதான் இருந்தீர்களா?'' என்று கேட்டாள்.

''ஏம்மா, என்னமோ இன்று நடந்த எல்லாத்தையும் நான் தூண்டிவிட்ட மாதிரி எரிஞ்சு விழறீங்களே! நான் விரும்பி வேவு பார்க்கல்லே, கமலாவின் வாழ்க்கை முடிஞ்சுடுமோ என்ற பயத்தில் நான் வந்தேன். என்னை யும் அறியாமல் இன்று இரவு வேளையில் நான் ஒரு ஒற்றனாகி விட்டேன். நீங்க இரண்டு பேரும் உடலைத் தூக்கிட்டுப்போய் கார்லே வச்சதைப் பார்க்கும்படி ஆச்சு. உங்க கார் போனவுடன், மாடிக்குப்போய் அந்த ஆள் விழுந்து கிடந்த இடத்திலே இருந்த ரத்தக் கறையைச் சோப்புப் போட்டுக் கழுவினேன், அப்புறம் வேறு யாராவது எழுந்திருக்காங்களான்னு பார்த்தேன். யாரும் எழுந்திருக்கலே. விளக்கை அணைச்சிட்டு மறு படியும் தெருவுக்கு வந்தேன். நீங்க இரண்டு பேரும் திரும்பினீங்க. இனிமேலும் சும்மா இருக்கக்கூடாதுன்னு உள்ளே வந்தேன். அது தப்பா?'' என்று கேட்டான்.

கமலாவுக்கு ஒரு பக்கம் சீராளன் பேசும் பாணியைப் பார்த்துச் சிரிப்பு வந்தது. சீதா ஆத்திரத்துடன், ''என்னமோ விளையாட்டுப்போல பேசறீங்களே! உங்க ளுக்கு என்ன வேணும்? உண்மையைச் சொல்லாமல் இருக்கப் பணம் கேட்கறீங்களா?'' என்றாள் ஆத்திரத் துடன்.

சீராளன் சோகப் புன்னகை செய்தான். ''விஷயம் பெரிசுன்னு புரிஞ்சிக்காமல் நீங்கதான் விளையாட்டா நடந்துக்கறீங்க! கார்லே ரத்தக்கறையில்லாமல் கிளீன் பண்ணியாகணும்மா. அப்புறம், சுட்ட துப்பாக்கியை எங்கிட்டே கொடுங்க. அதுக்கு குண்டு மாத்தியாகணும். போலீஸ் விசாரிக்க ஆரம்பிச்சா என்ன ஆகும்னு நினைக்கிறீங்க. மெட்ராஸ்லே பேப்பர்லே பத்தி பத்தியா உங்க குடும்பத்தைப்பத்தி விஷயம் வரும். உங்களுக்கு உதவி செய்ய வந்தேன். உங்க புருஷன் எப்பேர்பட்டவர்னு தெரியும். அது மட்டுமில்லே, இதிலே கமலாவும் துணை குற்றவாளி மாதிரி ஆயிட்டா. உடலை அப்புறப்படுத்த உதவியிருக்காளே! அதனாலே நானும் இந்த ரகஸ்யத்திலே பங்கெடுத்துக்கத் தீர்மானிச்சுட்டேன்! உங்க புருஷன் உலகப் பிரசித்தி பெற்ற டாக்டர். அந்த ஆஸ்பத்திரியிலே நான் சாதாரண மேல் நர்ஸ்தான்; இருந்தாலும் நான் ஒரு மனுஷன். மாடியிலே என்ன நடந்தது எப்படி குண்டு வெடிச்சது என்கிற விஷயம் எனக்கும் தெரியாது; கமலாவுக்கும் தெரியாது. அதையெல்லாம் வெளிப்படையாச் சொன்னீங்கன்னா நாங்க இரண்டு பேரும் உங்களுக்கு உதவியா இருப்போம். நான காட்டிக் கொடுக்கிறதுன்னா, குண்டு வெடிச்சவுடனேயே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருப்பேன். இரண்டு பர்லாங்குமேலே போலீஸ் ஸ்டேஷன் இருக்கு...'' என்றான்.

கமலாவுக்கே சீராளன் மீது முதன் முறையாக மதிப்பு ஏற்பட்டது. சீராளன் உருவம், அவன் பேசும் முறை ஆஸ்பத்திரியில் அவனுக்கு கோமாளி என்ற பட்டத்தைக் கொடுத்திருந்தன. அவன் இம்மாதிரியான ஒரு சூழ்நிலையில் தெளிவான கருத்துக்களுடன் தைர்யத்துடன உதவியாக இருக்க முடியும் என்று கமலாவால் எண்ண முடியவில்லை. யாருக்கும் அக்கறையில்லாதபோது, இந்தச் சீராளன் மட்டும் ஏன் புயலில் நின்று அவளைத் தேடியிருக்க வேண்டும், வீடு தேடி வந்து தூக்க மாத்திரை

களை மாற்றியிருக்க வேண்டும் என்று நன்றி இரக்கத்தோடு சீராளனைப் பார்த்தாள். நாதன் முகத்தின் மயக்கும் சக்தி சீராளன் முகத்தில் இல்லை. சீராளன் முகம் அழகில்லாத முகம்தான். இருந்த போதிலும் அன்பு நிறைந்த முகம் என்று கமலா நினைத்துக்கொண்டிருக்கும்போதே சீராளன், "கமலா, நான் போய்க் காரில் கறைகள் படிந்திருக்கின்றனவா என்று பார்த்து விட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவன் சென்ற பின் சீதா அப்படியே அயர்ந்து அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்து விட்டாள். சீதாவின் நிலை "இனி எது வேண்டுமானாலும் நிகழட்டும்!" என்று முரட்டுத் துணிவுடன் சொல்லுவது போலிருந்தது. கமலாவும் மன அயர்வினால், கவலையால் அன்று களைத்துப் போனவள்தான். சாவின் மூலைக்கே சென்ற கமலாவுக்கு, 'சீதாவுக்காக வாழ்வோம்' என்று தோன்றியது. தன் வயிற்றில் வாழ ஆரம்பித்திருக்கும் சிசுவையும் மறந்தாள்.

"சீதா, என்னதான் நடந்தது!" என்றாள்.

சீதா, "நான் என் கணவருக்குத் துரோகம் செய்யவில்லை கமலா. ஆனால், திடீரென்று இறந்த காலம் என் நிகழ் காலத்தில் வந்து குறுக்கிட்டது. நான் சமாளிக்கப் பார்த்தேன், முடியவில்லை. கமலா, என் இறந்த காலத்தை, நான் திருநெல்வேலியில் வாழ்ந்த நாட்களைப் பூராவும் மறந்துவிடலாம் என்று நினைத்தேன். அது முடியவில்லை கமலா, முடியவில்லை! திடீரென்று ஒரு வாரத்துக்கு முன்பு என் கடந்த காலம் ரங்கன் உருவத்தில் வந்து என்னைச் சந்தித்தது. அந்தச் சமயத்தில் கணவர் ஊரில் இல்லாமலிருந்ததே நல்லது. இவனை எப்படியாவது புத்தி சொல்லி அனுப்பி விடலாம், கணவருக்கு என் கடந்த கால வாழ்வே தெரிய வேண்டாமென்று நினைத்தேன், கமலா..." என்று சொல்லிவிட்டு நிறுத்தினாள்.

# 5

கமலா, பேசத் தயங்கி உட்கார்ந்திருக்கும் சீதாவைப் பார்த்தாள்.

''சீதா, உனக்குப் பேச இஷ்டமில்லையென்றால், நீ பேச வேண்டாம்! உன் ரகசியம் உன்னோடு இருக்கட்டும். அன்புக் கணவனிடமே நீ சொல்லத் துணியாததை, என்னிடம் நீ கூற வேண்டும் என்று நான் எதிர்பார்க்க வில்லை. அந்தத் துப்பாக்கியை மட்டும் எடுத்துக் கொடு. அதிலிருந்து வெடித்த குண்டுக்குப் பதிலாக, ஒரு குண்டைத் தேடி வைத்தாக வேண்டும். அந்த ரங்கனையும் உன்னையும் சேர்த்து இணைக்கும் சாட்சியம் ஏதாவது இருந்தால் சொல்லு; அதை அழித்தாக வேண்டும்'' என்றாள் கமலா.

''ரங்கன் என்னைப் பார்க்க வந்த விஷயத்தை யாரிடமும் சொல்லவில்லை என்று கூறினான். அது எவ்வளவு உண்மை என்று எனக்குத் தெரியவில்லை. நான் இங்கு வாழ்கிறேனென்ற விஷயமே அவனுக்கு எதேச்சை யாகத்தான் தெரிந்திருக்கிறது. ஆகையால் யாரிடமும் அவன் கூறியிருக்க மாட்டான் என்று நம்புகிறேன்'' என்றாள் சீதா.

''சென்னையில் ரங்கன் எங்கு தங்கியிருந்தான் என்ற தகவல் தெரியுமா? அவனுடைய பந்துக்கள், நண்பர் களிடம் பேச்சுவாக்கில் ஏதாவது கூறியிருந்தால்......?'' என்று கேட்டாள் கமலா.

''அவன் பழைய கதையை யாரிடமும் கூறவில்லை என்று சத்தியம் செய்தான். அவன் குரலில் இருந்த உறுதியிலிருந்து அவன் சொல்லியிருக்கமாட்டான் என்று நம்புகிறேன். அவனோடு ஒரு நாள் தனியாக மஹாபலி புரம் கடற்கரைக்குச் சென்றேன். அங்கு யாரும் என்னை அடையாளம் தெரிந்துகொண்டிருப்பார்கள் என்று

தோன்றவில்லை. கறுப்பு கூலிங்கிளாஸ் அணிந்து, ஸல்வார் கம்மிஸ் அணிந்து பஞ்சாபி உடையில் சென்றேன். பார்ப்பவர்கள் என்னை ஒரு தமிழ் நாட்டுப் பெண் என்று தெரிந்து கொள்ளக்கூடாது என்றே அப்படிச் சென்றேன். என் கணவரின் நண்பர்கள் யாராவது தூரத்திலிருந்து பார்க்க நேர்ந்தால், என்னை சீதா என்று அடையாளம் கண்டுகொள்ள வேண்டாம் என்றே செய்தேன். இந்த ஒரு வாரத்தில் ஒவ்வொரு விநாடியும் நரகமாக நான் கழித்தேன். கமலா! குடியிருக் கும் வீட்டின் பெயர் என்னமோ 'சொர்க்கம்.' ஆனால் அனுபவம் மட்டும் நரகம்!'' என்று சொல்லிவிட்டு முகத்தை மூடிக்கொண்டாள்.

''மஹாபலிபுரத்தில் அவனோடு உன்னை இணைத்து யாரும் பார்க்கவில்லையென்று நிச்சயமாகச் சொல்ல முடியுமா? சீதா, நாளைக்கு இறந்த ரங்கன் படம் தினசரி களில் வரும் அப்போது அதைப் பார்ப்பவர்கள் உன்னை யும் நினைத்துப் பார்த்து, போலீசுக்குத் தகவல் கொடுத்தால் உன் நிலை என்னவாகும்?''

''யாரும் என்னைக் கண்டுகொண்டிருக்க முடியாது. பஞ்சாபி உடை அணிந்திருந்த மாது என்றுதான் அந்த இளநீர் விற்றவன் கூடக் கூறுவான். மேலும் அன்று டூரிஸ்ட் கூட்டம் இல்லை. சினிமாவுக்கு அவனோடு போகும்போதுகூட படம் ஆரம்பித்த பின்புதான் போனேன். படம் முடிவதற்குள் கிளம்பிவிட்டேன்'' என்றாள் சீதா.

''என்ன சீதா, அவனோடு சினிமாவுக்கு வேறு போயிருந்தாயா?'' என்று ஆச்சர்யத்துடன் கமலா கேட்டாள்.

''ரங்கன்தான் ஒவ்வொரு நாளும் அங்கு போகலாம், இங்கு போகலாம் என்று என்னை வற்புறுத்திக் கொண்டிருந்தான். ஓரளவு ஒத்துப்போய் அவனைத்

திருப்தி செய்தால், அவள் மனம் இளகி என்னைவிட்டுப் போய் விடுவான் என்று நினைத்தேன்...'' என்று கூறி விட்டு, சீதா சந்தேகத்துடன் தன்னைக் கவனிக்கும் கமலாவைப் பார்த்தாள்.

''ஓரளவு ஒத்துப்போவது என்றால். எந்த அளவு என்று சந்தேகப்படுகிறாய் அல்லவா? சத்தியமாகச் சொல்கிறேன்; ரங்கன் மனத்தில் ஆசையிருந்த போதிலும் மகாபலிபுரம் சென்ற போதும் சரி, அவன் மறந்து தவறாகக்கூட என் மீது கையை வைக்கவில்லை. இன்று தான் அவன் வரம்பு மீறி என்னைத் தொட்டான்'' என்று கூறினாள்.

கமலா பெருமூச்சு விட்டாள். அப்போது சீராளன் உள்ளே நுழைந்தான்.

''காரைச் சரி செய்து விட்டேன். ஸீட் கவர் மீது சிறிதளவு இரத்தக் கறை இருந்தது. அதைத் துடைத்து விட்டேன். இனி மேல் காரை எந்த எக்ஸ்பர்ட் சோதனை செய்தாலும் ஒன்றும் கண்டுபிடிக்க முடியாது'' என்று பெருமையோடு கூறினான்.

சீதா ஒரு நன்றி வார்த்தைகூடக் கூறாமல் தரையைப் பார்த்தபடி இருந்தாள்.

சீராளன் விஷயத்தைப் புரிந்து கொண்டான். ''மிஸஸ் சத்யன், நீங்கள் கமலாவிடம் கூறவேண்டியதை நான் இருந்து கேட்க வேண்டிய தேவையில்லை. துப்பாக்கியை எடுத்துக் கொடுங்கள். நான் செய்ய வேண்டியதைச் செய்கிறேன்'' என்றான்.

சீதா, மாடிக்குத் தள்ளாடியபடி போய் துப்பாக்கியைக் காட்டினாள். அதைத் தொடவும் அவள் கரங்கள் கூசின. சீராளன் அதை எடுத்துக் கொண்டான். பிறகு மெள்ள நடந்தபடி கீழ் ஹாலுக்கு வந்தான்.

''கமலா, நான் உன் வீட்டில் காத்திருக்கிறேன். நீ பேசி முடிந்தபின் வா'' என்றான்.

பிறகு சீதாவின் பக்கம் திரும்பி, "மிஸஸ் சத்யன், கவலைப்படாதீர்கள்! உங்கள் ரகசியம் என்னிடம் பத்திர மாக இருக்கும். நான் கண்யமானவன்!" என்று கூறி விட்டுப் புறப்பட்டான்.

கமலாவும் எழுந்தாள். "சீதா, நீ போய் ஓய்வெடுத் துக்கொள். காலையில் பேசிக் கொள்வோம்" என்றாள்.

"இந்த வீட்டிலே என்னைத் தனியாகவா விட்டு விட்டுப் போறே கமலா? இந்த இரவு நீ இங்கேயே இரு கமலா! எனக்குப் பயமா இருக்கு. யாரிடமாவது எல்லா வற்றையும் ஒரு முறை சொல்லி அழுதால் பரவாயில்லை என்று தோணுது கமலா" என்று அழாத குறையாகக் கேட்டாள்.

சீராளனும், "கமலா, நீ இன்று சீதாவோடு இரு. நான் உன் அறையில் படுத்துக்கொள்கிறேன்" என்று கூறி விட்டுப் புறப்பட்டான். கமலாவும் சீதாவும் சில விநாடிகளுக்கு மௌனமாக இருந்தனர்.

"சீதா, ரங்கனை நீ முதல் முதல்லே எப்போ சந்திச்சே? எங்கே சந்திச்சே?" என்று கேட்டாள்.

"கமலா, எங்கப்பா திருநெல்வேலியிலே வியாபாரம் செய்திட்டிருந்தார். அவர் திருநெல்வேலியிலே ஒரு சின்ன பாங்குக்குத் தலைவரா இருந்தார். அவருக்கு நான் ஒரே பொண்ணு. அதுவும் ஐந்து வயதிலேயே தாயை இழந்திட்டேன். அப்பா என் மேலே உயிரையே வச்சிருந்தார். "சீதா, நான் கதையிலே வர்ர ஜனகன் மாதிரி இல்லை. அந்த சீதா என் மகளா இருந்து, அவள் காட்டுக்குப் போகும்படி ஆயிருந்தா, அந்தக் கைகேயி யைச் சுட்டிருப்பேன். சும்மா கல் மனசோடு உட்கார்ந் திருக்க மாட்டேன்" என்பார். ஒவ்வொரு சமயம் 'சீதா, நீ எனக்கு ஆசை மகள் மட்டுமில்லேம்மா. என் ஆஸ்திக்குன்னு பிறந்த பிள்ளையும் நீதான்!' என்று சொல்வார். அவர் வைத்துவிட்டுப் போன ஆஸ்தி-ரங்கன்

என்ற பயங்கரத் தொடர்பு. அது இன்று வரை நீடித்து விட்டது கமலா'' என்று மனம் நொந்து கூறினாள் சீதா.

''நான் அப்பாவுக்குப் பிள்ளையும் பெண்ணுமாக இருந்தமையால் என்னைத் தொலைவிலுள்ள திருச்சியில் படிக்க வைத்தார். ஹோலிக்ராஸ் காலேஸ் ஹாஸ்டலில் இருந்து கொண்டு படித்தேன். நான் கேட்கும்போதெல்லாம் அப்பா பணம் அனுப்புவார். இருநூறு ரூபாய் என்று கேட்டால் நானூறு ரூபாய் அனுப்புவார். நான் முதலாவது வகுப்பில்தான் பயணம் செய்வேன். என் தோழிகள், சிநேகிதிகள் என்னை ஒரு ஜமீன்தார் மகள் என்று கருதினார்கள். நானும் அப்பாவுக்கு ஏது இவ்வளவு பணம் என்று சிந்திக்கவும் ஆராய்ந்து பார்க்கவும் இல்லை. ஹாஸ்டலில் வாழ்ந்தபோது மற்ற எளிய பெண்களுக்குத் தேவைப்படும் போதெல்லாம் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுப்பேன். சரஸ்வதி என்ற மாணவி தந்தை இழந்தவள்; தாய் கைம்பெண். அவளுடைய நான்கு வருடப் படிப்பும் நான் கொடுத்த பணத்திலேயே நடந்தது. திருநெல்வேலி ஜமீன்தாரிணி என்றே எனக்குப் பெயர். சரஸ்வதிக்குச் சேலை ரவிக்கை என்று செலவழித்தேன். அவள் தாய்க்கு அவ்வப்போது தேவைப்படும் பணத்தையும் நானே அனுப்பி வந்தேன். இப்படிச் செல்வச் சூழ்நிலையில் படித்து பி.ஏ. பரீட்சை எழுதிவிட்டு திருநெல்வேலி திரும்பினேன். தந்தைக்கு நான் வருவது பற்றி எழுதவில்லை. திடீரென்று கிளம்பினேன். திருநெல்வேலி ஜங்ஷனில் டாக்சி இல்லை. தந்தையைப் பார்த்து அவரைச் சந்தோஷ திகைப்பில் ஆழ்த்த வேண்டும் என்ற ஆவலில் ஒரு ஜட்கா வண்டியில் சாமானை ஏற்றிக்கொண்டு புறப்பட்டேன். தந்தை தலைவரான பாங்கின் காரியாலயத்துக்கு வண்டியை ஓட்டச் சொன்னேன். குதிரை வண்டி பாங்கின் வெளிப் புறத்தை நெருங்கும் போது, தந்தை மாடி அறை

ஜன்னலில் நின்றுகொண்டிருந்தார். அவர் அருகில் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அப்புறம் அவன் அறிமுகமான பின்புதான் அவன் பெயர் ரங்கன் என்று தெரியும். தந்தையைப் பார்த்ததும், தொழுவத்தில் கட்டப்பட்டிருக்கும் கன்றுக்குட்டி, மாலை மேய்ந்து விட்டு வரும் தாய்ப்பசுவைப் பார்த்ததும் ஆவலோடு துடிப்பதுபோல் துடித்தேன். உடனே வண்டியை விட்டுக் குதித்தேன். இருபது வயது பருவப்பெண் நான், தெருவில் நிற்கிறேன் என்பதையே மறந்தேன். ''அப்பாக்கண்ணு, அப்பாக்கண்ணு'' என்று செல்லமாக நான் எப்போதும் தந்தையைக் கூப்பிடுவதுபோல் கூப்பிட்டேன். முதலில் என் குரல் தந்தையின் காதில் விழவில்லை என்று நினைக்கிறேன். ஏதோ குழம்பிய சிந்தையில் இருந்திருக்கிறார். அருகிலிருந்தவன் அவரைத் தொட்டு உணர்த்தியிருக்கிறான். தந்தை என் பக்கம் திரும்பினார். உடனே முகம் மலர்ந்தது. படிக்கட்டுகளில் ஓடிவந்தார். தம் வயதை மறந்தார். நடுத் தெருவில் நிற்பதை மறந்தார். என்னை அணைத்துக்கொண்டார்.

''சீதா! பி.ஏ. பரீட்சையை ஊதி எறிஞ்சுட்டியா? சபாஷ்...! இனிமேல் நீ அப்பாக் கண்ணோடு இருக்கப் போறே! இனிமேல் உன் அப்பாக்கண்ணு உன் லெட்டருக்குக் காத்துக் காத்துக் கண்பூத்துப் போக வேண்டாம். வா சீதா, வீட்டுக்குப் போகலாம்!'' என்று சொன்னார்.

அப்போது அவர் அருகில் நின்ற ரங்கன், ''என்னங்க சிறு பிள்ளை மாதிரி வீட்டுக்குப் போறேங்கிறீங்க... நாளன்னிக்கு ஆடிட்டர் வராரு. எல்லாம் சரி பண்ண வேண்டாமா?'' என்றான்.

என் தந்தையின் முகம் சிவந்தது. அருகில் நின்ற இளைஞனிடம் அவர் பயப்படுகிறார், அவர்கள் இருவருக்கிடையே ஏதோ ஒரு ரகசியம் இருக்கிறது என்பதை

உணர்ந்தேன். அந்த இளைஞன் என்னைப் பார்த்துச் சிரித்தபடி நின்றான்.

என் தந்தை, ''இவன்தாம்மா ரங்கன், பாங்கு காஷியர். ரொம்பக் கெட்டிக்காரன்'' என்று முயற்சி செய்து புகழ்ந்தார். அவர் நெற்றியில் சுருக்கங்கள் தோன்றின. அப்போது என் இதயத்தை ஒருவித பயம் பிடித்துக் கொண்டது. இன்னது என்று விவரம் புரியாத பயம் அது! இந்த முறை நான் வீடு திரும்பியது குதூகல மாக இருக்க அல்ல; பெரும் சோதனைகள் என்னை நோக்கிக் காத்திருக்கின்றன என்பதை என் மனம் எப்படியோ புரிந்துகொண்டது!

## 6

நானும் தந்தையும் நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்கு வந்தோம். நான் திருச்சியிலிருந்து லீவுக்கு வீடு திரும்புவது எப்போதுமே வீட்டில் ஒரு திருவிழா போல்தான்! அதேபோல் என் தந்தை வீட்டு சமையல்காரனை அழைத்து, ''சீதா வந்திருக்கு, இன்னிக்கு சாப்பாடு தடபுடலா இருக்கோணும்!'' என்று உத்தரவிட்டார். சமையல்காரர் உடனே மார்க்கெட்டுக்கு ஓடினார். வீட்டு வேலை செய்துகொண்டிருந்த கோமதித்தாய்-அவளை நான் 'தாயி' என்று கூப்பிடுவது வழக்கம்-மாடிக்குப் போய், மாடி அறையைச் சுத்தம் செய்து ஊது வத்தி ஏற்றி வைத்தாள். என் நாவல் புத்தகங்களின் மீதிருந்த புழுதியைத் துடைத்து, அறையைச் சாணம் இட்டு மெழுகி, புதுக் கம்பளம் விரித்து, புதுப் பானையில் குடிநீர் நிரப்பி விளாமிச்சை வேர் போட்டாள்.

அப்போது தாயிக்கு எழுபது வயதிருக்கும். அவள் எனக்கு ஒரு பாட்டி போலும், என் தந்தைக்குத் தாய்

போலும் இருந்து வந்தாள். அவளை என் தந்தை சந்தித்த விதமே விசித்திரம்! தந்தை நிர்வாகம் செய்த பாங்கிலிருந்து தூத்துக்குடியைச் சேர்ந்த ஒருவர் கடன் வாங்கியிருந்தார். அவர் பங்கு மார்க்கெட்டில் சூதாட்டம் போல் விளையாடியவர். பாங்க்குக்கு அவர் தர வேண்டிய தொகைக்காகத் தந்தை நோட்டீஸ் விட்டிருந்தார். கடன்காரர் நோட்டீஸை ஏற்றுக்கொண்டு கோர்ட்டுக்கு வரவில்லை. கோர்ட்டில் கேஸ் எடுத்தபோது அவர் வந்து எதிர் வாதாடவில்லை. பணம் கட்டுகிறேன்; தவணை கொடுங்கள் என்றும் கேட்கவில்லை. கோர்ட் வழக்கப்படி 'எக்ஸ்பார்ட்டியாக' தீர்ப்பு அளித்து அவர் சொத்தை ஜப்தி செய்ய உத்தரவு வந்தது. அந்த ஜப்தியைப் பாங்கின் சார்பில் நிறைவேற்ற என் தந்தை தூத்துக்குடி சென்றார். கடன் வாங்கியவருக்கு இருந்ததெல்லாம் ஒரே ஒரு வீடு என்று தெரிந்தது. அதை ஸ்வாதீனம் செய்யப் போனபோது அந்த வீட்டில் ஒரு அறையில் அந்தக் கடன்காரர் இறந்து கிடந்தார். அந்தப் பிணத்தின் அருகில் அறுபது வயது நிரம்பிய ஒரு மாது-கோமதித்தாயி-அழுது கொண்டிருந்தாள். பாங்கின் சார்பில் வந்திருக்கும் என் தந்தையைப் பார்த்ததும், தாயி பாய்ந்து வந்து தந்தையின் கன்னத்தில் கை வலிக்கும் வரை அறைந்திருக்கிறாள்.

இறந்தவன் தாயியின் மகன் என்று தெரிந்ததும் என் தந்தை, புத்திர சோகம் கண்ட தாயியின் கண்ணீர் தெய்வத்தின் கண்ணீர் என்று பொறுத்துக்கொண்டு அடியை வாங்கிக் கொண்டார். பாங்கு டைரக்டர்களின் ஒப்புதல் பேரில் தாயியை அவள் மகன் வீட்டிலேயே தங்கச் செய்தார். செலவுக்கு மாதா மாதம் பணம் அனுப்பி வைத்தார். நான்கு மாதங்களுக்குப் பின் என் தந்தை தூத்துக்குடி சென்றபோது தாயி "ஏம்பா எனக்கு மாதா மாதம் பணம் கொடுக்கிறே?" என்று கேட்டிருக்கிறாள்.

''உங்கள் மகனை இழக்க ஓரளவு காரணம்-பாங்கு. அதனாலே அதன் தலைவனான நான், உங்கள் மகன் ஸ்தானத்தை நிரப்ப வேண்டாமா?'' என்று என் தந்தை கூறியிருக்கிறார். தாயிக்கு அழுகையே வந்து விட்டது. ''சொந்தக்காரங்க எல்லாம் என்னையும் என் மகனையும் திரும்பிப் பாராமல் இருந்துட்டாங்க. உனக்கு ஏம்பா இந்தக் கிழவி மேல் அக்கறை?'' என்று கூறினாள்.

அப்புறம் மறு வாரமே தாயி எங்கள் வீட்டுக்கு வந்து விட்டாள். அன்று முதல் தாயி எங்கள் வீட்டில் சம்பளம் வாங்காப் பணியாளாய், எனக்குப் பாட்டியாய் இருந்து வந்தாள். நான் ஒவ்வொரு முறை லீவு முடிந்து திருச்சி கல்லூரிக்குத் திரும்பும்போதும் தாயிதான் எனக்கு ஒரு டின் நிறைய சுத்த நெய்யினால் செய்த முறுக்கு அனுப்புவாள். தந்தை, தாயியிடம் மிகவும் மரியாதையாக நடந்துகொண்டதனால் தாயி மகனை இழந்த குறை தெரியாமல் சந்தோஷமாக எங்கள் வீட்டில் இருந்தாள். தாயி அவளுடைய அன்பையெல்லாம் பொழிய என்னை ஒரு பாத்திரமாக்கிக்கொண்டாள். நாகரிக மாணவியாக இருந்த எனக்குத் தாயி காட்டிய அன்பு சில சமயம் எரிச்சலையே கொடுத்தது. நான் எவ்வளவு முறை எண்ணெய் தேய்த்துக் கொண்டால் என்ன, நான் மஞ்சள் பூசிக் குளித்தால் என்ன, குளிக்காவிட்டால் இந்தக் கிழவிக்கு என்ன என்று எனக்குத் தோன்றியது அப்போது.

மாடி அறையைச் சுத்தம் செய்துவிட்டு, தாயி வெந்நீர் அடுப்பைப் பற்ற வைத்து வெந்நீர் தயார் செய்தாள். எண்ணெயைக் காய்ச்சி, அதில் மிளகு போட்டுக் கொண்டு வந்தாள்.

''ரயில் சூடு தணியணும், சீதா. முதல்லே எண்ணெய் வச்சுக் குளி!'' என்றாள். எனக்குக் கோபமாக வந்தது. வழியில்லாததால் ஒத்துக்கொண்டேன். குளித்துத் தலை துவட்டியவுடன், சூடாகக் காய்ச்சிய ரஸத்தைக் குடிக்க

வைத்தாள் கோமதித் தாயி ஓரளவு வைத்தியம் கற்று வைத்திருந்தாள். எண்ணெய் தேய்ப்பது என்பது ஒரு வைத்திய முறை. அதற்கு முக்கியமானது ''ஐஞ்சூடு''. அதாவது ஐந்துவிதச் சூடுகள் உடலுக்குக் குளுமை தந்து காப்பாற்றுமென்பது அவள் கண்ட உண்மை. காய்ச்சிய எண்ணெய் ஒரு சூடு. உடலில் எண்ணெய் தேய்ப்பதில் ஏற்படும் சூடு இரண்டாவது. ஒரே சூடாகக் காய்ச்சிய வெந்நீர் மூன்றாவது. காய்ச்சிய சீயக்காய்க் கலவை நான்காவது. தலை துவட்டியவுடன் கொடுக்கப்படும் சூடான மிளகு ரசம் ஐந்தாவது. இந்த ஐந்து உஷ்ணங் களே எண்ணெயின் மகிமை. எண்ணெய் தேய்த்துக் குளித்தவுடன் பகலில் தூங்கக்கூடாது என்பது தாயியின் மற்றொரு சட்டம். உண்மையிலேயே அன்று தாயி எனக்கு எண்ணெய் ஸ்தானம் செய்து முடித்ததும், உடல் களைப்பெல்லாம் போய் ஒருவித இன்பம் என்னைப் பற்றிக்கொண்டது. அந்த இன்பம்தான் சில நாட்களுக்கு நான் கண்ட கடைசி இன்பம்!

பிற்பகல் இரண்டு மணிக்கு அப்பா அவர் அறையை மூடிக்கொண்டு ரங்கனிடம் ஏதோ பேசிக் கொண் டிருந்தார். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. ரகசியம் பேசுவதே தந்தைக்குப் பொருந்தாத விஷயம். அன்று 4 மணிக்கு அப்பா சந்திர விலாஸிலிருந்து அல்வா, தோசை, பஜ்ஜி வாங்கி வரச் சொன்னார். ரங்கனும் டிபன் சாப்பிட உட்கார்ந்தான். ரங்கன் அடிக்கடி என்னைப் பார்த்த விதம் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் ரங்கனோ அதைப் பாராட்டியதாகத் தெரிய வில்லை. என் தந்தையே அவனுக்குக் கட்டுப்பட்டவர் என்பது போல் நடந்து கொண்டான் ரங்கன். தந்தையின் முகம் கவலையால் குழம்பிப் போயிருந்தது. சமைய லறையிலிருந்து தித்திப்புப் பலகாரத்தைத் திருடிய சிறுவன், எப்போது திருட்டு வெளியாகுமோ என்ற பயத்துடன் தாயின் முகத்தைப் பார்ப்பதுபோல்,

அடிக்கடி என் தந்தை என்னைப் பார்த்தார். உரத்த குரலில் சிரித்தபடி தெருவெல்லாம் கேட்கும்படி பேசு வார் அப்பா! அவர் ஏன் இப்படி குறுகிப் போய்விட்டார் என்று புரியவில்லை. டிபன் சாப்பிடும்போது அவர் ரங்கனை உபசரித்த விதம் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

மாலை டிபன் சாப்பிட்டானதும் மறுபடியும் ரங்கனும் அப்பாவும் ஆபீஸ் அறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டனர். நான் தாயியிடம் ரங்கனைப் பற்றி விசாரித்தேன். தாயி சொன்ன பதில் என்னைத் திகைக்க வைத்தது. ''என்னமோ சீதா, எனக்கு அந்த ரங்கனைக் கண்டாலே பிடிக்கலே! ரங்கன் பார்க்கிற துக்குப் படிச்சவனா அழகா டிரஸ் பண்ணிட்டிருக்கான். ஆனால் அவன் ஒரு யமதூதன் மாதிரி தெரியுது. யமதூதர்கள் புராணத்திலே கத்தி, கதையோடு, கொத்து மீசையோடு வர்றதாகக் காட்டறாங்க. ஆனால் இப்ப கோட் சூட் போட்டுட்டுத்தான் வர்றாங்க. என் மகன் சாகிறதுக்கு ஒரு வருஷத்துக்கு முன்னமே மதுரையி லிருந்து ஒருத்தன் வந்தான். அவனும் ரங்கன் மாதிரி சூட்போட்டுத்தான் வந்தான். அவன்தான் என் மகனுக்குப் பங்கு மார்க்கெட்டைக் காட்டி விட்டான். ஒவ்வொரு சொத்தாய்ப் போச்சு. மிஞ்சினது என் மகனுக்கு தூக்க மாத்திரைதான் சீதா! இந்த ரங்கன் எங்கே கொண்டுபோய் விடப்போறானோ!'' என்றாள் தாயி.

அன்று இரவு அப்பாவிடம் இதுபற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று தீர்மானித்தேன். ஆனால் இரவு வருவதற்குள் விஷயங்கள் வெகு வேகமாக நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அன்று ஆறு மணிக்கு அப்பா, ''தூத்துக்குடி போக வேண்டும்; நீயும் வா!'' என்று அழைத்தார்.

''எதற்கு அப்பா தூத்துக்குடிக்கு?'' என்று கேட்டேன்.

''ஒரு சிநேகிதரை அவசரமாகப் பார்க்க வேண்டும். காலையில் திரும்பி விடுவோம்'' என்றார்.

நானும் தந்தையும் சுமார் ஏழு மணிக்குப் புறப்பட்டோம். வழியில் என்னிடம் தயக்கத்துடன் ரங்கனைப் பற்றிப் பேச்சுக் கொடுத்தார். செல்லமாக வளர்க்கப் பட்ட பெண்ணாகையால், என் மனத்தில் உள்ளதை மறைக்க நான் தெரிந்து கொள்ளவில்லை.

''எனக்கு ரங்கனைக் கட்டோடு பிடிக்கவில்லை அப்பா! அவனோடு நீங்கள் ஏனப்பா பழக வேண்டும்? அவன் நினைப்பே எட்டிக்காய் போல் கசப்பா இருக்கு!'' என்றேன்.

தந்தை ஒன்றும் பேசாமல் வெளிப்புறம் பார்த்துக் கொண்டிருந்தார்.

''சில சமயம் எட்டிக்காயும் சில நோய்களுக்கு மருந்தா சாப்பிட வேண்டியிருக்கு, சீதா!'' என்றார். அவர் வார்த்தைகளின் அர்த்தமே எனக்குப் புரிய வில்லை.

''இந்த ரங்கன் யாரப்பா?'' என்றேன். தந்தை என் முகத்தைப் பரிவோடு பார்த்தார்.

''அவன் யாரென்று யாருக்கும் தெரியாது. சீதா! அவன் திருநெல்வேலியைச் சேர்ந்தவனே இல்லை. எங்கிருந்தோ வந்தவன். ஆனால், நெல்லைப் பகுதியில் பணம் படைத்தவர்கள், பெரிய மனிதர்களிடம் பழக்கம் வைத்துக் கொண்டிருக்கிறான்'' என்று கூறிவிட்டு, இன்னமும் ஏதோ கூற வாயெடுத்தார். உடனே பேச வந்த விஷயத்தை நிறுத்திக் கொண்டார்.

''என்னப்பா சொல்ல வந்தீங்க...? ஏன் நிறுத்திட்டீங்க?'' என்று கேட்டேன்.

''ரங்கன் நல்லவனல்ல சீதா! ஆனால் அவன் கைகளில் நான் மாட்டிக் கொண்டிருக்கிறேன். அவன்தான்

என்னைக் காப்பாற்ற முடியும்! அவன் இஷ்டப்படி நான் நடிக்க வேண்டியிருக்கிறது. இன்று இரவும், நாளைப் பொழுதும் கடந்து விட்டால், எனக்குப் பயமில்லை!'' என்றார்.

''விளக்கமாகச் சொல்லுங்கப்பா'' என்றேன்.

''சீதா, நான் ஜமீன்தாருமல்ல; நீ ஜமீன்தார் மகளுமல்ல! ஆனால் உன்னை ராணிபோல் வளர்க்க வேண்டும் என்ற ஆசையில் நான் ஊதாரியாகி விட்டேன்! உண்மையை உன்னிடம் கூறாமலே இருந்துவிடலாம் என நினைத்தேன். ஆனால் முடியவில்லை. தொட்ட பிஸினஸ் எல்லாம் நஷ்டம். உங்கம்மாவை ஆசையோடு கல்யாணம் செய்தபோதும் நான் சாதாரண மனிதன் என்று கூறாமல் அவளை மணந்தேன். அவள் என் மனைவியாக வாழ்ந்த ஐந்து வருடங்கள் நான் ஒரு தனவந்தன் போல் செலவு செய்து உண்மையை அவளிடம் மறைத்தேன். நீ பிறந்து குழந்தையாக இருக்கும்போதே அவள் உண்மை தெரியாமலே இறந்துவிட்டாள்! அவள், சாகும்போது ''என் மகளை என்னைப் பிரியமாக வைத்தது போலவே வைத்திருங்கள். நான் ஏழையாகவே வாழ்ந்து, உங்களை மணந்து, பின்புதான் பணவசதி என்றால் என்ன என்று உணர்ந்தேன். என் மகளுக்கு என்றுமே பணத்தட்டு தெரிய வேண்டாம்'' என்றாள். அப்படியே உன்னை, என்னென்னமோ புரட்டல்கள் செய்து செல்வமாக வளர்த்து விட்டேன். என் வாழ்வு பூராவுமே தகிடுதத்த மாகத்தான் இருந்திருக்கிறது. ஆனால் வெளியில் யாருக்கும் தெரியாமல் இருந்தது. இப்போது குட்டு வெளியாகிவிடும் நிலை வந்திருக்கிறது. இந்த நெருக்கடியில் இருந்து என்னை ரங்கன்தான் காப்பாற்றப் போகிறான்...'' என்று சொல்லிவிட்டு நிறுத்தினார்

நாங்கள் தூத்துக்குடியை நெருங்கியபடி இருந்தோம். என் தந்தை குரலைத் தாழ்த்தி என்னிடம் சொன்னார்: ''நான் பாங்கிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் எடுத்திருக்

கிறேன் சீதா. அதை நாளை மாலைக்குள் கட்ட வேண்டும். இல்லா விட்டால் எல்லோருக்கும் தெரிந்து விடும்!''

எனக்கு ஓடும் காரிலிருந்து கீழே குதித்துவிட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. சில மணி நேரத்தில் என் தந்தையே எனக்குப் புரியாத ஒரு புது மனிதராகத் தோற்றமளித்தார். ''நேர்மை, நாணயம் இவற்றின் இருப்பிடம் என்று நான் நினைத்தவர், அவர் தலைமை தாங்கும் ஸ்தாபனத்தின் சொத்தைக் கையாடல் செய்தவரா? அந்தத் திருட்டில் நானும் பங்கு கொண்டவள் அல்லவா! நான் இது நாள்வரை நடத்திய உல்லாச வாழ்க்கை, அணிந்த நகைகள், புடவைகள் எல்லாவற்றின் உற்பத்தி ஸ்தானமே இந்தக் கையாடல் அல்லவா!'' என்று எனக்குத் தோன்றியது. தந்தையைப் பார்க்கவே கூச்சமாக இருந்தது. காரின் வெளிப்புறம் பார்த்தபடியே, ''நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று குறையாகக் கேட்டேன்.

என் தந்தை, ''நீ... நீ ரங்கனைக் கல்யாணம் செய்து கொள்ள விருப்பம் உள்ளவள் போல் நடிக்க வேண்டும். இன்று இரவு அவனைச் சந்திக்கும்போது அவனை மணப்பதாகக் கூறினால் போதும்...'' என்றார்.

திடுக்கிட்டபடி அவரைப் பார்த்தேன். வெட்கித் தலை குனிந்தபடி ''...அவன் உன்னைத் தொட மாட்டான், சீதா! அவன் பண்பு தவறி நடக்கமாட்டான், அதை நான் கவனித்துக் கொள்கிறேன், சும்மா நீ ஒரு பொய் சொன்னால் போதும். அவனை நீ மணக்கவும் வேண்டாம்!'' என்றார்.

இந்த மட்ட ரகமான வார்த்தைகளைக் கேட்கவே எனக்குக் கூச்சமாக இருந்தது!

# 7

என் தந்தையின் நெருக்கடியைப் புரிந்து கொண்டதும் எனக்கு அவரிடம் பச்சாதாபம் ஏற்பட்டது. மறுபுறம் வெறுப்பு ஏற்பட்டது! என்ன மனிதர் இவர், தவறுக்கு மேல் தவறுகள் செய்கிறாரே என்று தோன்றியது!'' என்று கூறிவிட்டு நிறுத்தினாள் சீதா. பிறகு தொடர்ந்து, ''நாங்கள் தூத்துக்குடியில் கடற்கரை ஓரமாக உள்ள ஒரு பங்களாவுக்கு வந்தோம். அது யாருமே வசிக்காத ஒதுக்குப் புறமான பங்களா. அங்கு வயதான வேலைக்காரன் வீரய்யா என்பவன் வந்து கதவைத் திறந்தான். மரப் படிக்கட்டு வழியாக நானும் தந்தையும் மாடி அறைக்குச் சென்றோம். சிகரெட் துண்டுகள், புழுதி, கிழிந்த பேப்பர்கள், உடைந்து கிடக்கும் பாட்டில்கள் வழியெல்லாம் படிக்கட்டில் கிடந்தன. என் தந்தை என்னைப் பார்த்த விதத்தில் அவரே என்னை அங்கு அழைத்து வர வெட்கப்பட்டார் என்பது தெரிந்தது. வயதான வேலைக்காரன் வீரய்யா மாடியில் ஓர் அறையைத் திறந்தான். அந்த அறையில் ஒரு கட்டில், சோபாக்கள் போடப்பட்டிருந்தன அந்த அறை சற்றுச் சுத்தமாக இருந்தது. அங்கு இருவரும் உட்கார்ந்தோம். சில நிமிஷங்களில் என் தந்தை மட்டும் வெளியே சென்று கிழவனிடம் ஏதோ சொல்லி விட்டு வந்தார். அவர் என்னிடம் பேசவில்லை. அவர் ஜன்னல் புறம் நின்றபடி வெளிப்புறத்தைப் பார்த்துக் கொண்டிருந் தார். சுமார் அரை மணி சென்றதும், கிழவன் ஒரு டிபன் காரியரில் சுடச் சுட சாப்பாடு கொண்டுவந்து, இரண்டு வாழை இலைகளையும் வைத்து விட்டுப் போனான். எனக்குச் சாப்பிடவே பிடிக்கவில்லை. என் தந்தை என்னைத் திரும்பிப் பார்த்தார். அவர் கண்கள் கலங்கி இருந்தன. ''சீதா! சாப்பிடலியா?'' என்று

கேட்டார். நான் பேசாமல் இருந்தேன். ''அப்பாவுக்குப் பசியாயிருக்கு. அப்பாவுக்குக்கூடச் சாப்பாடு போட மாட்டியா?'' என்று என்னையே கேட்டார்.

நான் உடனே எழுந்து அங்குள்ள பெரிய பழைய வட்ட மேஜை மீது இலைபோட்டு, அவருக்கு உணவு பரிமாறினேன்.

அவர் வேகமாகச் சாப்பிட்டார். திடீரென்று ஒரு குழந்தைபோல் அழுதார். எனக்கே அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''ஏம்ப்பா அழறீங்க?'' என்று கேட்டேன்.

''அதிக அன்பாலே வீணாப் போனவனம்மா நான்! என் வாழ்க்கை பூராவும் உண்மையை, நெருங்கினவர்களிடம் மறைத்து வாழ்ந்துட்டேம்மா! இன்னிக்கு நீ பரிமாறும் சாப்பாடு கடைசிச் சாப்பாடாயிட்டா...?'' என்று கூறினார்.

''ஏம்ப்பா அப்படிச் சொல்றீங்க?'' என்றேன் அழுகையுடன்.

''சீதா! எனக்குப் பிள்ளையும், பெண்ணும் எல்லாம் நீதான்! தப்போ தவறோ செய்து உன்னைச் சிறப்பா ஒரு இடத்திலே கட்டிக் கொடுத்துட்டா அப்புறம் நிம்மதியா, இந்த வாழ்க்கை பூராவும் தவிப்பு இல்லாமல் நீ போடற சாப்பாட்டைச் சாப்பிட்டுட்டு, என் பேரப் பிள்ளைகளோட உங்க வீட்லே இருக்கலாம்னு கனவு கண்டேன், சீதா! அது நிறைவேறுமா?'' என்று சொன்னார்.

''கமலா அவர் கண்ட கனவு பிறகாலத்திரல நிறைவேறிவிட்டது. நான் ரொம்பப் பெரிய இடத்திலே கல்யாணம் செய்துக்கிட்டேன். ஆனால் அப்பாதான் அந்த வீட்டுக்கு வரலே! அவர் நிம்மதியா என் கையாலே ஒரு வாய் உணவு சாப்பிடலே!'' என்று கூறிவிட்டு, சொல்ல வந்ததைச் சொல்லாமல் பழைய நினைவுகளில் மனதைப் பறிகொடுத்து அழுதாள் சீதா.

கமலா அவளைத் தேற்றினாள். ''அப்புறம் என்ன நடந்தது, சீதா.''

''நானும் அப்பாவும் சாப்பிட்டு முடித்ததும் ரங்கன் வந்தான்.

அவன் என்னை விரும்புவதாகவும், அவனை மணக்க நான் தயாரா என்றும் கேட்டான்.

நான் என் உள்ளத்தில் பொங்கி எழுந்த வெறுப்பை அடக்கிக்கொண்டு அவனை மணக்கச் சம்மதம் தெரிவித்தேன்.

ரங்கன் சிரித்தான். என் குரலில் தொனித்த தழுதழுப்பு அவனுக்குச் சந்தேகத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

''சீதா, உன் வார்த்தைகளை நான் நம்பத் தயாராயில்லை! உன்னைப் போன்ற பெண், என்னைப் போன்றவனை மணக்கத் தயார் என்றால் எனக்கு நம்பிக்கையில்லை! நாளைக்குப் பிற்பகல் உன் தந்தைக்கு ஏற்பட்ட நெருக்கடி தீர்ந்துவிடும். அப்புறம் நீ என்னை மணக்க மறுக்கலாமே! நான் என்ன செய்ய முடியும்?'' என்று சொன்னான்.

என் தந்தை ஏதோ சொல்ல வாயெடுத்தார்.

''ஸார், நீங்கள் கொஞ்சம் வெளியே போய் இருங்கள்!'' என்று உத்தர விட்டான்.

''சீதாவைத் தனியே விட்டுட்டு நான் எங்கும் போக முடியாது!'' என்று மறுத்தார் அப்பா.

''பயப்படாதீங்க! அவளிடம் தப்பாக நடந்து கொள்ள மாட்டேன். அவளை நான் கண்யமான முறையிலே நேசிக்கிறேன். அவளை மணக்கத்தான் விரும்பறேன். ஆனால், நீங்கதான் என்னை ஏமாத்தப் பார்க்கிறீங்க! என்னை உபயோகப்படுத்திட்டு, பின்னாலே மாட்டேன்னுட்டா? அதுக்காகத்தான் உங்க மகள் இந்தக் காதல் கடிதங்களைக் காப்பி பண்ணணும். இந்தக் கடிதங்களைத் திருச்சியிலிருந்து எனக்கு அவள்

எழுதின மாதிரி எழுதி இருக்கேன். தேதி வாரியாக, இரண்டு வருஷங்களாக அவள் என்னை மணப்பதாக வாக்குறுதி கொடுத்து எழுதிய கடிதங்கள், என்னிடம் பலமுறை அவள் பணம் பெற்றுக் கொண்டதாகவும், நான்தான் அவள் எதிர்காலக் கணவன் என்றும் இந்தக் கடிதங்களில் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தக் கடிதங்கள் அவள் கையெழுத்தில் பதிய வேண்டும்!'' என்றான்.

என் தந்தை ஆத்திரத்துடன், அவனிடம் கூச்சல் போட்டார். ''என் மேலே உனக்கு நம்பிக்கை இல்லையா? அவள் எதற்காகக் கடிதங்கள் எழுத வேண்டும்?'' என்று இரைந்தார்.

''அவள் இந்தக் கடிதங்களைக் காப்பி செய்து கையெழுத்திடவில்லை என்றால், இன்று நாம் போட்ட திட்டத்தை நான் நிறைவேற்ற முடியாது!'' என்று மறுத்து விட்டான்.

என் தந்தையின் பரிதாப நிலையைப் பார்த்து நானே வலுவில் அந்தக் கடிதங்களைக் காப்பி செய்வதாக ஒத்துக் கொண்டேன்.

அவன் பல காகிதங்களை என்னிடம் கொடுத்து விட்டுச் சென்றான்.

விரும்பாத அந்தக் காதல் கடிதங்களை எழுதும்போது என் உயிரே போய்விடும் போல் இருந்தது. அந்தக் கடிதங்களில் நான் என்னையே காம வெறி பிடித்த ஒரு பெண் போல் வர்ணித்துக் கொண்டேன். கைகூசும்படியான ஆபாசங்களை வரைந்து தள்ளினேன். அவைகளின் அடியில் கையொப்பமிட்டேன்.

நான் ஏன் அதை எழுதினேன்? என் தந்தை ஏன் அதை நான் எழுத ஒப்புக் கொண்டார்? எனக்கு இன்று கூடப் புரியாத விஷயம் அது!

என்னிடம் கடிதங்களைப் பெற்றுக் கொண்ட பின், என் தந்தையும் ரங்கனும் வீட்டை விட்டு இரவில் வெளியே சென்றனர்.

நான் அந்த ஒதுக்குப் புறமான பங்களாவில் தனியே விடப்பட்டேன். காரிருளில் கடலிரைச்சல் ஒலியோடு இருண்ட வீட்டில் தூக்கமில்லாமல் ஜன்னல் வழியே கடலைப் பார்த்தபடி காத்திருந்தேன்.

வேலைக்காரக் கிழவன் வீட்டின் கீழ்ப் பகுதியில் தனக்குத் தானே சிரித்தபடி உலாத்திக் கொண்டிருந்தான்.

அவன் படியேறி வந்து என் அறைக் கதவைத் தட்டினான். நான் பயத்தோடு போய்த் திறந்தேன்.

ஒருவிதக் கேலிப் புன்னகையோடு, ''இந்தாம்மா, சூடான பால் கொண்டு வந்திருக்கேன். சாப்பிடம்மா!'' என்றான்.

பாலை வாங்கிக்கொண்டு அவனை அனுப்பினேன். அவன் படிக்கட்டுகளில் இறங்கும்போது சிரித்துக் கொண்டே போனான். அவன் சிரிப்பில் ஒருவித விசேஷமான அர்த்தம் தொனித்தது.

எனக்கு அவன் கொடுத்த பாலை பருகவே பயமாக இருந்தது. கதவை உட்புறமாகத் தாளிட்டுக்கொண்டு, பாலைக் குடிக்காமலே வைத்து விட்டேன்.

ஜன்னல் புறம் போய்க் கடலைப் பார்த்தபடி தந்தையின் வருகைக்குக் காத்திருந்தேன்.

வீட்டின் கீழ்ப் புறத்தில் ஏதேதோ ஆள் நடமாடும் சத்தம் கேட்டது. தந்தை ஒருவேளை வீட்டின் கீழ்ப் புறத்தில்தான் இருக்கிறாரோ? என்ன செய்கிறார்; எப்படி ஐம்பதினாயிரம் ரூபாய் நாளைக்குப் பிற்பகலுக்குள் சம்பாதிக்கப் போகிறார் என்று புரியவில்லை.

அப்போது தொலைவில் கடல் அலைகள் மீது பளிச் பளிச்சென்று வெளிச்சம் ஏற்றி ஏற்றி அணைக்கப் பட்டது. அதே சமயம் கடற்கரையிலிருந்து, கடல் அலைமீதிருந்து வரும் வெளிச்சத்துக்குப் பதில் சொல்வது போல் ஒரு பிரகாசமான டார்ச் எரிந்து அணைந்தது.

அரை மணி நேரத்தில் கடல் அலைகள் மீது

தோன்றிய விளக்கு, கடற்கரையை நெருங்கியது. எனக்கு எல்லாமே பயங்கரமான வேடிக்கையாக இருந்தன.

பத்து நிமிஷங்களில் இரண்டு உருவங்கள் கடற்கரையிலிருந்து பங்களாவை நோக்கி வருவதைப் பார்த்தேன். அந்த உருவங்கள் ஒரு பெட்டியைத் தூக்கியபடி தள்ளாடி வந்தன. அந்த இரு உருவங்களில் ஒன்று என் தந்தை, மற்றது ரங்கன் என்று தெரிந்தது.

இருவரும் பெட்டியைத் தூக்கி வந்து தரையில் வைத்துவிட்டு, மூச்சு வாங்கியபடி நின்றனர். அவர்கள் தூக்கி வந்த பெட்டி கனமானது என்பது அவர்கள் மூச்சு விட்டதிலிருந்து தெளிவாகத் தெரிந்தது.

ரங்கன், "வீரய்யா! வீரய்யா!" என்று கூப்பிட்டான். பதில் இல்லை. கூப்பிடும்போது வேலைக்காரக் கிழவன் எங்கு போயிருப்பான் என்று எண்ணினேன். அடுத்தபடியாக என் தந்தை "வீரய்யா! காரை எடுத்திட்டு வா! சீதாவை வரச்சொல்லு" என்றார். அப்போதும் பதில் இல்லை! நான் மாடியிலிருந்து, "அப்பா, இதோ வர்ரேன்!" என்று கூச்சலிட்டேன்.

தந்தை, "வீரய்யா எங்கேம்மா?" என்று கேட்டார்.

நான் அவருக்குப் பதில் சொல்லாமல் அறைக் கதவைத் திறந்து கொண்டு படிக்கட்டுகளில் இறங்கி ஓடினேன்.

கீழ் ஹால் வெறிச்சென்று கிடந்தது. அதன் வழியே ஓடி வெளிப்புறம் அடைந்தேன்.

"அப்பா, ஊருக்குப் போகலாமா?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"எல்லாருமே ஊருக்குப் போக வேண்டியதுதான்! இங்கிருந்த கார் எங்கே காணோம்?" என்றார்.

அடுத்த நிமிஷம் புதர்களுக்கு அருகிலிருந்து, "கார் இல்லாட்டி என்ன, எல்லாருமே போலீஸ் ஜீப்லே போவோம்!" என்று குரல் கேட்டது.

நாங்கள் மூவரும் வேகமாகத் திரும்பினோம்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் நின்று கொண்டிருந்தார் வீரய்யாவுடன்!

என் தந்தையின் முகம் அப்படியே வெளுத்தது. அவர் கை வேகமாகப் பைக்குள் சென்றது. ஒரு துப்பாக்கியை எடுத்தார்.

"சீதா, நீ ஓடிப்போ!" என்றார்.

அடுத்த நிமிஷம் அவர் இன்ஸ்பெக்டரை நோக்கிச் சுட்டார்.

அதைத் தொடர்ந்து நாற்புறமிருந்தும் குண்டுகள் வெடித்தன!

என் தந்தை தரையில் சாய்ந்தார்!

நான் "அப்பா! அப்பா!" என்று அலறியபடி அவரை நோக்கி ஓடினேன்.

## 8

என் தந்தை தரையில் விழுந்து கிடப்பதைக் கண்ட எனக்கு உலகமே இருண்டது.

"அப்பா! அப்பா!" என்று பலமுறை கூப்பிட்டேன். உடலில் குண்டு பாய்ந்திருந்ததால் ஏற்பட்ட வலியாலும் அழற்சியாலும் வேதனையோடு காணப்பட்டது அவர் முகம். மெள்ள முயற்சித்து கண் திறந்தார். என் முகத்தைப் பார்த்ததும், குற்றவாளிபோல் வெட்கத்தோடு அழுதார்.

"என்னை மன்னித்துவிடு, சீதா! உன் வாழ்வை வளமாக்கப் பாடுபட்டேன். முடிவில் உன்னை ஏமாற்றி விட்டுத்தான் செல்கிறேன்!" என்று அவர் கூறி முடிப்பதற்குள் அவர் கண்கள் மூடின. அவர் மூச்சு நின்றது. அப்படியே அலறி அவர்மீது விழுந்தேன்.

நான் விழித்துப் பார்த்தபோது போலீஸ் ஸ்டேஷனில் இருப்பதை உணர்ந்தேன். முதல் நாள் வரை என் தந்தைக்கு இருந்த அந்தஸ்து, கௌரவம் எல்லாம் ஒரு நொடியில் மறைந்தது. போலீஸ் காவலில் நான் வைக்கப்பட்டிருந்தேன். அதே ஸ்டேஷனில் ரங்கனும் வைக்கப்பட்டிருந்தான். என் தந்தையின் கேவலமான முடிவுக்குக் காரணமாக இருந்த ரங்கன், என்னிடம் காட்டிய அநுதாபமும் பரிவும் என்னை வேதனையில் ஆழ்த்தின.

மறு நாள் தினத்தாள்களில் என்னுடைய படமும், ரங்கனின் படமும் வெளியாயின. என்னை ரங்கனின் காதலி என்று பத்திரிகைகள் வர்ணித்தன. பிறந்த நாள் முதல் நான் அந்தக் கள்ளக் கடத்தல் கூட்டத்தைச் சேர்ந்தவள் போல் என்னைப் போலீஸார் நடத்தினார்கள். என்னைத் திரும்பத் திரும்பக் கூட்டாளிகளைப் பற்றி விசாரித்தார்கள்.

போலீஸாருக்கு ரகசியமாக இரவு தகவல் கொடுத்த அந்த மாளிகை வேலைக்காரனாகிய வீரய்யன், என்னை ரங்கனின் எதிர்கால மனைவி என்று வர்ணித்தான்.

நான் என்ன சொல்லியும் போலீஸார் என் வார்த்தை களை நம்பவில்லை. வீரய்யன் பேச்சைத்தான் நம்பி னார்கள்.

இந்த நிலையில் வழக்கு தொடங்கியது. கோர்ட்டுக் குள் நுழையும்போது கூட்டம் என்னைப் பார்த்த விதம்... நானும் தந்தையோடு இறந்திருக்கக் கூடாதா என்று தோன்றியது எனக்கு.

அந்த வழக்கில் நான் ஒரு சுவாரஸ்யமான அயிட்ட மாகிவிட்டேன். என் பருவக் கட்டான உடலும், என் அழகும் அந்தச் சாதாரணக் கள்ளக் கடத்தல் வழக்கிற்கு திரைப் படத்தின் கவர்ச்சியைக் கொடுத்தன. அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், எல்லோருடைய பார்வையிலுமே

ஒருவிதமான இனக்கவர்ச்சியின் வெறி இருந்தது. அவர்களின் பார்வையிலிருந்தே, என் உடைகளைக் களைந்து என் உடலைப் பற்றி அவர்கள் மனம் நினைக்கிறது என்பதை உணர்ந்தேன்.

அழகான பெண் கோர்ட்டுக்கு வரக் கூடாது! அதுவும் சட்டத்தின் எதிர்ப்புறத்தில் நின்றுவிட்டாலோ அவளை எதற்கும் எல்லாவற்றுக்கும் இழுக்கலாம் என்று நினைக்கிறது மனித மனம்.

ஒவ்வொரு இரவும் நான் பூட்டப்பட்டிருந்த அறையில் எனக்கு என்ன நேருமோ என்று பயந்திருந்தேன். நல்ல வேளை! அப்பா ஒரே குண்டில் இறந்துவிட்டார். அவர் ராணியைப் போல் வைத்திருக்க வேண்டும் என்று நினைத்த செல்வ மகள் படும் வேதனையை அவர் பார்த்திருந்தால் திரும்பத் திரும்ப வேதனையில் வெந்திருப்பார்.

எனக்கு ஒவ்வொரு சமயம், வாழ்க்கையை முடித்துக் கொள்வோமா என்ற எண்ணம் தோன்றியது. ஆனால், எப்போதும் போலீஸ் வாடர்டர்களால் சூழப்பட்டிருந்ததால் எப்படித் தற்கொலை செய்துகொள்வது என்று புரியவில்லை.

இந்த வழக்கில் துப்புத் துலக்கிய இன்ஸ்பெக்டர்களில் டேனியல் தாமஸ் ஒருவர். அவர் அதிகம் பேச மாட்டார். ஆனால் என்னை ஒருவிதமாகப் பார்ப்பார். கோர்ட்டுக்கு என்னை அழைத்துச் செல்வது, திரும்ப லாக்கப்பிற்கு அழைத்து வருவது எல்லாம் அவருடைய வேலை, அவருடைய நீண்ட மூக்கும், சிவந்த கண்களும், தடித்த உதடுகளும், அவர் ஒரு காம வெறியன் என்பதை எனக்கு எடுத்துக் காட்டின. என்மீது உராய்ந்தபடி அவர் போலீஸ் வேனிலிருந்து என்னை இறக்கி அழைத்துச் செல்லும் போதெல்லாம் எனக்கு அருவருப்பாக இருந்தது.

எவ்வளவோ முறை, கனவுகளில் அவர் என்னைத்

துரத்தி வருவது போலவும், அவருடைய இரும்புக் கரங்களில் நான் சிக்கி, என் மானத்தை இழக்கப்போவது போலவும் நான் கனவு கண்டு அலறி விழித்தெழுந்திருக்கிறேன்.

இதே வழக்கில் இன்னொரு இன்ஸ்பெக்டரும் இருந்தார். அவர் பெயர் நமசிவாயம். மென்மையான சுபாவம். சிரித்த முகம். நெற்றியில் விபூதி அணிந்திருப்பார். 'ஓரப் பார்வையாக நம்மைக் கவனிக்கும் டேனியல் தாமஸை நீக்கிவிட்டு, நம்மை அழைத்துச் செல்ல இந்த நமசிவாயத்தை அனுப்பியிருக்கக்கூடாதா?' என்று நினைத்திருக்கிறேன். போதாததற்கு இன்னொரு நிகழ்ச்சியும் என்னை டேனியல் தாமஸை வெறுக்கச் செய்தது. அவன் இந்தக் கள்ளக் கடத்தல் வழக்கில், எங்கள் வீட்டில் எனக்குப் பாட்டிபோல் இருந்த தாயியையும் போலீஸ் தரப்பு சாட்சியாகக் கொண்டு வந்துவிட்டான். இந்தச் செய்தியைக் கேட்டதும், தாமஸ் மீது எனக்கு இருந்த வெறுப்பு இன்னும் அதிகமாகியது.

எங்கப்பாவின் ஆதரவில் இருந்த தாயி, நான் தூத்துக்குடிக்குப் புறப்படும் நாள் அன்றுகூட எனக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டியவள், இந்த வழக்கில் எனக்கு எதிராக, என் தந்தையின் பெயருக்குக் களங்கம் ஏற்படும் முறையில் சாட்சி சொல்லப் போகிறாள் என்றதும் எனக்கு ஆச்சர்யமாக இருந்தது.

என்னைப்பற்றி ஆசை வார்த்தைகள் சொல்லி அவளை இந்த டேனியல் தாமஸ், போலீஸ் தரப்பு சாட்சியாக மாற்றியிருப்பானோ, அல்லது அவளை மிரட்டியிருப்பானோ என்று ஆச்சர்யப்பட்டேன்.

திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது. என்னைக் கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லத் தாமஸ் வரவில்லை. நமசிவாயம் வந்தார். அவரைப் பார்த்ததும் எனக்கு விடுதலையே கிடைத்து விட்டது போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

நமசிவாயம் டேனியல் தாமஸ் போல் ஒன்றும் பேசாமல் முறைத்துப் பார்த்தபடி போலீஸ் வேனில் வர மாட்டார். சிரித்த முகத்தோடு என்னிடம், என் உடல் நலம் பற்றிச் சில வார்த்தைகளாவது விசாரிப்பார். எனக்கும் அவரிடம் பேசுவதில் ஒரு ஆறுதல் இருந்தது.

கான்ஸ்டேபிள்களை ஏதாவது காரியமாகச் சற்றுத் தொலைவில் அனுப்பிவிட்டு, ''கவலைப்படாதே! உன் விடுதலைக்கு என்னால் ஆன உதவியைச் செய்கிறேன்!'' என்று எனக்கு ஆறுதல் மொழி கூறுவார்.

கஷ்ட காலத்தில் நமசிவாயம் வந்ததும் ஒரு நல்ல காலம் என்று எண்ணி மகிழ்ந்திருந்தேன். நான் நமசிவாயத்தின் மேற்பார்வையில் கோர்ட்டுக்கு வருவதை டேனியல் தாமஸ், தூரத்திலிருந்து ஒருவிதமாகப் பார்ப்பார். அவர் பார்வையின் அர்த்தம் எனக்குப் புரியாமல் இல்லை.

டேனியல் தாமஸ், ரங்கனையும் தாயியையும் அழைத்து வந்திருந்தார். அவர் அருகில் நின்றிருந்த தாயி, என் பக்கம் ஒரு முறைகூடத் திரும்பிப் பார்க்க வில்லை. அது எனக்கு மிக வேதனையாக இருந்தது. ஆனால் ரங்கன் மட்டும் என் பக்கம் அநுதாபத்துடன் திரும்பிப் பார்த்தான். பிறகு திரும்பி தாமஸுடன் ஏதோ சில வார்த்தைகள் பேசினான்.

தாமஸ் என்னை நெருங்கி, என்னிடம் ஏதோ பேச வந்தார். அதற்குள் நல்லவேளை, நமசிவாயம் வந்து விடவே, தாமஸ் ஒன்றும் சொல்லாமல் நகர்ந்து விட்டார்.

அன்று கோர்ட் முடிந்ததும், என்னை மறுபடியும் லாக்கப்புக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு நமசிவா யத்திடம் விடப்பட்டது. அப்பொழுது போலீஸ் வேன் பழுதாகி இருந்ததால், அருகிலிருந்த நண்பர் ஒருவரின் காரில் என்னை ஏறிக்கொள்ளச் சொல்லி, லாக்கப்புக்கு அழைத்து வந்தார் நமசிவாயம்.

நாங்கள் புறப்படும் போதுதான், டேனியல் தமது மோட்டார் பைக்கில் வந்து ஏறினார். அவர் என்னைப் பார்த்த பார்வை விபரீதமாக இருந்தது. நான் அதைப் பொருட்படுத்தாது திரும்பிக்கொண்டேன்.

காரில் நமசிவாயமும், நானும் மட்டும் இருந்தோம். "தாமஸ் எப்படியாவது இந்த வழக்கில் உன்னை, ரங்கனுடைய துணைக் குற்றவாளியாக்கப் பார்க்கிறார். அதற்காக சாட்சிகள் எல்லாம் தயாரித்திருக்கிறார்" என்று சொன்னார் நமசிவாயம்.

"என்னை எப்படியாவது காப்பாற்றுங்கள் சார்..." என்று அழாத குறையாகச் சொன்னேன்.

"நீ கவலைப்படாதே! உன்னை நிரபராதியாக நிருபித்து, விடுதலை செய்ய வேண்டியது என்னுடைய பொறுப்பு!" என்று உறுதிமொழி கூறினார்.

அப்போதுதான் கார், வழக்கமாகச் செல்லும் பாதையில் செல்லாமல் வேறு ஒரு பிரிவில் திரும்புவதை உணர்ந்தேன்.

கார் சாலையை விட்டு விலகி அடர்த்தியான தென்னந்தோப்பில் நுழைந்தது. பிறகு நின்றது. நமசிவாயம் டிரைவர் சீட்டிலிருந்து இறங்கி வந்து என் அருகில் உட்கார்ந்தார். பிறகு சிரித்தார். அடுத்தபடியாக அவர் கை என் மார்பின்மீது விழுந்தது.

இதைச் சற்றும் எதிர்பாராத நான் ஸ்தம்பித்துப் போய்விட்டேன். அவர் விரல்கள் என் ஜாக்கெட்டை விலக்கி, என் மார்பு மீது நகரும்போதுகூட என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர் உதடுகள் என் உதடுகளை நெருங்கும்போதுதான் எனக்கு சுய உணர்வு வந்தது. அவர் பிடியிலிருந்து விலகினேன்.

அவர் என்னைக் கட்டிப்பிடித்துக் காருக்கு வெளியே தள்ளினார். வேகமாக ஒரு மிருகம்போல் என்மீது விழுந்தார். அவருடைய பூட்ஸ் கால் என் சேலையைத் தள்ளியது. இரு கைகளாலும் அவரை நெட்டித் தள்ளினேன்,

''சும்மா இரு! பெரிய பத்தினியோ? நீ இதுக்கு ஒத்துக்கிட்டாத்தான், நான் உன்னைக் காப்பாத்து வேன்!'' என்று கூறினார்.

''முடியாது! முடியாது!'' என்று அவரைத் தள்ளப் பார்த்தேன். வியர்த்த முகத்தோடு, திறந்த வாயுடன் அவர் என் மார்பு மீது விழுந்தார். அந்தக் குறுகிய இடத்தில் நான் திரும்பிப் படுத்தேன். அவர் பற்கள் என் தோள்மீது கடித்தன. அவர் என் பிடரியில் அறைந்து என்னைத் திருப்பினார்.

''ஐயோ!'' என்று அலறினேன்.

''கூச்சல் போடாதே! கூச்சல் போட்டா உன்னைக் கொன்னுடுவேன்!'' என்று சொல்லி என் கழுத்தை நெறித்தார். என் கண்கள் இருண்டன. நான் செயலற்றுக் கிடந்தேன். என் இடுப்பைச் சுற்றியுள்ள ஆடையைக் களையத் தொடங்கினார் நமசிவாயம்.

''கடவுளே! ஐயோ கடவுளே!'' என்று அலறினேன். அடுத்த வினாடியே நமசிவாயம் என் உடல் மீதிருந்து வேகமாக விலக்கப்படுவதை உணர்ந்தேன். வேகமாக எழுந்து உட்கார்ந்தேன்.

டேனியல் தாமஸ் தன்னுடைய இரும்புக் கரங்களால் நமசிவாயத்தை அறைந்தபடி இருந்தார்.

''மானங்கெட்டவனே! இதுதான் நீ டியூட்டி செய்யற லட்சணமா! வெட்கமா இல்லே?'' என்று சொல்லி நமசிவாயத்தைத் துணி மூட்டை போல் தரையில் எறிந்தார்.

நமசிவாயம் பல்லைக் காட்டியபடி வெடவெட வென்று நடுங்கிக் கிடந்தான், அவன் பார்வையில் காம வெறி இல்லை.

டேனியல் தாமஸின் கால்களைக் கட்டியபடி குழந்தைபோல் அழுதான்.

''தாமஸ் என்னைக் காட்டிக் கொடுத்திடாதே! என் வேலை போயிடும்! என் வேலை போயிடும்...!''

ஒரு விநாடிக்கு முன் வேங்கை போல் பாய்ந்தவன், எப்படி அடுத்த விநாடிக்குள் காற்றில் ஆடும் சருகு போல் உலர்ந்து நடுங்குகிறான் என்பதே எனக்கு ஆச்சர்யமாக இருந்தது.

''நாயே! நீ போலீஸ் வேனில் ஏதோ கோளாறு செய்யறப்போ பார்த்துக்கிட்டிருந்தேன். உன் நண்பர் கார்லே நீ பெண்ணை அழைச்சிட்டுப் புறப்படவே எனக்குச் சந்தேகம் வந்தது. அதனாலேதான் உன்னைப் பின் தொடர்ந்து மோட்டார் பைக்கிலே வந்தேன். குற்றவாளிக் கூண்டிலே ஏறிட்டா, ஒரு பொம்பளை எல்லாத்துக்கும் உடன்படுவான்னு உனக்கு நினைப்போ?'' என்று சொல்லி நமசிவாயத்தை உதைத்தார்.

நமசிவாயத்தைத் தோப்பிலேயே விட்டு விட்டு, தாமஸ் என்னை அழைத்துக்கொண்டு காரில் புறப் பட்டார்.

வழியில் ஒருமுறை கூடத் தாமஸ் என்னுடன் பேச வில்லை. லாக்கப்பை நெருங்குவதற்கு முன் காரை நிறுத்தினார். எனக்கு மறுபடியும் பயம் ஏற்பட்டது.

''என்னைப் பார்த்துப் பயப்படத் தேவையில்லை. நான் தீண்டாத வகுப்பிலேருந்து கிருஸ்தவனாக மாறி னாலும், பண்பு தவறமாட்டேன்! என் உருவம்தான் பயங்கரம்; என் உள்ளம் அப்படியில்லை!'' என்று கூறி விட்டு ஒரு விநாடி பேச்சை நிறுத்தினார்.

''உங்கய்யா ஒரு உயர்ந்த மனிதர்! நான் தீண்டாத வகுப்பைச் சேர்ந்த கிறிஸ்தவன்னு தெரிஞ்சும் என்னை வீட்டிலே வச்சுச் சோறு போட்டார். போலீஸ் ஸ்கூலிலே படிக்கப் பணம் உதவினார். இறுதிப் பரீட் சைக்குப் பணம் கொடுத்தார். அது உனக்கு ஞாபகம் இருக்காது. நாளைக்கு உன்னை விசாரிக்கிறப்போ, எனக்கு ஒன்றும் தெரியாது, அப்பா எதுக்குத் தூத்துக்

குடிக்கு வந்தார்னு தெரியாதுன்னு சொல்லிடு. வக்கீல் என்னதான் திரும்பத் திரும்பக் கேட்டாலும், இதே பதிலை உறுதியாச் சொல்லிடு!'' என்று சொன்னார்.

பிறகு மரியாதையுடன் என்னை லாக்கப்பிற்கு அழைத்துச் சென்று அடைத்துவிட்டு மறுவார்த்தை பேசாமல் சென்றுவிட்டார். அந்தப் பயங்கரமான தோற்றத்தின் அடியில் எவ்வளவு கண்ணியமான உள்ளத்தை ஆண்டவன் வைத்திருக்கிறான் என்று வியந்தேன்'' என்று கூறி நிறுத்தினாள் சீதா.

கமலா உடனே, ''உண்மை சீதா. ஒரு அழகான தோற்றத்தின் அடியில் எவ்வளவு கீழ்த்தரமான உள்ளம் இருக்கமுடியும் என்பதைப் புரிந்து கொண்டவள் நான்!'' என்று பெருமூச்சுடன் கூறினாள்.

## 9

அந்த நள்ளிரவில் தனிமையில் சீதா, கமலாவிடம், தன்னுடைய பூர்வ கதையைச் சொல்லும் போது அவளுக்கு ஒருவித நடுக்கமே ஏற்பட்டது.

ஒரு விநாடி பேச்சை நிறுத்திவிட்டு மௌனமாக இருந்தாள்.

''அப்புறம் என்ன நிகழ்ந்தது சீதா?'' என்று தொடர்ந்து கேட்டாள் கமலா.

நாம் ஒரு சாதாரண நர்ஸ்; எல்லாவித பாக்கியமும் பெற்றவள் சீதா என்று பெருமையோடு இருந்தவள் கமலா. அந்த சீதாவின் வாழ்க்கையிலும் கடந்த காலத்தில் ஒருவிதமான பயங்கரம்; தன்னைப் போலவே அவளும் போலீஸ்காரன் நமசிவாயத்தின் தோற்றத்தால் ஏமாந்தவள் என்ற எண்ணம் கமலாவுக்கு ஒருவிதத் திருப்தியைக் கொடுத்தது.

''இக்கரைக்கு அக்கரை பச்சை'' என்ற நிலைதான் வாழ்க்கையிலுள்ள ஒவ்வொரு அமைப்பும் என்று நினைத்தாள்.

சீதா தொடர்ந்து திருநெல்வேலியில் நிகழ்ந்தவற்றைக் கூறினாள்.

''கமலா, மறுநாள் நான் கோர்ட்டுக்குச் சென்றதும் எனக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

தாயி சாட்சிக் கூண்டுக்கு அழைக்கப்பட்டாள். தாயி என்ன சாட்சியம் கூறப்போகிறாளோ; அது என்னை எப்படிப் பாதிக்குமோ என்று நடுங்கியபடி காத்திருந்தேன்.

அவள் முகத்தில் வெறுப்பு கொந்தளித்தது. என் தந்தை ஒரு ஊதாரி என்றும் வாக்கு நாணயம் இல்லாதவர் என்றும் கூறினாள். என் தந்தையிடமே சாப்பிட்டு விட்டு, அவர் ஆதரவிலே வாழ்ந்துவிட்டு அவள் கூறிய வார்த்தைகள் அவளை இன்னும் அதிகமாக வெறுக்கச் செய்தன. என் தந்தை என்னைப் படிக்க வைப்பதற்காக, தவறான முறையில் பாங்கிலிருந்து பணத்தை எடுத்து, பாங்குப் பணத்தைக் கையாடல் செய்தார் என்றும், அந்தப் பணத்தைச் சரிக்கட்டுவதற்காகவே தூத்துக்குடியில் கள்ளக் கடத்தலுக்குச் சென்றார் என்றும் சொன்னாள்.

போலீஸ் தரப்பு வக்கீல் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுக்கொண்டே போனார். தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக என் தந்தை கள்ளக் கடத்தல் மட்டுமல்ல, ஒரே மகளாகிய என்னை விருப்பமில்லாமல் ரங்கனுக்குக் கட்டிக் கொடுக்கத் தயாராக இருந்ததாகவும் சொன்னாள்.

தாயிக்கு, என் தந்தை மீது இப்படி வெறுப்பு ஏன் ஏற்பட்டது என்று எனக்குப் புரியவில்லை.

கடைசியில் ஜட்ஜ் முடிவாக என்னைப் பற்றித் தாயியிடம் விசாரித்தார்.

தாயி கூசாமல் நானும் ஒரு ஊதாரி என்றும், தந்தையைப் போன்ற மகள் என்றும், பண்பு இல்லாமல் செல்லமாக வளர்க்கப்பட்டவள் என்றும் சொன்னாள். நான் எதிர் காலத்தில் உருப்பட மாட்டேன் என்றும் கூறினாள். கேள்விக்குப் பொருத்தமில்லாத வெறுப்பு வார்த்தைகளைக் கொட்டினாள்!

''ஊர்ப் பணத்தை எடுத்து ராணி மாதிரி வளர்த்தான் அப்பன்! அந்தப் பெண் உருப்படவா போகுது! மனுஷங்களை லட்சியம் பண்ணாமல் நடக்கும். மனசுக்குள்ளே மகாராணின்னு நினைப்பு சீதாவுக்கு!'' என்றாள் தாயி.

ஜட்ஜ் அவர்களுக்கே பொறுக்கவில்லை. ''தாயி! கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு! அதிகப் பேச்சு வேண்டாம்!'' என்று கண்டித்தார்.

தாயி பயப்படாமல் பதில் சொன்னாள். ''என்னைக் கேட்டா எனக்குத் தோன்றும் உண்மையைச் சொல்வேன்! என்னைப் பொய் சொல்லச் சொல்றீங்களா? இந்த டம்பாச்சாரிப் பெண்ணுக்காகத்தான் அந்த மனுஷன் இவ்வளவு தவறும் செய்தான்!'' என்றாள்.

போலீஸ் தரப்பு வக்கீல் அடுத்த கேள்வியைத் தொடர்ந்து கேட்டார்.

''தாயி, சீதாவுக்கு விஷயம் தெரிந்து தானே தூத்துக்குடிக்குப் போனாள்? அவளும் அந்தக் கள்ளக் கடத்தல் குற்றத்திலே உடந்தைதானே?'' என்று கேட்டார்.

தாயி என் பக்கம் திரும்பினாள்.

''இப்படியே இவள் அப்பன் இந்தப் பஜாரிப் பெண்ணை வளர்த்திருந்தான்னா, அவள் கள்ளக் கடத்தல் மட்டுமென்ன, கொலையே செய்திருப்பாள்! சந்தேகமில்லை!'' என்றாள்.

எனக்குக் குற்றவாளிக் கூண்டிலிருந்து தாவி அவளைப் பிறாண்ட வேண்டுமென்று தோன்றியது.

ஜட்ஜ், தாயியைப் பார்த்து, ''தாயி, உன் விருப்பு வெறுப்பு பற்றி அக்கறையில்லை. சீதா என்ன செய்திருப்பாள் என்பதும் இப்போது பிரச்னையில்லை. தூத்துக்குடி கள்ளக் கடத்தல் வழக்கில் சீதா சம்பந்தப்பட்டவளா? அவள் தெரிந்து தந்தையோடு சென்றாளா? அல்லது அவள் சொல்வதுபோல் வெறும் பொழுது போக்குக்காகச் சென்றாளா? தூத்துக்குடியில் தந்தை என்ன செய்யப் போகிறார் என்று தெரிந்துதானே சீதா தூத்துக்குடிக்குச் சென்றாள்?'' என்று கேட்டார்.

''அவளுக்கு ஒரு எழவும் தெரியாதுங்க. என்னையே சும்மா கேட்டுச்சு-இந்த ரங்கன் யாரு? அப்பா எதுக்குத் தூத்துக்குடி போறாருன்னு கேட்டுச்சு. அப்போதானே அவள் திருச்சியிலிருந்து வந்தாள். இந்தத் தப்பு சீதா செய்யலிங்க!'' என்றாள்.

கோர்ட்டில் அமளியே ஏற்பட்டது. போலீஸ் தரப்பு வக்கீல் சாட்சி புரண்டு பேசுகிறாள் என்று சத்தம் செய்தார். தாயி பயப்படவில்லை.

''எனக்குத் தெரிஞ்ச உண்மையை நான் சொல்கிறேன். ஏதேதோ போலீஸ்லே கேள்வி கேட்டாங்க. அப்புறம் மேஜிஸ்ட்ரேட் முன்னாலே பேப்பரிலே எழுதிப் படிச்சாங்க. நான் தலையை ஆட்டினேன். ஆண்டவனுக்குப் பொதுவா எனக்குத் தெரிஞ்ச உண்மை இதுதான். அவள் அப்பா என்ன செய்தார்ன்னு தெரியாது. இந்தக் குற்றத்திலே அவளுக்கு எந்த வித சம்பந்தமும் இல்லீங்க. அதுக்காக நீங்க அவளைத் தண்டிக்காமல் விட்டுடாதீங்க. ஒரு ஏழு வருஷமாவது போடுங்க. அப்போத்தான் அவள் திருந்துவாள்!'' என்று கூறினாள்.

போலீஸ் தரப்பு ப்ராசிக்யூடர், அந்தச் சாட்சியை எதிரியாகக் கருத வேண்டும் என்று சொல்லியும், ஜட்ஜ்

தாயியின் சாட்சியத்தை உண்மையாக ஏற்றுக் கொண்டார். என் தந்தையையும் என்னையும் திட்டிப் பேசியவள் வாக்கு மூலத்தை எனக்குச் சாதகமானதாக எடுத்துக் கொள்ள முடியாது என்று தீர்ப்பளித்தார்.

முடிவில் தாயியின் சாட்சியத்தைக் கொண்டே நான் விடுதலையாக்கப் பட்டேன்.

வீட்டுக்குத் திரும்பியபோது தந்தையின் சாமான்கள் எல்லாம் ஜப்தியாக்கப்பட்டு விட்டன. எங்கு செல்வது, எப்படிப் பிழைப்பது என்று புரியாமல் தவித்தேன்.

இரவு வேளையில் டேனியல் தாமஸ் என்னைத் தேடி வந்தார். அவ நூறு ரூபாய் பணமும், சென்னையிலுள்ள அவர் உறவினருக்கு ஒரு கடிதமும் எழுதிக் கொண்டு வந்து கொடுத்தார்.

''நீ தண்டனை அடையாது தப்பியது தாயியின் சாட்சியத்தால்தான்!'' என்று கூறிவிட்டு, ''தாயி உன்னைப் பார்க்க வந்திருக்கிறாள்'' என்று கூறினார்.

அடுத்த வினாடி தாயி அறையினுள் ஓடி வந்து என்னைக் கட்டிக்கொண்டாள். 'ஓ'வென்று அழுதாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

''கண்ணு சீதா, உங்கப்பாவையும் உன்னையும் வாய்க்கு வந்தபடி பேசிட்டேன். மன்னிச்சுடு கண்ணு! அப்படிப் பேசினாத்தான் நீ பிழைப்பேன்னு தாமஸ் சொன்னான். இறந்துபோன புண்யாத்மாவை திட்டினா என்ன, உயிரோடு இருக்கிற நீ பிழைச்சாப் போறும்னு உனக்கு எதிராப் பேசினேன். உங்கப்பா சொர்க்கத்திலே இருந்தபடி என்னை வாழ்த்துவாருன்னு நினைக்கிறேன். கண்ணு, என்னை நன்றியில்லாதவள்னு நினைக்காதே! நீ பட்டணம் போயி இரு. இந்தக் கேஸ் அமளி முடியட்டும். நான் சத்தமில்லாமல் வந்து உனக்குத் துணையா இருக்கேன். உனக்குச் சுமையா இருக்க மாட்டேன்! என் மகனுக்குச் சேர வேண்டிய பணம்

ஐயாயிரம் ரூபாய் இத்தனை வருஷம் கழித்து இப்போ தான் வசூலாகி வந்திருக்கு. அதை வச்சு உன்னை ஓரளவுக்குக் காப்பாற்றுவேன் கண்ணு!'' என்றாள்.

டேனியல் தாமஸும் தாயியும் சேர்ந்து செய்த நாடகம், என்னைக் காப்பாற்ற வேண்டி நடித்த நாடகம் என்பது அப்போதுதான் புரிந்தது. என் வாழ்வில் அவசரப் பட்டு இரண்டாவது முறையாக ஒருவரைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டு விட்டேன் என்று புரிந்து கொண்டேன்.

அன்று இரவு ரயிலிலேயே நான் மதுரைக்குப் புறப் பட்டேன். டேனியல் தாமஸ், ஸ்டேஷன் வரை வந்தால் சந்தேகம் ஏற்படும் என்று சொல்லி என்னிடமிருந்து விடை பெற்றுக் கொண்டார்.

''அண்ணா! உங்கள் உதவியை நான் வாழ்நாள் வரை மறக்க முடியாது!'' என்று சொன்னேன். அவரை 'அண்ணா' என்று அழைத்தபோது, அவர் தீண்டாத வகுப்பு ஹிந்துவாக இருந்து கிறிஸ்தவனாக மாறியவர் என்று எனக்குத் தோன்றவில்லை.

மதுரை ஸ்டேஷன் வந்ததும், நள்ளிரவு, தூக்க மின்மை, லாக்கப் வாசம், உடல் சோர்வு எல்லாமாகச் சேர்ந்து என்னை ஆட்டியது. ரயிலிலிருந்து ப்ளாட் பாரத்தில் இறங்கியதும், இரண்டு அடிகள்தான் வைத் திருப்பேன். உடனே என் கால்கள் தள்ளாடின. அப்படியே ஆடி விழுந்தேன்.

என்னை இரண்டு கரங்கள் தாங்கிப் பிடித்தன. அவைதான் என் எதிர்கால வாழ்வில் மிக முக்கிய இடம் கொண்ட உத்தமரின் கரங்கள்!

# 10

"பெரும்பான்மையோரது வாழ்வு இன்ப வளைவுகளோ, துன்பக் கோணங்களோ இல்லாத நேர்க்கோடாகச் சென்று கொண்டிருக்கும்! காலையில் சிற்றுண்டி, நடுப்பகல் உணவு, மாலை சினிமா, சங்கீதம் பொழுது போக்கு, இரவு தூக்கம் என்று வாழ்வது நேர் கோடு வாழ்வு. அல்லது சமவெளி வாழ்வு என்று கருதலாம். எதிர்பாரா இன்ப மயக்கம் தரும் மலையுச்சிகள் இராது!

"துக்க சர்ப்பங்கள், ஏமாற்றுக் கரடிகள், கருணையற்ற காண்டா மிருகங்கள் நெளிந்து ஊடுகின்ற பள்ளத் தாக்குகள் இராது.

"இன்று இரவு எதிர்பார்ப்பது நாளை காலை நடக்கும்! வருடத் தொடக்கமான சித்திரையில் போடும் திட்டம் பங்குனிவரை நடக்கும். அதிர்ச்சிகளுக்கு இடம் இராது!

"கமலா! என் வாழ்வு அப்படித்தான் இதுவரை நிகழ்ந்து வந்தது. என் தந்தையோடு தூத்துக்குடிக்குச் சென்ற அன்றுதான், வாழ்விலே திடீர் வளைவுகள், கோணங்கள் ஏற்பட்டன! ஒன்றன் பின் ஒன்றாக அதிர்ச்சிகள் என்னைத் தாக்கி என் மனது, நரம்புகளைக் குழப்பி என்னைச் சக்தியற்றவளாக்கி, கால்கள் தள்ளாடி, பிளாட்பாரத்தில் விழச் செய்தன என்று நினைக்கிறேன்.

"அதற்கப்புறம் அவ்வளவு கொடுமையும் அதிர்ச்சியும் நிறைந்த நாட்கள் கடந்த ஒரு வாரத்தில்தான் கமலா!

"என் கணவர் வெளிநாடு செல்லும்போது என்னை வருந்தி வருந்தி அழைத்தார். நான் அவருடன் சென்றிருந்தால் இந்தக் கஷ்ட காலத்தை, இந்தச்

சோதனைப் புயலை, நான் சந்திக்கத் தேவையில்லை யல்லவா!'' என்றாள் சீதா.

''சோதனைகள் ஏற்படும்போதுதான் நமது மன வலிமை, உறுதியின் தரம் தெரிகிறது. சீதா, உன் வாழ்வே அலாதி. இதில் நீ எதிர்பாராத அதிர்ச்சிகள் ஏற்படுவது போலவே, அவற்றைச் சமாளிக்க உனக்கு எதிர்பாராத உதவிகளும் கிடைக்கின்றன!''

''உன்னைப் பொறுப்பில்லாமல் உன் தந்தை பணம் பிரட்டி வளர்த்து விட்டார். கள்ளக் கடத்தல் கேஸில் இன்ஸ்பெக்டர் தாமஸும், தாயியும் சேர்ந்து நாடகமாடி உன்னை விடுவித்து விட்டார்கள். இன்ஸ்பெக்டர் நமசிவாயம் உன்னைக் கற்பழிக்க முனைந்தபோது கூடக் கடவுள் தாமஸை அனுப்பிக் காப்பாற்றி விட்டார் இன்று ரங்கன் இறந்து கிடக்கும் போது நான் இங்கு தோன்றி, ரங்கன் உடலை எடுத்துச் சென்று பெட்டிக் கடையில் போட்டுவிட்டேன்!'' என்றாள் கமலா.

''என் அதிர்ஷ்டத்தைப் பார்த்துப் பொறாமைப் படுகிறாயா கமலா?'' என்று சலித்துக் கொண்டாள்.

''ஆனால் ஒன்று நீ சொல்வதில் உண்மை இருக்கு கமலா. இதுவரையில் என் வாழ்வில் நிகழ்ச்சிகள் தானாக நடந்து போயிருக்கின்றன. நான் ஒரு விஷயத்தை என் திட சித்தத்தால் உருவாக்கினேன் என்று கிடையாது. ஒரு விதத்தில் நான் கால வெள்ளத்தில் மிதந்து செல்லும் ஒரு காகிதப் படகுபோல்தான் இருந்திருக்கிறேன்.''

''உன் உறுதி, சாமர்த்தியம் இவற்றையெல்லாம் சோதிக்கத்தான் இந்த ரங்கன் விஷயம் நடந்திருக்கிறது; நாளைக்குப் போலீஸார் வரலாம்; அவர்கள் இது பற்றி விசாரிக்கலாம். அப்போதெல்லாம் நீ உறுதியாக மனம் தளராமல் இருக்க வேண்டும் சீதா!'' என்று கமலா சொல்லும்போதே சீதா நடுங்கினாள்.

''ஆம் கமலா, என் கணவருக்கு இந்த ஆதி கால சரித்திரமோ, என் பூர்வ கதையோ தெரியாது. அவருக்கு ஒரு நாளும் தெரியக்கூடாது!'' என்று சீதா சொல்லும் போதே அவள் விரல்கள் நடுங்கின.

''ஆமாம், ஏதேதோ பேசுகிறாய், உன்னைப் பிளாட் பாரத்தில் தூக்கியவர் யார் என்று சொல்லவில்லையே!'' என்று கேட்டாள் கமலா.

''அதைச் சொல்லவும் வேண்டுமா? அவர்தான் என் கணவர் சத்யன். என் தந்தை என்னை அவரிடம், ஆவி நிலையில் இருந்து ஒப்படைத்தது போல் ஆகிவிட்டது.

''நான் மயங்கி விழுந்ததும், அவர் என்னை ரிடயரிங் ரூமுக்குத் தூக்கிச் சென்று சிகிச்சை செய்தார். மறுநாள் காலை நான் ரிடயரிங் ரூமில் கண் விழித்தேன். அவர் என்னிடம் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொண்டார். அவர், என்னை யார் என்று கூடக் கேட்கவில்லை. அந்தக் கேள்வி கேட்டால் கூட என் மனம் வேதனைப்படும் என்று சும்மா இருந்து விட்டார்.

''அவரது களையான முகத்தைப் பார்த்த பின் எனக்கு அவரிடம் நான் கள்ளக் கடத்தல் கேஸிலிருந்து விடுதலையாகி வந்தவள் என்று சொல்லவே துணிவில்லை! மதுரைக்கும் திருநெல்வேலிக்கும் வெகு தூரமில்லை. மேலும் பத்திரிகைகளில் 'பாங்கர்கேஸ்' என்று செய்திகள் வந்தபடி இருந்தன. அவர் பார்த்துவிட்டு என்னை ஏதாவது கேட்டால் எப்படிப் பதில் சொல்வது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். சீக்கிரமே மதுரையி லிருந்து சென்னை வந்துவிட வேண்டுமென்று விரும் பினேன்.

''மறுநாள் அவரே முதலாவது வகுப்பு வண்டியில் டிக்கட் வாங்கி, என்னோடு சென்னைக்குப் புறப்பட்டார். ரயில் வண்டியானது ஒரு கூப்பே வண்டி. இரண்டே இரண்டு இருக்கைகள் உள்ள வண்டி.

''ரயில் மதுரையை விட்டுப் புறப்பட்டதும், அவரும் நானும் மூடப்பட்ட அறையில் தனியாக இருந்தோம். முதலிரவு அன்று இருக்கும் தனிமை அன்று இருந்தது. அவரும் என் நிலையில்தான் இருந்தார் என்று தெளிவாகத் தெரிந்தது.

''ரயில் திருச்சியை நெருங்கும் வரையில் கண்களை மூடிப் படுத்திருந்தேன். ரகஸ்யமாக அவரைக் கவனித்து வந்தேன். அவர் என்னையே கவனிப்பதையும், அவர் உதடுகள் உணர்ச்சியால் துடிப்பதையும் கண்டேன்.

''எனக்கு என்னமோ அவரோடு தனிமையில் இருக்கும்போது பயம் ஏற்படவில்லை! ஒருவித இன்பம் நிறைந்த கூச்சம்தான்! எனக்கு ஒருவித நோய் இல்லாத போதும், ஏதோ பலமில்லாதவள் போல் நடித்தேன். அந்த வகையில் தானே அவருடைய அநுதாபத்தைப் பெற முடியும்! அவர் பல கேள்விகள் கேட்காமல் இருக்க முடியும்.

''இந்தச் சமயத்தில் திருச்சி ஜங்ஷனில் ரயில் நின்றது. அவர் சென்று உணவும், சில பத்திரிகைகளும் வாங்கி வந்தார். நான் பிளாட்பாரத்தில் இறங்கவில்லை. திருச்சியிலேயே பல வருஷங்கள் படித்தவள், யாராவது என்னை அடையாளம் கண்டு கொண்டு என்னிடம் என் தந்தையின் முடிவு பற்றி விசாரித்தால் என்ன ஆகுமோ என்ற பயத்தால் பிளாட்பாரத்தில் நான் தலை காட்டவில்லை.

''மெள்ள எழுந்து அவருக்கு இலைபோட்டுப் பரிமாறினேன். அதில் எனக்குப் புரியாத ஒரு இன்பம் இருந்தது. அவர், நான் உடலைச் சிரமப்படுத்திக் கொள்ளக்கூடாது என்று சொன்னார். மறுநாள் சென்னை சென்றால் அவர் எங்கோ, நான் எங்கோ! அல்லது உண்மையிலேயே நான் திருநெல்வேலி பாங்கர் பிள்ளையின் மகள் என்று தெரிந்தால், அவர் நான் இருக்கும் திசை கூடத் திரும்பப் போவது இல்லை. என் கைவசம் இருப்பது மறுநாள்

காலை எட்டு மணி வரை. அந்தக் கால அளவிற்குள் இந்த மனிதரிடம் நெருங்க வேண்டும் என்று ஆசை எழுந்தது. என் மனத்தில் எழுந்த ஆசை, சிறிதுகூட வெட்கமில்லாத ஒரு ஆசையாக இருந்தது எனக்கே ஆச்சர்யமாக இருந்தது.

''கமலா, நமசிவாயம் அன்று என்னிடம் முரட்டுத் தனமாக நடந்து கொண்ட மாதிரி இந்த இளைஞர் என்னிடம் நடந்து கொள்ளக்கூடாதா என்று நினைத்தேன். மதுரை ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் அவர் கைகளிலே மயங்கி விழுந்திருக்கிறேன். ரயில்வே ஸ்டேஷன் ஓய்வு அறையிலே தனிமையில் அவர் வசம் இருந்திருக்கிறேன். என்னை டாக்டர் என்ற முறையில் பரிசோதித்திருக்கிறார். ஆனால் பண்பு குன்றாமல் ஏன் இப்படி இருக்கிறார் என்று விபரீதமாக நினைத்தேன். நான் பாங்கர் பிள்ளையின் மகள், கள்ளக் கடத்தல் ரங்கன் கூட்டாளி என்று அவர் உணருவதற்குள் ஒரு முறை அவரை அன்போடு அணைத்துவிட்டு இறந்தால் கூடப் பரவாயில்லை என்று நினைத்தேன்.

''நான் அர்த்தமில்லாத பலவற்றை நினைத்தேன். சாப்பாட்டுடன் வாங்கி வந்திருந்த தினசரிப் பேப்பரில் கேஸ் விபரங்கள் கொட்டை கொட்டையாக வெளியாகி யிருந்தன. அதில் ரங்கன் போட்டோவும், டேனியல் தாமஸின் போட்டோவும் வெளியாகி இருந்தன. இன்னொரு போட்டோ நானும் டேனியல் தாமஸும் நீதி மன்றத்தை விட்டு வெளியே வரும் போட்டோ. அதில் என் முகம் பக்கவாட்டில்தான் தெரிந்தது. என் உடலின் பூரிப்பு மட்டும் கண்ணைப் பறிக்கும்படி பக்க வாட்டில் எடுக்கப்பட்டிருந்த போட்டோ, அந்தப் போட்டோவை சத்யன் பார்த்துவிட்டால் என்ன ஆகும் என்று பயந்தேன். அவர் பார்ப்பதற்குள் அவரை ஒரு முறையாவது தொட வேண்டுமென்ற ஆசை எழுந்தது.

'சாப்பிட்டு முடிந்ததும், நான் மறுபடியும் படுத்துக்

கொண்டேன். சாப்பாட்டுப் பாத்திரங்களை ரயில்வே உணவு விடுதிப் பையன் எடுத்துச் சென்றான்.

''அவர் எழுந்து பாத்ரூம் சென்றார். திரும்பும் போது ஸ்பைஜாமாவும் பனியனும் அணிந்து வந்தார். அவர் உடல் வனப்புடையது மட்டுமல்ல, ரங்கன் உடலைப் போல் வலிமையுடையது என்றும் நினைத்துக் கொண்டேன். இவரைப் பற்றி நினைக்கும் போது அந்தப் பாவியைப்பற்றி ஏன் நினைக்க வேண்டும்? என்னையே நான் நொந்து கொண்டேன்.

ரயில் வண்டி, திருச்சியைக் கடந்தது. திருச்சி டவுன் வந்ததும் ஒரு முறை உச்சிப் பிள்ளையார் கோவிலை, ரயில் ஜன்னல் வழியாகப் பார்த்தேன்.

அவர், என் அருகில் வந்தார். 'விளக்கை அணைத்து விடலாமா?' என்று கேட்டார்.

''அவர் பார்வை என் மார்பின் மீது நின்றது. அவர் குரலில் ஒருவித நடுக்கம் இருந்தது. 'அணைத்துவிடுங்கள்' என்று வாய் திறந்து சொல்லாமல் தலை அசைப்பால் தெரிவித்தேன்.

''விளக்கு அணைக்கப்பட்டது. ரயில் தடதடவென்று காவேரிப் பாலத்தில் சென்று கொண்டிருந்தது. அவர், அப்பர் பர்த்தில் ஏறி உட்கார்ந்தார். அவர் விட்ட பெரு மூச்சு, அவர் ஏதோ போராட்டத்தில் இருக்கிறார் என்பதைத் தெளிவாக்கியது.

''நான் ஒன்றும் தெரியாத பசுப்போல் படுத்திருந் தேன். என் மனத்தின் வெறி ஒரு சுடுகாட்டுப் பேய்போல் அவர் உடலை உண்ணத் துடிக்கிறது என்பதை அவர் உணர்ந்திருக்க மாட்டார்.

''அவர் நடுநடுவே மேலே இருந்து தலையை நீட்டிப் பார்த்ததிலிருந்து, அவர் முற்றிலும் பெண்ணுக்குப் பழக்கப்படாதவர் என்று தெரிந்தது. அவர் மனத்தில் ஒரு அறப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று தெளிவாகத் தெரிந்தது. அவர் அறவழி செல்லாது ஆசை வழி செல்லக்கூடாதா என்று வேண்டினேன். என்

உடல் அவர் அணைப்புக்குத் துடித்தது...'' என்று சொல்லிவிட்டு, கமலாவைப் பார்த்தாள்.

கமலா ஒரு விதமாகச் சிரித்தாள்.

''என்ன கமலா என்னை அப்படிப் பார்க்கிறாய்? என்னைக் கேவலமானவள் என்றுதானே நினைக்கிறாய்? அன்றிரவு ரயிலில் நான் நினைத்தது இவ்வளவுதான். அப்பா போன பின் என் வாழ்வு போய் விட்டது. அழகும் குணமும் உள்ள லட்சியக் கணவனாகக் கூடியவர் என்னோடு பயணம் செய்கிறார். இவரை நான் திருமணத் தால் அடைய முடியாது. திருமணம் என்றால்தானே கேள்விகள், விசாரணை எல்லாம்? என் தந்தையின் யோக்யதை உலகத்திற்குத் தெரிவது எல்லாம் தொடரும்' என் திருமணம் நடக்காது! ஒரு முறை- இன்றிரவு இரவோடு மனைவியாகி விட்டால், அப்புறம் நிம்மதியாக இறந்துவிடலாம் என்று நினைத்தேன்.

''டேனியல் தாமஸ் கொடுத்த லெட்டரை எடுத்துச் சென்று, சென்னையில் தங்கி வாழ்க்கை தொடங்கி வாழ முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

''எனக்குத் தேவையானது இவருடைய அணைப்பு, இன்பம், வாழ்க்கையில் சில மணி நேரங்கள்...அதை எப்படி அவரிடம் சொல்ல முடியும்? நான் இறந்த பின்பும் அவர் என்னை நல்லவளாக நினைக்க வேண்டும் என்ற ஆசையும் எனக்கு இருந்தது.

''எழுந்து நின்று அவர் தூங்குகிறாரா என்று பார்த் தேன். அவர் மனப்போராட்டத்தில் அறம் வென்று விட்டது. அவர் இன்று என்னை நெருங்க மாட்டார்; நிம்மதியாகத் தூங்கப்போகிறார் என்பது புரிந்தது.

''என் ஆசைகளில் மண் விழுந்தது போல் இருந்தது. அவரை எப்படி மறுபடி காந்த வலைக்கு இழுப்பது என்று தெரியாமல் யோசித்தேன்.

''ஒரு முடிவுக்கு வந்தேன். என் ஆடையில் சில மாறுதல்கள் செய்து கொண்டேன். பிறகு தொடர்ந்து இருமினேன்.

அவர் எழுந்து விளக்கைப் போட்டார். அப்போது என் மார்பை சன்னமான சேலை மட்டுமே மூடியிருந்ததை அவர் பார்த்திருக்க வேண்டும்.

''அவர், 'என்ன தண்ணீர் வேண்டுமா?' என்று கேட்ட கேள்வியில் நடுக்கம். அவர் என்னை ஆடையில்லாத நிலையில் பார்த்து விட்டார் என்று தெரிந்தது. 'தண்ணீர் வேண்டாம். கொஞ்சம் புழுக்கமாக இருக்கிறது' என்று சொல்லி ஜன்னலைத் திறக்கப்போனேன்.

''திறக்க முடியாமல் திண்டாடுபவள் போல் நடித்தேன். கீழே இறங்கி வந்த அவர் உதவுவதுபோல் நெருங்கினார். அப்போது அவர் கண்கள் என் உடல் மீது நின்றன. அவர் கண்கள் வெறியால் சிவந்திருந்தன.

''ரங்கன் என்னைப் பார்த்ததுபோல் பார்த்தார். ரங்கன் என்னைப் பார்த்தது வெறுப்பைக் கொடுத்தது. இவர் பார்த்தது என் உடலை இன்பத்தால் நெருப்பாக்கியது.

''அவர் ரயில் ஜன்னலைத் தூக்க, என்மீது சாய வேண்டியிருந்தது. அவர் முழங்கை என் மார்பை அழுத்தியது.

''ஜன்னலைப் பொருத்திவிட்டு என்னைப் பார்த்தார். அடுத்த வினாடி ஒரு மிருகம்போல் பாய்ந்து விளக்கை அணைத்தார். என் அருகில் வந்தார். என் தோள்களைப் பற்றினார். என் உள்ளம் இன்பத்தால் துடித்தது. ஆனால் உதடுகள் மட்டும் 'அய்யோ என்னங்க இது!' என்றது.

''அவரோ 'பேசாமல் இரு' என்று ஆத்திரத்துடன் சொன்னார். அவர் உதடுகள் என் உதடுகளில் அழுத்தின. 'வேண்டாங்க. இது தப்பு!' என்று சொல்லி உதட்டைத் திருப்பினேன். 'சும்மா இரு?' என்று சொல்லி முரட்டுத்தனமாக அறைந்தார். பயத்தில் பேசாமல் இருப்பவள்போல் நடித்தேன். ஆனால் என்னால்

அதிக நேரம் சும்மாவும் இருக்க முடியவில்லை. அந்த இன்பப் போதையில் நானும் பங்கெடுத்துக் கொண்டேன். புரியாத, தெரியாத இன்ப வெள்ளத்தில் மிதந்தேன். உடலெடுத்த பலனை அனுபவித்தேன்.

''இனிமேல் யாரும் என்னைக் கன்னிப் பெண் என்று சொல்ல முடியாது! நான் பெரியவளாகிவிட்டேன்? உலகம் தெரிந்தவளாகிவிட்டேன் என்று உணர்ந்தேன்.

''அவர் என்னை விட்டுப் பிரிந்து மேல் சீட்டில் உட்கார்ந்தார். விளக்கைப் போட்டார்.

''நான் வேறு புறம் திரும்பிப் படுத்துக்கொண்டேன்.

''அவர், 'சீதா நீ உண்மையிலேயே ஒரு கன்னிப் பெண். டாக்டராகிய எனக்குத் தெரியும். உன் புனிதத் தன்மையை என்னிடம் இழக்கும்படி ஆகிவிட்டது!' என்று சொன்னார்.

''அவர் எப்படி நான் கன்னி என்று தீர்மானித்தார் என்று கேட்கவில்லை. இன்பம் தீர்ந்த பின் என் முன்னே நின்றது இருண்ட எதிர்காலம். மரணம்தான் என் முடிவாகத் தோன்றியது.

''நான் அவருக்குப் பதில் சொல்லாமல் படுத்திருந்தேன். அவர் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தார்.

''என்னையும் அறியாமல் எனக்கு அழுகை வந்தது.

''வண்டி விழுப்புரம் நெருங்கியது. அவர் அயர்ந்து தூங்கியபடி இருந்தார்.

''நான் மெள்ள ரயிலை விட்டு இறங்கினேன். பிளாட் பாரத்தில் போடப்பட்டிருந்த பெஞ்சில் வந்து உட்கார்ந்தேன்.

''ரயில் புறப்படப்போகும் சில விநாடிகளுக்கு முன் அவர் ரயிலை விட்டு இறங்கி என்னைத் தேடினார். நான் தண்ணீர்க் கம்பத்தின் பின்பு மறைந்து வெளியே தெரியவே, அவர் என்னைக் கண்டு கொண்டு அருகே வந்து இழுத்தார்,

பேசாமல் சென்றேன்.

'ஏன் வெளியே ஓடிப்போனே?'

'நான் வாழ விரும்பலே!'

'சாகப் போறியா?'

'ஆமாம்!''

'என் மேலே கோபமா?'

'கோபமில்லை...'

'பின்னே ஏன் நீ சாகணும்?'

'அதைத் தவிர எனக்கு வழியில்லே! நான் ஒரு அனாதை! எனக்கு எதிர் காலம் இல்லை!'

'சரி சரி; படுத்துத் தூங்கு!'

''அன்றிரவு பூராவும், நான் வெளியே ஓடிசென்றுச் விடுவேனோ என்று காவல் காத்திருந்தார். அந்தப் பேப்பரில் வந்த கேஸைப் படித்தார். பத்திரிகையில் இருந்த படத்தைப் பார்த்தார். மனம் குழம்பியிருந்த நிலையில் அவர் என்னை அடையாளம் கண்டுகொள்ள வில்லை.

படித்து முடித்தபின் 'என்ன கேஸ்! என்ன மனிதன்!' என்றார்.

''நான் 'யாரைச் சொல்றீங்க?' என்று கேட்டேன். 'இந்த பாங்கர் மிஸ்டர் பிள்ளையைத்தான் சொல்றேன். ஒரு மாதத்துக்கு முன்னால் எனக்குக் கடிதம் எழுதி இருந்தார். என் வாழ்க்கையில் ஒரு முக்கியமான விஷய மாக என்னிடம் பேச வேண்டுமென்றும், என்னை திருநெல்வேலிக்கு வரும்படியும் எழுதியிருந்தார். நான் வரும்போது அவர் கள்ளக் கடத்தல் 'ரெயிடில்' இறந்து விட்டார். என்னிடம் எதைச் சொல்ல விரும்பினார்னு புரியலே. போலீஸ் ஸ்டேஷன்லே அவர் ரிக்கார்ட்டு களைப் பார்வையிட்டேன். ஒரு தகவலும் தெரியலே.

அவர் டைரியிலே, மிஸ்டர் சத்யன் அவனுடைய பூர்வோத்திர தொடர்புகள், என்று எழுதியிருந்தது. எனக்கு ஒன்றுமே புரியலே!' என்றார்.

'எனக்கோ 'நீங்க எங்க அப்பாவைப் பார்க்கத்தான் வந்தீங்களா!' என்று கேட்க மனம் துடித்தது. ஆனால் நாவை அடக்கிக்கொண்டேன். இருந்தாலும் 'பாங்கர் மிஸ்டர் பிள்ளையின் மகளைப் பார்த்திருக்கிறீர்களா!' என்று கேட்டேன்.

அவர், ''பாங்கர் பிள்ளை ஒரு அயோக்யன், அவன் மகள் பின் எப்படியிருப்பாள்? அவளும் மானங்கெட்டவளாகத்தான் இருப்பாள்! இந்தப் பிள்ளைக்கு என் பூர்வோத்திரம் பற்றி என்ன தெரிந்திருக்க முடியுமென்று ஆச்சர்யப்பட்டேன். இன்னும் ஆச்சர்யப்படுகிறேன்!' என்று கூறி முடித்தார் சத்யன்.!'

## 11

சென்னை வந்ததும், எனக்கு அவரைப் பிரியவே மனவேதனையாக இருந்தது.

இரவு என்னிடம் மிருகத்தனமாக நடந்து கொண்டது பற்றி அவர் வேதனைப்பட்டிருக்க வேண்டும். தனிமையில் என்னை விட்டால், நான் என் வாழ்வை முடித்துக் கொள்வேனோ என்று பயந்தார்.

''நான் உன்னை ஒரு ஹோட்டலில் வைத்திருக்கிறேன்'' என்றார்.

''எதற்காக?'' என்று அவரிடம் கேட்டேன். அவர் முகம் சிவந்தது. ''என் உடல் தேவைகளுக்காக உன்னை ஹோட்டலில் வைக்க விரும்பவில்லை. என் வீட்டுக்கு அழைத்துப் போயிருப்பேன். திடீரென்று உன்னை என் வீட்டுக்கு அழைத்துப் போனால், நான் என் தாயிடம் விளக்கம் தர வேண்டும். உண்மையான விளக்கம் தரும் நிலையில் நான் இப்போது இல்லை. இரண்டு மூன்று

நாட்கள் தேவை. என் தாயிடம் நான் பொய் சொல்ல விரும்பவில்லை!'' என்று சொல்லிவிட்டுத் தரையைப் பார்த்தபடி நின்றார்.

ரயில்வே ஸ்டேஷன் போர்ட்டர் இருவர் சாமான்களையும் ஒன்று சேர்த்து ஒன்றன்மேல் ஒன்றாக வைத்தான்.

நான் உடனே குறுக்கிட்டேன். ''போர்ட்டர், என் பெட்டி படுக்கையை எடுத்துத் தனியாக வை!'' என்றேன்.

அவன் எங்கள் இருவரையும் ஒரு விதமாகப் பார்த்தான். பிறகு என் பெட்டியையும் படுக்கையையும் தனியாக எடுத்து வைத்தான்.

என் சாமான்களை வேறு போர்ட்டர் தலையில் ஏற்றி விட்டு, நான் பிளாட்பாரத்தில் நடக்க ஆரம்பித்தேன். சத்யனும் மௌனமாக என் பின்னே நடந்து வந்தார்.

எழும்பூர் ஸ்டேஷனில் வெளியே வந்ததும் நான் தனியாக டாக்ஸி ஒன்று பேசி, அதில் ஏறப் போகும் போது சத்யன் சொன்னார், ''ஒரு வார்த்தை சீதா...''

எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் அவரைத் திரும்பிப் பார்த்தேன். அவரது கண்கள் கலங்கியிருந்தன.

''நீ சென்னையில் எங்கு தங்கப் போகிறாய்?'' என்று கேட்டார்.

''அது உங்களுக்குத் தெரிய வேண்டுமா?'' என்று கேட்டேன்.

''தயவு செய்து நான் நேற்று இரவு நடந்து கொண்டதை மறந்துவிடு. என் வாழ்வில் நான் மிருகத்தனமாக நடந்துகொண்டது அதுதான் முதல் தடவை. பொதுவாக நான் நிதானம் இழப்பவன் அல்ல. ஒரு மயக்கம், ஒரு கவர்ச்சி என்னை அப்படி ஆக்கி விட்டது. உன் எதிர்காலத்தில் என்னைப் பிணைக்கவும் அது நேர்ந்திருக்கலாம்! நீ எங்கு தங்குகிறாய் என்று என்னிடம் சொல்லக் கூடாதா?'' என்று கேட்டார்.

நான் ஒன்றும் பேசாமல் இருந்தேன்.

அவர், "நீ இருக்கும் இடத்தைச் சொல்லவேண்டாம். ஒரு உறுதிமொழி மட்டும் கொடு. எந்தக் காரணத்தைக் கொண்டும் நீ உன் உயிருக்கு ஆபத்து விளைவித்துக் கொள்ளாதே! உன் உயிர் உன்னுடையது மட்டுமல்ல. அது என்னையும் சேர்ந்தது என்று தெரிந்துகொள்" என்று சொன்னார்.

அவர் சொல்லும்போதே அவர் குரலில் அன்பின் நடுக்கம் தெரிந்தது.

"அந்தப் பயம் உங்களுக்கு வேண்டாம்!" என்று கூறி விட்டு நான் டாக்ஸியில் ஏறிக்கொண்டேன்.

டாக்ஸி நகர்ந்தது. அவர் டாக்ஸியையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்.

நான் டேனியல் தாமஸ் கொடுத்த விலாசத்துக்கு வந்தேன். அங்குள்ள பெரியவரிடம் கடிதத்தைக் கொடுத்தேன்.

அவர் வீட்டிலேயே தங்கினேன். அந்த வீட்டு அம்மையார் ஒரு வாரத்தில் எனக்கு ஒரு நல்ல இடத்தில் வேலை வாங்கித் தருவதாகச் சொன்னார்கள்.

ஆனால் எனக்கு வேலைக்குப் போகும் தேவையே ஏற்படவில்லை. நான் அங்கு வந்து தங்கிய இரண்டு நாட்களில் டாக்டர் சத்யன் என்னைத் தேடிக்கொண்டு நான் தங்கியிருந்த வீட்டுக்கே வந்து விட்டார்.

அவர், நான் சென்ற டாக்ஸி நம்பரைக் குறித்துக் கொண்டு, மறுநாள் அவனைத் தேடிச் சென்று, என்னை இறக்கிவிட்ட விலாசத்தை விசாரித்துக் கொண்டு என்னைப் பார்க்க வந்தார்.

நான் எப்படி அந்த இரண்டு நாட்களும் அவரையே நினைத்துக்கொண்டு இருந்தேனோ, அப்படியே அவரும் என்னை நினைத்துக்கொண்டிருந்திருக்கிறார் என்பது அவரைப் பார்த்ததும் தெளிவாயிற்று.

டாக்டர் சத்யன் வந்தபோது நான் தங்கியிருந்த அந்த வீட்டு அம்மையார் வீட்டில் இல்லை.

சத்யன் என்னைத் தன்னுடன் வந்து அவருடைய தாயைச் சந்திக்கும்படி அழைத்தார். என் மனம் துள்ளியது ஆசையால்! ஆனால் வெளிக்காட்டிக் கொள்ள வில்லை.

அன்று மாலைதான் இந்தச் ''சொர்க்கம்'' என்ற வீட்டுக்குள் நுழைந்தேன். சத்யனுடைய தாய் என்னை என்ன நினைப்பாளோ, எப்படி நடத்துவாளோ என்ற பயம் பற்றிக் கொண்டது.

சத்யனின் தாய் வெண்மையான புடவை அணிந்து, நெற்றியில் விபூதியுடன் காட்சி அளித்தார்கள். அந்த தெய்வீகப் பார்வையின் முன் நடுங்கினேன்.

அந்த அம்மாள் இருந்த அறை நெடுக சந்நியாசிகள் படங்களும், மதத் தலைவர்களின் படங்களுமாக இருந்தது.

சத்யன், என்னைத் தாயிடம் அறிமுகம் செய்துவிட்டு நகர்ந்து விட்டார். அந்த அறையில், அந்த அம்மாளோடு நான் தனியே விடப்பட்டேன். பயந்து தலை குனிந்தபடி நின்றேன். என்னை, என்னுடைய குடும்பம், தந்தை பற்றியெல்லாம் கேட்பார்கள் என்று பயந்து நின்றேன். ஆனால் அம்மையார் அப்படி ஒன்றும் கேட்க வில்லை.

''உனக்குச் சத்யன் மீது ஆசையா?'' என்று ஒரு அடிப்படை முக்கியத்துவம் நிறைந்த கேள்வி கேட்டார் கள். மௌனமாக நின்றேன்.

''ஏன் பேசாமல் நிற்கிறாய்? இந்த வீட்டில் யாரும் பொய் பேசுவது கிடையாது. பொய்க்கு இந்த வீட்டில் இடம் கிடையாது. பொய் உலாவும் இடம் ஒரு நரகம்! பொய்யை நீக்கிய வீடு இது. அதனால்தான் இதற்குச் 'சொர்க்கம்' என்ற பெயர். சத்யன் மீது ஆசையா என்பதற்குப் பதில் வேண்டும்!'' என்று கேட்டார்கள்.

''ஆயிரம் விஷயங்களுக்கு ஆசைப்படுகிறோம். ஆனால் அவைகள் எல்லாம் கிடைக்கும் என்று நினைக்க முடியுமா? அதுபோலதான் நான் உங்கள் மகன்மீது ஆசைப்படும் விஷயமும்!'' என்றேன்.

''அவனுடைய நலத்துக்காக நீ உன் சுகதுக்கங்களைத் துறக்க முடியுமா?'' என்று கேட்டார்கள்.

''முடியும்! அவருக்காக நான் உயிரையும் கொடுப்பேன். ஆனால், நான் அவருடைய அந்தஸ்துக்குத் தகுதியுள்ளவள் அல்ல!'' என்றேன்.

''அந்தஸ்தை மதிப்பவள் அல்ல நான்! சத்யன் என் வயிற்றில் பிறந்த மகன் அல்ல. அவனையும் நான், சிறுவனாக இருக்கும்போது ஒரு ஆஸ்பத்திரியிலிருந்து தான் எடுத்து வந்தேன். அப்போது அவனும் ஒரு அனாதைதான்!'' என்று கூறிவிட்டு என் முகத்தைத் திருப்பிப் பார்த்தார்கள்.

''நீ அழகாகத்தான் இருக்கிறாய். அதனால்தான் சத்யன் நிதானம் இழந்து உன்னைக் கெடுத்து விட்டான்!'' என்று கூறினார்கள்.

ரயிலில் நடந்த நிகழ்ச்சியைக் கூடவா தன் வளர்ப்புத் தாயிடம் கூறிவிட்டார். இவ்வளவு படித்த மனுஷன் என்று நினைத்தேன்.

அந்த அம்மையார் என் மனத்தில் எழுந்த கேள்வியைப் புரிந்து கொண்டார்போல் ''சத்யன் எல்லாவற்றையும் என்னிடம் கூறிவிட்டான். அவனுக்குப் பொய் சொல்லத் தெரியாது! அவனுக்கு வாய்க்கப் போகும் மனைவியும் பொய் சொல்லும் மங்கையாக இருக்கக் கூடாது என்பதுதான் என் விருப்பம்!'' என்று கூறினார்கள்.

உடனே, நான் யார், என் தந்தை யார் என்று எல்லா விஷயங்களையும் கூறி விடலாம் என்று நினைத்தேன். அன்று நான் துணிந்து சத்யனின் தாயிடம்

உண்மையைக் கூறியிருந்தால், எவ்வளவோ துக்கங்களை நீக்கி இருக்கலாம். இந்த ரங்கன் வந்து என்னை மிரட்டும்போது நான் நடுங்கி இருக்க வேண்டாம். பிறகு அவனுடைய மிருக இச்சையிலிருந்து தப்ப, நான் அவனைத் துப்பாக்கியால் சுட்டிருக்க வேண்டாம். ஒரு பொய், அதை மறைக்க எவ்வளவோ பொய்களைக் கூற வேண்டி வருகிறது. பார்த்தாயா கமலா!'' என்று சொல்லி விட்டு அழுதாள் சீதா.

''சத்யனின் தாயிடம் அப்புறம் உண்மையைச் சொல்லவே இல்லையா?'' என்று கேட்டாள் கமலா.

''இல்லை, உண்மையைச் சொல்லத்தான் நினைத்தேன். ஆனால் அடுத்து அந்த அம்மையார் சொன்ன வார்த்தைகள் என் வாயை அடைத்து விட்டன.''

''அம்மையார் என்ன சொன்னார்கள்?'' என்று கமலா கேட்டாள்.

''சீதா, நீ ஏழை, அனாதை என்பதனால் குறையில்லை. நீ ஒழுக்கம் தவறாதவள். உன் குடும்பம் ஊரை ஏய்த்துப் பிழைத்தவர்கள் அல்ல என்பது ஒன்றே போதும்!'' என்றார்கள்.

அதன் பின்பு என்னால், என் தந்தை யார் என்று சொல்ல எனக்குத் தைரியம் இல்லை. அந்த அம்மாள் இறக்கும் வரையில் என் பெற்றோர் யார், நான் யார் என்று அறிய முயற்சிக்கவே இல்லை.

மறுநாள் காலை, நான் தாமஸ் சிபாரிசு செய்த வீட்டிலிருந்து இங்கு வந்து விட்டேன். அவர்களிடம் எனக்குத் தெரிந்த பந்து வீட்டுக்குச் செல்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன்.

நான், டாக்டர் சத்யனின் மனைவியாகப் போகிறேன் என்று டேனியல் தாமஸிடமோ, என் தந்தைக்குத் தெரிந்த மற்றவர்களிடமோ சொல்ல

வில்லை. என் திருமணமும் ஆடம்பரமில்லாமல் நடந்தது.

இதுவரை என் கடந்த காலத்தை ஞாபகப்படுத்தும் சின்னங்களையெல்லாம் பூராவும் வெட்டி எறிந்து விட்டேன் என்ற நிம்மதியில் இருந்தேன். என் கணவர் ஒருமுறை திருநெல்வேலி செல்லும்போது என்னை அழைத்தார். என் உடல் நிலை சரியில்லை என்று சொல்லி வீட்டிலேயே இருந்துவிட்டேன்.

ரங்கன் திடீரென்று என்னைத் தேடி வந்தபோது தான் கடந்த காலம் பூராவும் மடியவில்லை என்பதை உணர்ந்து கொண்டேன். அவனுடைய வாயை வெறும் ஆசை வார்த்தைகளால் மூடி விடலாம் என்று நினைத்தேன். அவன் என் உடலைக் கேட்டான். மற்றது தான் உனக்குத் தெரியுமே!'' என்று சீதா கூறி முடித்தாள்.

இருவரும் சில விநாடிகள் பேசாமல் இருந்தனர். கமலா சிரித்தாள். டாக்டர் சத்யன் உடல் கவர்ச்சிக்கு வசப்பட்டு சீதாவை அடைந்தாலும் எவ்வளவு நேர்மை யாகத் தன் தாயிடம்சென்று உண்மையை ஒப்புக்கொண்டு சீதாவுக்கு வாழ்வளித்திருக்கிறார்! டாக்டர் நாதனுக்கும் டாக்டர் சத்யனுக்கும் குணத்தில் எவ்வளவு வித்தியாசம் என்று நினைத்தாள்.

கமலாவுக்கு ஆண் இனத்தின் மீதே நம்பிக்கை பிறந்தது. அந்த உத்தமரை மணந்தவள் சீதா என்ற ஒரே காரணத்துக்காகவாவது, இந்த ரங்கன் கொலை வழக்கில், டாக்டர் சத்யனின் பெயர் அடிபடக் கூடாது என்று கமலா விரும்பினாள். அன்றிரவு அவள் சீதாவுடன் துணையாக அந்த வீட்டிலேயே படுத்திருந்தாள்.

மறுநாள் காலை எழுந்ததும், தினசரிகளைப் புரட்டினர். அவர்கள் எதிர்பார்த்த எந்தச் செய்தியும் வரவில்லை,

சீதாவுக்கு சும்மா உட்கார்ந்திருக்க இஷ்டமில்லை. கமலாவை அழைத்துக் கொண்டு, ரங்கன் உடலைப் போட்ட அந்தப் பெட்டிக் கடையைக் கவனிக்க வேண்டு மென்று தோன்றியது.

கமலா, அந்த இடத்துக்குச் செல்வது தவறு என்று எவ்வளவோ சொல்லியும் சீதா, கமலாவைத் தன்னுடன் வரும்படி வற்புறுத்தினாள்.

இருவரும் காலை 9 மணிச் சுமாருக்குக் காரில் புறப் பட்டு, சிந்தாதிரிப்பேட்டைத் திருப்பத்துக்கு வந்தனர்.

அந்தப் பெட்டிக்கடையருகே சிறு கூட்டம் நின்று கொண்டிருந்தது. ரங்கன் உடல் அங்கே இல்லை. ஒரு வேளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றிருப்பார்கள் என்று நினைத்தாள் சீதா.

''காரை நிறுத்தாதே! சந்தேகப்படுவார்கள்'' என்று எச்சரித்தாள் கமலா.

சீதா தன் காரைக் கடையைத் தாண்டி ஓட்டிச் சென்றாள். மறுபடியும் காரை அந்த வழியே திருப்பி ஓட்டி வந்தாள்.

இம்முறை போலீஸ் உடை அணிந்த உயரமான ஆள், கூட்டத்தின் நடுவே நின்று கொண்டிருந்தார்.

அவர் முகத்தைப் பார்த்ததும் சீதா பேயறைந்தது போல் ஆனாள். அவர்தான் டேனியல் தாமஸ்!

அதே சமயம் போலீஸ் அதிகாரியும் எதேச்சையாகக் காரின் புறம் திரும்பினார். அவர் பார்வை சீதாவின் முகத்தின்மீது லயித்தது. ஆனால் அந்தப் பார்வையில் சீதாவை அவர் அடையாளம் புரிந்து கொண்டார் என்பது தெரியவில்லை.

சீதா நினைத்தாள், ''இத்தனை வருஷங்களில் நான் எவ்வளவோ மாறிப் போயிருக்கிறேன். மேலும் கறுப்பு நிறக் கூலிங்கிளாஸ் அணிந்திருக்கும் என்னை எப்படி அவர் கண்டுகொள்ள முடியும்?''

குழப்பத்துடனே வீட்டுக்கு வந்த சீதாவுக்கு ஏன் அந்தப் பெட்டிக் கடைப் பக்கம் போனோம் என்று தோன்றியது.

கமலாவும் மறுநாள் ஆஸ்பத்திரிக்குப் போகாமல் லீவு எழுதி வைத்து விட்டு, வீட்டில் சீதாவுக்குத் துணையாக இருந்தாள்.

அன்று மாலை பேப்பரில் ரங்கன் கொலை பற்றியோ, பெட்டிக் கடையில் கிடந்து எடுக்கப்பட்ட உடல் பற்றியோ செய்திகள் வரும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் எந்தவிதச் செய்தியும் வரவில்லை என்பது சீதாவுக்கும் கமலாவுக்கும் ஆச்சர்யமாக இருந்தது.

கொலை, திடுக்கிடும் செய்திகள் பற்றி வெளியிடுவதையே தங்களுடைய பிரத்யேக அம்சமாகக் கொண்டிருந்த தினசரிகூட, ரங்கன் கொலை பற்றிய செய்தியை வெளியிடவில்லை. முதல் நாள் வீசிய புயல், அதன் காரணமாக ஏற்பட்ட சேதம் போன்ற விஷயங்கள், அதன் புகைப்படங்கள் தான் பேப்பரில் வெளி வந்திருந்தன.

''என்ன கமலா, ரங்கனைப் பற்றிய செய்தியே பேப்பரில் இல்லையே!'' என்று கேட்டாள் சீதா.

''சீதா, ஒவ்வொரு விநாடியும் நீ அதைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தால், நீயே உன்னைக் காட்டிக் கொடுத்து விடுவாய். அதைப் பற்றிப் பேசுவதை விடு. உன் முகம் பேயறைந்தது போல் இருக்கிறது. யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?'' என்றாள் கமலா.

''எப்படி மறப்பது கமலா? ஒவ்வொரு நிமிஷமும் அந்த ரங்கன் முகம்தானே தெரிகிறது! மாடி அறைக்குள் என்னால் தனியாகச் செல்ல முடியவில்லையே!'' என்றாள்.

அப்போது டெலிபோன் மணி 'கண கண'வென்று அடித்தது. சீதா திடீர் மணி சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுச் சிலிர்த்தாள்.

''வெறும் டெலிபோன் சத்தம்! அதற்கு நடுங்குகிறாயே'' என்று கூறிய படியே கமலா போய் டெலிபோனை எடுத்தாள்.

''யாரு?... ட்ரங்காலா?... யார் வேணும்?... டாக்டர் சத்யன் ஊரில் இல்லை... என்ன, மிஸ்ஸஸ் சத்யன் வேண்டுமா?'' என்று கூறிவிட்டு, சீதாவைப் பார்த்தாள்.

சீதா அப்போதிருந்த குழப்பத்தில் ''நானும் இல்லையென்று சொல்லிவிடு'' என்றாள்.

''கமலா, எங்கிருந்து டெலிபோன் கால் வந்திருக்கிறது'' என்று மீண்டும் கேட்டாள்.

''பம்பாயிலிருந்து...'' என்று பதில் உரைத்தாள் கமலா.

பம்பாயிலிருந்து யார் பேசப் போகிறார்கள் என்று சீதா சிந்தித்தாள். பம்பாயிலிருந்து வரும் டெலிபோன் நிச்சயம் கொலை பற்றியதாக இருக்காதென்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

ஒருவித மனத் திருப்தியோடு டெலிபோன் ரிஸீவரைக் கமலாவின் கையிலிருந்து வாங்கினாள். அடுத்த வினாடியே சீதாவின் முகம் மலர்ந்தது.

''ஆமாம். நான்தான் சீதா பேசறேன். என்ன!... நீங்களா!... பம்பாய் வந்துட்டீங்களா?... தெரியவே தெரியாதே... புயல்னாலே நம்ம வீட்டுக்கு எந்தச் சேதமும் இல்லை... எனக்கு ஆபத்து ஒன்றும் இல்லை... நல்லாத்தான் இருக்கேன். எப்போ சென்னை வரப் போறீங்க?... நாளைக்குக் காலைப் ப்ளேன்லேயா?... நானே ஏர்போர்ட்டுக்கு வர்ரேன் ட்ரிப் வெற்றிதானே... ரொம்ப சந்தோஷம். உங்களுக்குப் பிடிச்ச சமையல் பண்ணி வைக்கிறேன். காலையிலே லைட்டா டிபன் சாப்பிட்டுட்டுப் ப்ளேன் ஏறுங்க. ப்ளேன்லே ஒண்ணும்

சாப்பிடாதீங்க. வீட்டுக்கு வந்ததும் உடனே இலை போட்டுச் சாப்பிடலாம். என்ன, நான் சொல்றது புரிஞ்சுதா?'' என்று சிரித்துப் பேசி முடித்தாள்.

போனை வைத்துவிட்டுக் கமலாவிடம் திரும்பினாள்,

''என்ன கமலா அவர் நாளைக்கு வர்ராரு. காலையிலே பத்து மணிக்கு வந்து விடுவார். அவர் வந்ததும் அவர் பரந்த மார்பு மேலே சாய்ந்து ஒரு ஐந்து நிமிஷம் அழணும்போலத் தோணுதடி. அவர் வரப் போறார்ன்னு நினைக்கிறப்பவ எனக்குப் பெரிய அமைதியா இருக்கு. கவலையெல்லாம் நீங்கின மாதிரி இருக்கு கமலா!'' என்று குழந்தையைப் போலப் பேசிக்கொண்டே போனாள்.

''சீதா, அவர் வந்தப்புறம்தான் சோதனையிருக்கும். அவர் முன்னாலே அழுது வைக்காதே! தூக்கத்திலே ஏதாவது கனாக் கண்டு உளறி வைக்காதே! அவர் என்ன ஏதுன்னு கேள்வி கேட்டா என்ன பதில் சொல்லுவேடி? ஆரம்பத்திலே அவரிடம் உண்மையைச் சொல்லியிருந்தா வம்பில்லே. நாளைக்கு ரங்கன் மரணம் பற்றி விசாரணை வந்து அவனுக்கு அந்தக் காலத்திலே உங்கப்பாவோடு இருந்த தொடர்பு வெளியாச்சுன்னா என்னடி செய்வே? படபடப்பில்லாமல் நிதானமாக இருக்கணும் சீதா!'' என்று எச்சரித்தாள் கமலா.

சீதாவுக்கு ஏற்பட்ட சந்தோஷம் திடீரென்று மறைந்தது.

''ஆமாம் கமலா, நீ சொல்றது சரி. ஆரம்ப காலத்துப் பொய்யை மறைக்க எவ்வளவு பொய் சொல்ல வேண்டியிருக்கு பார்த்தியா...!'' என்று குழம்பிப்போய் நின்றாள்.

அப்போது வெளிப்புறம் காலிங் பெல் ஒலித்தது. கமலா, சீராளன் வந்திருப்பான் என்று ஓடிப்போய்க் கதவைத் திறந்தாள்.

அங்கே டேனியல் தாமஸ் நின்று கொண்டிருந்தார்!

அவரைப் பார்த்த சீதா கதி கலங்கி, எப்போது விழுந்து விடுவோமோ என்ற பயத்தோடு கால்கள் தள்ளாட நின்றாள். அவள் முகத்தின் அடையாளங்கள் அவருக்குத் தெரிய நியாயமில்லை.

அவரும் அவளை அடையாளம் கண்டு கொண்டிருந்தால் உடனே "சீதா" என்று அழைத்திருப்பாரே! அவர், "டாக்டர் சத்யனைப் பார்க்க வேண்டும்" என்றார்.

கமலா உடனே "டாக்டர் சத்யன் ஊரில் இல்லை" என்று பதில் சொன்னாள்.

"நீங்கள்தான் டாக்டர் சத்யனின் மனைவியா?" என்று கேட்டார்.

"இல்லை, நான் ஒரு ஹாஸ்பிடல் நர்ஸ். மிஸஸ் சத்யனின் சிநேகிதி."

"ஏன் மிஸஸ் சத்யன் பேசாமல் இருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

சீதா நடுக்கத்துடன் "உட்காருங்கள்" என்றாள்.

டேனியல் தாமஸ் மெள்ள நகர்ந்து வந்து சோபாவில் உட்கார்ந்தார். அவர் சீதாவை உற்று நோக்கினார். ஆனால் அவர் அடையாளம் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

"மிஸஸ் சத்யன், நான் ஒரு முக்கியமான விஷயமாகப் பேச வந்தேன். உங்களோடு தனிமையில் பேச வேண்டும்" என்று கூறிவிட்டுக் கமலாவைப் பார்த்தார்.

கமலா, "நான் மிஸஸ் சத்யனுக்கு மிகவும் நெருக்கமானவள். என் முன்னாலேயே நீங்கள் பேசலாமே!" என்றாள்.

"யார் முன்னால் எது பேச வேண்டும் என்பதை நான் தீர்மானிக்க வேண்டும். தயவு செய்து நீங்க கொஞ்சம் அடுத்த அறையில் இருக்கிறீர்களா?" என்றார்.

கமலா உறுதியான இன்ஸ்பெக்டரின் முகத்தைப் பார்த்தபடி குழப்பத்தோடு அடுத்த அறை நோக்கிச் சென்றாள்.

டேனியல் தாமஸ் மௌனமாக இருந்தார்.

''ரங்கன் சில மாதங்களுக்கு முன் விடுதலையானான். சில நாட்களுக்கு முன்புதான் அவன் சென்னைக்கு வந்தான்...'' என்று கூறிவிட்டு நிறுத்தினார்.

சீதா ஒன்றும் புரியாதவள் போல் ''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''சீதா! நடிப்பு போதும்! நிறுத்து. நீ இறந்த காலத்தைப் பூராவும் அறுத்தெரிய வேண்டும் என்பதற்காக, உனக்கு உதவி செய்த எனக்கு உன் திருமணத்தைப் பற்றிக்கூடக் கூறவில்லை. அது உன் சொந்த விஷயம். ஆனால் இறந்த காலத்தை மூடி வைக்கச் சிலர் கொலையையும் புரியலாம் அல்லவா?'' என்றார்.

சீதாவின் கால்கள் தள்ளாடின. அப்படியே சோபாவில் அமர்ந்தாள்.

## 13

சோபாவில் சாய்ந்த சீதா, என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள்.

கடந்த காலத்தின் தொடர்புச் சின்னமான டேனியல் தாமஸ் இந்தச் சந்தர்ப்பத்திலா தன்னை வந்து சந்திக்க வேண்டும்? டேனியல் தாமஸ் எவ்வளவு நல்லவர்! அவர் எப்படி அவளை அவளுக்கு நிகழவிருந்த பயங்கரமான விளைவுகளிலிருந்து காப்பாற்றினார் என்பது தெரியாதவள் அல்ல.

டேனியல் தாமஸ் மட்டும் தாயி என்ற கிழவியைப் போலீஸ் சாட்சியாக வைத்து சீதாவைக் காப்பாற்ற

வில்லை. என்றால், அவளுக்குச் சிறைத் தண்டனையே கிடைத்திருக்கலாம். அவள் வாழ்வு மங்கிப் போயிருக்கும்! அவள் சத்யனைச் சந்தித்து, மணந்து, இம்மாதிரியான கண்ணியம், வசதி நிறைந்த வாழ்க்கை நடத்தியிருக்க முடியாது!

டேனியல் தாமஸ் அவளைச் சிறைச் சாலையி லிருந்து காப்பாற்றியது மட்டும் இல்லை; அவளுக்குப் பணம் கொடுத்து, சீலமான நண்பரின் அட்ரஸ் கொடுத்து, ரயில் ஏற்றி அனுப்பியவர். கடமை உணர்ச்சி உள்ள போலீஸ்காரர் மட்டுமல்ல. இருதயத்தில் அவள் தந்தை யிடம் நன்றி உணர்ச்சி உடையவர்.

பெரிய இடத்தில் பொய் சொல்லித் தன் பூர்வோத் திரத்தை மறைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டமை யால், தாமஸிடமோ, அவரின் சென்னை நண்பர் களிடமோ சொல்லாமல் ஓடி வந்து சத்யனை மணந்து கொண்டாள். அதையும் அவர் வேதனையோடு எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. அதனால்தான் திருமண மாகி இத்தனை வருஷங்களில் டேனியல் தாமஸ் அவளைத் தேடவோ, அவள் இருக்குமிடம் வந்து பார்க்கவோ முயற்சிக்கவில்லை. அவர் நினைத்திருந்தால் அவள் படத்தைப் பேப்பரில் பிரசுரித்து, அவளைத் தேடியிருக்கலாம். அப்போது அவள் கணவன் சத்யன், சத்யனின் தாய் எல்லோருக்கும் அவள் குட்டு வெளியாகி யிருக்கும்.

டேனியல் தாமஸ் ஏமாறவில்லை. இதுநாள் வரை, அவர் பச்சாத்தாபத்தோடு அவளுடைய மன அமைதிக் காக ஏமாந்தவர்போல் நடித்திருக்கிறார் என்பது வெளியாகியது.

சீதாவுக்கு டேனியல் தாமஸின் முகத்தைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது. ஸோபாவில் கிடந்தபடி தரையைப் பார்த்தபடி இருந்தாள்.

''சீதா, ரங்கன் இந்த வீட்டுக்கு வந்திருந்தானா?'' என்று கேட்டார்.

சீதா மறுபடியும் பேசாமல் இருந்தாள்.

''மௌனத்தால் எதையும் சாதிக்க முடியாது. ரங்கன் உன்னை எப்போது சந்தித்தான், உன்னிடம் என்ன பேசினான் என்பது எனக்குத் தெரிய வேண்டும்'' என்றார்.

சீதா, டேனியல் தாமஸ் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவர் முகத்தில் உண்மையும் கண்டிப்பும் தெளிவாகத் தெரிந்தன.

இவரிடம்தான் சீதா இல்லை என்பதைச் சொல்லிப் பூராவும் மூடி வைப்பதில் பிரயோசனம் இல்லை என்ற முடிவுக்கு வந்தாள். பழைய பகுதியை ஒப்புக்கொண்டு, ரங்கன் சிறையிலிருந்து திரும்பிய பின் அவனைச் சந்தித்து அவனோடு போராடிய பகுதியை மறைப்பதுதான் சரி என்ற முடிவுக்கு வந்தாள்.

''ஸார், என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் நினைப்பதுபோல் நான் சீதாதான். பயங்கரமான இறந்த காலத்தை உதறிவிட்டு, புது வாழ்க்கை நடத்த விரும்பினேன். அதனால்தான் எனக்கு உதவிய உங்களிடம்கூட என் திருமணத்தைப் பற்றிச் சொல்ல வில்லை. காரணம் நீங்கள் என் பயங்கரமான இறந்த காலத்தைச் சேர்ந்த ஒரு நபர். ஆனால் சிறையிலிருந்து ரங்கன் திரும்பிய பின் நான் அவனைப் பார்க்கவே இல்லை. அவனிடம் பேசவும் இல்லை...!'' என்று படபடப் புடன் சொன்னாள்.

டேனியல் தாமஸ் மௌனமாக அவளையே உற்று நோக்கியபடி ''ஆச்சரியம். நீ ரங்கனைச் சந்திக்கவில்லை என்பது ரங்கன் சிறையிலிருந்து வெளியேறினபோது, அவன் சொன்னது என்ன தெரியுமா?'' எனக்கு வாழ்வில் எந்தவிதப் பிடிப்பும் இல்லை. சீதாவைப் பார்க்க வேண்டும் என்பது ஒன்று; அதற்கும் மேலாக நான்

சிறு வயதில் இழந்த என் தம்பியைப் பார்க்க வேண்டும் என்பது இரண்டு என்று சொன்னான். அவன் சென்னை வந்த பின்பு உன்னைப் பாராமல் இருந்திருப்பானா?'' என்று கேட்டார்.

''அவனுக்கு நான் இருக்கும் இடம் தெரிய நியாயம் இல்லையே! உங்களுக்கும் என்னைத் தெரியும். ஆனால் இதுவரை நீங்கள் என்னைத் தேடி வரவில்லையே!'' என்று சாமர்த்தியமாகப் பேசிவிட்டவள் போல் சொன்னாள் சீதா.

''என் விஷயம் வேறு சீதா. வெகு நாளைக்கு முன்பே நீ யார் மனைவி என்று எனக்குத் தெரியும். ஆனால் உன்னைச் சந்திக்க முயற்சிக்கவில்லை. காரணம் நீ பயப்படுவாய் என்று பேசாமலிருந்தேன். ரங்கன் உன் மன உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்கத் தேவையில்லையே!'' என்று கூறி முடித்தார்.

சீதா பேசாது தரையைப் பார்த்தபடி இருந்தாள்.

திடீரென்று டேனியல் தாமஸ் ஒரு அஸ்திரத்தை வீசினார்.

''உங்கள் வீட்டு மாடியைப் பார்க்க விரும்புகிறேன். கொண்டு போய்க் காட்டுகிறாயா?'' என்று கேட்டார்.

சீதா மனத்தில் எழுந்த தயக்கத்தை அடக்கிக் கொண்டு அவரைப் படிக்கட்டு வழியே அழைத்துச் சென்றாள்.

மாடியிலுள்ள ஒவ்வொரு அறையாக அழைத்துச் சென்றாள். ஒவ்வொரு அறையின் ஒழுங்கும், அங்கு மாட்டியுள்ள மதப் பெரியவர்களின் படங்களும் டேனியல் தாமஸைக் கவர்ந்தன.

முடிவில் சீதாவின் படுக்கை அறையில் நுழையும் கட்டம் வந்தது. அந்த அறையில்தான் சீதா ரங்கனோடு போராடியிருந்தாள் அந்த அறையில் அடி எடுத்து வைக்கவே தயங்கினாள்.

''இந்த அறையையும் பார்க்க வேண்டும் சீதா!'' என்றார் டேனியல் தாமஸ்.

சீதா கதவுகளைத் திறந்து உள்ளே நுழைந்தாள். சீதாவின் ஒவ்வொரு அங்கமும் பதட்டத்தால் துடித்தது.

''இந்த அறையில் நுழைந்ததும் உன் முகம் ஏன் வெளுத்து விட்டது சீதா?'' என்று கேட்டார்.

''ஒன்றுமில்லையே!'' என்று சொல்லிச் சமாளித் தாள் சீதா.

அந்தப் படுக்கை அறையின் மூலையில் மாட்டி யிருந்த ஏசுநாதரின் படத்தைப் பார்த்துப் புன்முறுவல் செய்தபடி டேனியல் தாமஸ் கூறினார்: ''சீதா, இந்த வீடு புனிதமான வீடு. ஆன்ம ஒளி வீசும் உத்தமர்களின் படங்களின் நடுவே வாழ்ந்தபடி எப்படி உன்னால் பொய் சொல்ல முடிகிறது?'' என்று கேட்டார்.

சீதாவின் ஏற்கனவே சிவந்த முகம் இன்னும் சிவந்தது.

''நீ ரங்கனையே பார்க்கவில்லை என்றால் ரங்கன் உடல் கிடந்த பெட்டிக் கடை அருகில் நீ காரில் வரக் காரணம்? உன் அந்தஸ்தில் இருக்கும் பெண்மணி ஏன் சிந்தாதிரிப் பேட்டைக்கு வரவேண்டும்? அதுவும் ரங்கன் உடல் கிடந்த இடத்துக்கு வந்து கூட்டத்தைப் பார்த்து விட்டு மறுபடியும் காரைத் திருப்பி ஏன் ஓட்டிச் செல்ல வேண்டும்? குற்றம் புரிந்த இடத்துக்குச் சுற்றிச் சுற்றி வருவதில் தனி ஆறுதல் காண்பார்கள் என்று ஒரு அநுபவ பூர்வமான உண்மை உண்டு...'' என்று அடுக்கிக் கொண்டே போனார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சீதா அறிவு இழந்தாள். உயர்ந்த குரலில் அழுகையும் கலந்தபடி கூச்சலிட்டாள்.

''என்னை ஒன்றும் சித்ரவதை செய்யாதீர்கள்! எனக்கு ஒன்றும் தெரியாது!'' என்றாள்.

டேனியல் தாமஸ் சீதாவின் கைகளின் நடுக்கத்தையும் அவள் கண்களில் உள்ள மருட்சியையும் கவனித்தார். தன்னுடைய கடைசி அஸ்திரத்தைப் பிரயோகித்தார்.

''என்ன சீதா, ரங்கன் இறந்துவிட்ட செய்தி இன்னும் பத்திரிகைகளில் வரவில்லை. அவன் உடல் கிடந்த இடம் இது என்று சொல்கிறேன். ரங்கன் இறந்து விட்டானா என்று நீ அதிர்ச்சியும் அடையவில்லை; ஆச்சர்யமும் அடையவில்லை. அதிலிருந்து என்ன தெரிகிறது? ரங்கன் முடிவு உனக்குப் புது விஷயம் அல்ல, அது உனக்குத் தெரிந்த விஷயம்! அப்படித்தானே?'' என்றார்.

சீதா வீறிட்டலறியபடி அங்குள்ள பீரோ மீது சாய்ந்தாள். கமலா அறையினுள் ஓடி வந்தாள். கமலாவின் முகம் ஆத்திரத்தோடு காணப்பட்டது.

''என்னங்க, கொஞ்சமும் இரக்கம் இல்லாதவங்களா இருக்கீங்களே? இப்படியா தனியா ஒரு பெண்ணைக் கேள்வி கேட்டு மடக்குகிறது? அதுவும் காரணமில்லாமல்...'' என்று இரைந்தாள்.

டேனியல் தாமஸ் அர்த்தத்தோடு கமலாவைப் பார்த்தார்.

''நீ தானே கமலா? ஹாஸ்பிடல் நர்ஸ்! புயலன்று இரவு வீட்டில் இல்லாமல் வெகு நேரம் கழித்து வீடு திரும்பியவள்?'' என்று கேட்டார்.

கமலா திகைத்து நின்றாள்.

''உன்னை நான் சில கேள்விகள் கேட்க வேண்டும். அதற்கு முன்பு கூறிக்கொள்ள வேண்டியது மிஸ்ஸஸ் சத்யனிடம்தான்...'' என்று சொல்லி விட்டு சீதாவின் பக்கம் திரும்பினார்.

சீதா நடுக்கத்துடன் அவரைப் பார்த்தாள்.

''மிஸ்ஸஸ் சத்யன், உங்கள் தோழி இரக்கமில்லாதவன் என்று என்னைச் சொல்கிறாள் என்பது உங்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டாம், கடந்த

காலத்து விஷயங்களைக் கிளப்பி, நிகழ்காலத்து இன்பத்தைக் குலைக்க நான் வரவில்லை. உங்கள் கணவனுக்கு என்னால் எந்த விஷயமும் வெளிப்படாது!'' என்று கூறிவிட்டு நிறுத்தினார்.

சீதா நிம்மதியோடு பெருமூச்சு விட்டாள். அந்த நிம்மதி நீடிக்கவில்லை.

''ஆனால் ரங்கன் விஷயமாக யார் குற்றவாளி என்று கண்டு பிடிக்காமல் விடமாட்டேன். விஷயம் மிஞ்சிய பின் குற்றத்தை மூடி வைத்த குற்றவாளிகள் என்னிடம் இரக்கத்தை எதிர்பார்த்துப் பலன் இல்லை!'' என்று கூறிவிட்டு மாடி அறையை விட்டு வெளியேறினார்.

கமலாவும் சீதாவும் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தனர்.

சில விநாடிகள் கழித்து சீதா சொன்னாள். ''பல வருஷங்களுக்கு முன் ஆண்டவன் 'சொர்க்கம்' என்ற பெயர் கொண்ட இந்த வீட்டில் நுழையும் வாய்ப்பை எனக்கு அளித்தான். அன்று உண்மையோடு நுழைந்திருக்கலாம். சத்யன் என்ற உத்தமரைக் கணவனாக அளித்தான். பொய் கூறாமல் அவர் கைகளைப் பற்றியிருக்கலாம். பார் கமலா, நான் கூறிய ஒரு பொய் என் சொர்க்கத்தையே நரகமாக்கி விட்டது! இப்போது விரும்பினாலும் நான் உண்மை கூறமுடியாத நிலையில் இருக்கிறேன்'' என்றாள்.

அன்று இரவு பூராவும் சீதாவும் கமலாவும் வாய் விட்டுப் புலம்பியபடியே காலத்தைக் கழித்தனர்.

மறுநாள் காலை கணவன் சத்யனைப் பார்க்கப் போகிறோம், அவர் முகத்தைப் பார்த்தாலே துன்பமெல்லாம் மறைந்து விடும் என்ற நம்பிக்கையில் அவள் குதூகலமாக இருந்தாள்.

ஒரு மணி நேரம் முன்னதாகவே விமான நிலையத்துக்கு வநது விட்டாள்.

சீதாவைப்போல் பம்பாய்ப் ப்ளேனும் குறித்த காலத்துக்குச் சற்று முன்னதாகவே வந்துவிட்டது.

டாக்டர் சத்யன் ப்ளேனிலிருந்து இறங்கினார். சீதாவைப் பார்த்ததும் அவர் முகம் தாமரைபோல் மலர்ந்தது.

சீதாவும் இடைக்காலத் துன்பத்தையெல்லாம் மறந்தாள். அவர் கையிலிருந்த தோல் பையை வாங்கிக் கொண்டாள்.

டாக்டர் சத்யன் குழந்தைபோல் சொன்னார். "சீதா, பம்பாயில் ப்ளேன் ஏறியதிலிருந்து உன் முகத்தைப் பார்க்கத் துடியாகத் துடித்தேன். எப்போது களங்கமில்லா உன் கண்களைப் பார்ப்போம் என்று என் மனம் துடித்தது சீதா. பரீட்சை முடிந்து விடுமுறைக்கு வீடு திரும்பும் மாணவன் நிலையில் இருந்தேன்!" என்று கலகலவென்று சிரித்தபடி சொன்னார்.

அவருக்குத் தெரிந்த பழக்கமான நண்பர்கள் அவரை மொய்த்துக் கொண்டனர்.

"என்ன மிஸ்டர் சத்யன் வென் டிட் யூ கம்? ஹவ் வாஸ் தி ட்ரிப்?" என்று விசாரிக்க ஆரம்பித்தனர்.

டாக்டர் சத்யன் கொஞ்சங்கூடக் கூச்சம் இல்லாமல் "மன்னிக்க வேண்டும். என் மனைவியிடம் எவ்வளவோ பேசவேண்டியிருக்கு. நாளைக்குக் கிளப்லே சந்திப்போம் அப்போ பேசுவோம்" என்று கூறிவிட்டு, கார் நிறுத்தியிருக்கும் இடத்துக்கு நகர்ந்தார்.

விமானத்திலிருந்து பெட்டி படுக்கைகளை இறக்கி விநியோகிக்கும் பிரத்யேக இடத்துக்கு இருவரும் சென்றனர்.

டாக்டர் சத்யன் அவர் பெட்டிக்காகக் காத்திருக்கும் இடைவேளையில் சீதாவைக் கேள்விக்கு மேல் கேள்வியாகக் கேட்டுத் துளைத்துவிட்டார். சீதாவும் முயற்சித்துப் புன்முறுவல் செய்தபடி பதில் சொன்னாள்.

பெட்டிகள் வந்ததும் இருவரும் சாமான்களை டிரைவரிடம் கொடுத்து விட்டுக் காரை நோக்கி வந்தனர்.

டாக்டர் சத்யன காரில் உட்காரு முன், அவரை நோக்கி டேனியல் தாமஸ் நடந்து வந்தார்.

''டாக்டர் சத்யன், என் பெயர் டேனியல் தாமஸ். நான் கிரைம் பிராஞ்சைச் சேர்ந்தவன். உங்களிடம் பேச வேண்டும். உங்கள் வருகைக்காக இன்ஸ்பெக்டர் ஜெனரல் மாதவன் காத்திருக்கிறார். அவர் உங்களிடம் முக்கியமான விஷயமாகப் பேச வேண்டுமாம்'' என்றார்.

கணவனோடு ஒன்று சேரப் போகும் இந்த இன்ப வேளையில், அவள் டேனியல் தாமஸைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அப்படியே இடி விழுந்தவள்போல் நின்றாள். அவள் பார்வையில் விமான நிலையமே சுற்றியது!

## 14

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தன்னைப் பார்க்கும்படி கூறியதாக டேனியல் தாமஸ் சொன்னதைக் கேட்டு டாக்டர் சத்யன் ஆச்சர்யப்பட்டார். சற்று கிலேசமும் அடைந்தார். ஊர் திரும்பியவுடன் போலீஸார் தன்னைப் பார்க்க விரும்புவதன் நோக்கம் அவருக்குப் புரியவில்லை.

''வெளிநாட்டுச் செலாவணிச் சட்டங்களை நான் எந்த விதத்திலும் மீறவில்லையே! அயல் நாட்டிலிருந்து சுங்கம் கட்டாமல் எந்தச் சாமானும் கொண்டுவர வில்லையே! பம்பாய் விமான நிலையத்திலேயே எல்லாம் சரியாகி விட்டதே!'' என்றார்.

டேனியல் தாமஸ் புன்முறுவலுடன் ''நீங்கள் நேர்மையின் உருவம். உங்களைப் பொய்க் குற்றம் என்ற

பதங்களோடு இணைத்து நினைக்கவும் முடியாது. ஆனால்...'' என்று கூறிவிட்டுச் சீதாவின் பக்கம் திரும்பினார்.

சீதாவுக்குக் கன்னத்தில் அறைந்ததுபோல் இருந்தது. டேனியல் தாமஸின் வார்த்தைகளிலிருந்து கணவரைப் போல் அல்ல அவள் என்ற அர்த்தம் தொக்கி நிற்கும்படிதான் கூறுகிறார் என்பது விளங்கியது. அடுத்து கணவரிடம் கூறி விடுவார் என்று நடுங்கினாள்.

சீதாவின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களையோ, குழப்பத்தையோ டாக்டர் சத்யன் கவனித்ததாகத் தெரியவில்லை.

டாக்டர் சத்யன் ஆத்திரத்துடன் ''அப்படியென்றால் இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்னை எதற்குப் பார்க்க வேண்டும்?'' என்று சலிப்புடன் கேட்டார்.

டேனியல் தாமஸ், ''கோபப்படாதீர்கள். இன்ஸ்பெக்டர் ஜெனரலையே கேட்டு விடுங்கள்'' என்றார்.

சத்யன் சலிப்புணர்ச்சியோடு காரில் ஏறி உட்கார்ந்தார். சீதாவும் ஏறிக்கொண்டாள். டிரைவருக்கு அருகில் டேனியல் தாமஸ் உட்கார்ந்து கொண்டார். வண்டி நகர்ந்தது.

சீதா எவ்வளவோ விஷயங்களைக் கணவனுடன் பேச வேண்டுமென்று இருந்தவள் வாயடைத்துப் போய் இருந்தாள்.

கார் நேராக ஐ. ஜி. யின் வீடு நோக்கிச் சென்றது.

வீட்டின் வெளிப்புறம் கார் வந்ததும், சத்யன் சீதாவின் புறம் திரும்பி, ''மன்னித்துவிடு சீதா, இரண்டே நிமிஷங்களில் வந்து விடுகிறேன்'' என்றார்.

அதற்குள் டேனியல் தாமஸ் குறுக்கிட்டார். ''உங்கள் மனைவி காத்திருக்க வேண்டாம். அவர்கள் காரில் வீடு செல்லட்டும். பெரிய அதிகாரியை நீங்கள்

பார்த்து முடிந்ததும், உங்களை நான் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன்'' என்று கூறினார்.

சத்யன் ஆத்திரத்துடன் டேனியல் தாமஸை நோக்கினார்.

சத்யன் ஆத்திரத்தில் தாமஸை ஏதாவது சொல்ல, அவர் பதிலுக்கு உண்மைக் கூறிவிட்டால்... என்ற பயம் சீதாவைப் பற்றிக் கொண்டது.

சீதா நடுக்கத்துடன் ''பரவாயில்லை. நான் வீட்டுக்குப் போகிறேன். நீங்கள் ஐ. ஜி.யைப் பார்த்து விட்டு வாருங்கள்!'' என்று கூறினாள்.

சத்யன், தாமஸுடன் ஐ. ஜி.யின் வீட்டுக்குள் நுழைந்தார். கதவருகில் டேனியல் தாமஸ் திரும்பி சீதாவைப் பார்த்தார். அந்தப் பார்வையில் இரக்கமற்ற கடமையின் ஜொலிப்புத்தான் தெரிந்தது.

சீதாவின் உடல் நடுங்கியது. காரை வீட்டுக்கு ஓட்டும்படி டிரைவரிடம் கூறினாள். வீடு வரும்வரை சீதாவுக்கு மனம் எங்கெல்லாமோ சென்றது.

வீட்டுக்கு வந்ததும், பக்கத்து வீட்டின் வெளிப்புறம் கமலா ஆவலோடு நிற்பதைப் பார்த்தாள்.

கமலாவுக்கு, சீதா மட்டும் காரில் திரும்புவதன் காரணம் தெரியவில்லை. கமலா ஓடி வந்து, ''அவர் இந்தப் பிளேனில் வரவில்லையா?'' என்று கேட்டாள்.

சீதா எவ்வித உணர்ச்சியுமில்லாது, ''அவர் வந்து விட்டார் கமலா. ஆனால் அவரை டேனியல் தாமஸ் விமான நிலையத்திலேயே சந்தித்து, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டார்'' என்றாள்.

கமலா வாயடைத்துப் போனாள்.

சீதா, டிரைவரை நோக்கித் திரும்பி, ''டிரைவர்! வண்டியைக் கொண்டு போய் ஷெட்டில் விடு!'' என்று உத்தரவிட்டு விட்டு வீட்டினுள்ளே சென்றாள்.

கமலாவால் மனத்தில் எழுந்த திகில் நிறைந்த எண்ணங்களை அடக்க முடியவில்லை.

''என்ன சீதா, தாமஸ் அவரிடம் எல்லாம் சொல்லி யிருப்பாரோ! உண்மை வெளியாகி இருக்குமோ? இப்போ என்ன சீதா செய்வது...?'' என்று தொண தொணவென்று பேசியபடி சீதாவோடு வீட்டினுள் நுழைந்தாள்.

சீதாவுக்கு அப்போது இருந்த மனநிலையில் கமலா வோடு மட்டுமல்ல, வேறு யாருடனுமே பேசப் பிடிக்க வில்லை.

''கமலா, கொஞ்சம் பேசாமல் இரேன். தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது! இனி சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன!'' என்று சொல்லியபடி சோபாவில் சாய்ந்தாள்.

கமலா தொடர்ந்து சீதாவுக்குத் தைரியமூட்டும் வகை யில் ஏதேதோ கூறத் தொடங்கினாள். ஆனால் சீதாவின் செவிகளில் எதுவுமே விழவில்லை.

சீதா, ''என்னை மன்னித்துவிடு கமலா, அவர் வீடு திரும்பும்வரை நான் தனியாக இருக்க விரும்புகிறேன். எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை'' என்றாள்.

சீதாவின் பேச்சின் குறிப்பைப் புரிந்துகொண்ட கமலா, ''சரி சீதா, நான் வருகிறேன். தேவைப்பட்டால் என்னைக் கூப்பிடு. நான் வீட்டிலேயே இருக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

கமலா சென்றபின் சீதாவின் மனநிலை இன்னும் குழப்பமடைந்தது.

கணவர் வீடு திரும்பும்போது, என்னுடைய பூர்வோத்திரம் பூராவும் தெரிந்துகொண்டு வருவார். ரங்கன் யார், நான் உண்மையிலே ' யார், ரங்கன் முடிவு என்ன என்பதையெல்லாம் தெரிந்துகொண்டு வருவார்.

அவரை எப்படிச் சந்திப்பது...? அவர் களங்கமற்ற முகத்தில் எப்படி விழிப்பது...? அவர் கேட்கும் கேள்விகளுக்கு எப்படிப் பதில் சொல்வது... என்று பலவித குழப்பமான சிந்தனைகளில் ஈடுபட்டாள்.

எப்பக்கம் திரும்பினாலும், 'சொர்க்கம்' என்று பெயரிடப்பட்ட அந்த வீடு ஒரு நரகமாகத் தோன்றியது.

"இந்நேரம் ஐ. ஜி. கணவரிடம் என்னைப் பற்றிக் கூறிக்கொண்டிருப்பார்... சத்யன் பெரிய பரம்பரையைச் சேர்ந்தவர் அல்லவா! பெரிய டாக்டரல்லவா! அவர் மனைவியைக் கைது செய்யுமுன் ஆழ்ந்து சிந்தித்துத் தானே செய்ய வேண்டும். அதற்காகத்தான் முதலில் கணவரிடமே உண்மையைக் கூறி அவர் மனத்தைப் பக்குவப்படுத்துகிறார் போலீஸ் அதிகாரி!" என்று எண்ணினாள்.

கணவர் போலீஸாரோடு வீடு திரும்புவதற்குள், எப்படியாவது உயிர் போய்விட்டால் எவ்வளவு நிம்மதியாக இருக்கும் என்றும் எண்ணினாள்.

ஹாலிலிருந்து எழுந்து மாடிக்குச் சென்றாள். அங்கு நிர்மலமான மாமியாரின் படத்தைப் பார்த்தாள்.

"அந்த அம்மையாரிடம் என்னுடைய பூர்வோத்திரத்தைப் பற்றிப் பொய் சொல்லியல்லவா இந்த வீட்டு மருமகளானேன்! அதன் பாபத்தைத்தான் இன்று அனுபவிக்கிறேன்! இறந்த காலத்தைக் குழி தோண்டிப் புதைக்க முடியுமா?..." என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

அடுத்தபடியாகப் படுக்கை அறையில் நுழைந்தாள்.

"இந்தப் படுக்கையில் எவ்வளவு இன்பமாகக் காலம் சென்றிருக்கிறது...? இந்தப் படுக்கையில் படுத்தபடி, கணவனுடைய அன்பு அணைப்பிலே துவளும்போது, எனக்கு ஈடு இந்த உலகத்தில் யாருமே இல்லை என்று

இறுமாப்போடு இருந்திருக்கிறேன். அந்த இறுமாப்பு இன்னும் சில விநாடிகளில் என்ன ஆகும்?

''என்னால் என் கணவருக்கு எவ்வளவு வேதனை! நான் தவறு செய்தேன்; அனுபவிக்கிறேன்! ஒரு தவறும் செய்யாத என் கணவரும்கூட என்னோடு துக்கத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறதே!...'' என்று எண்ணி விம்மினாள்.

சுமார் அரை மணி நேரம் சிந்தனையில் லயித்த படியே படுக்கை அறையில் நின்றாள்.

வெளிப்புறத்திலிருந்து வந்த போலீஸ் கார் ஹாரனின் சத்தம் அவள் சிந்தனையைக் கலைக்க வில்லை.

அடுத்தபடியாகத் தொடர்ந்து அவள் கணவரின் குரல், ''சீதா! சீதா!'' என்று கூப்பிட்டதும் அவள் காதுகளில் விழவில்லை.

மூன்றாவது முறையாக டாக்டர் சத்யன், ''சீதா! சீதா, நீ எங்கிருக்கிறாய்?'' என்று கூப்பிட்டதும்தான் சிந்தனை கலைந்தது.

படுக்கை அறையை விட்டு வெளியே வந்தாள். படிக்கட்டுகளில் இறங்கினாள்.

கணவன், 'பாவி' என்று கூச்சலிடப் போகிறார். 'பழிகாரி' 'ஏமாற்றுக்காரி' என்று தன்னை வசைபாடப் போகிறார் என்ற பீதியில் ஹாலை நோக்கி இறங்கினாள்.

ஆனால் சத்யன் சிரித்த முகத்தோடு அவளை நோக்கி வந்ததும், அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''என்ன சீதா! பேயறைஞ்ச மாதிரி இருக்கே! என்னை மன்னிச்சுடு சீதா! ஊர் திரும்பியதும் உன்னோடு சந்தோஷமா, தனியா இருக்கலாம்னு ஆசைப்பட்டேன். ஆனால் அது முடியாது போலிருக்கு. நம்மோடு விருந்தாளியா ஒரு பேஷண்ட் இருக்கப் போறாரு! அவர்தான் ஐ. ஜி. அனுப்பிய பேஷண்ட்,

அவரையும் நீதான் கவனிச்சுக்கணும்'' என்று கூறி விட்டு, வாசல்புறம் டாக்டர் சத்யன் திரும்பினார்.

அங்கு அசுரப் புன்னகையோடு டேனியல் தாமஸ் நுழைந்தார். அவருக்குப் பின்னால் நுழைந்த ஆசாமியைப் பார்த்ததும் சீதாவுக்குக் கிலி பற்றிக் கொண்டது. அவளால் நம்ப முடியவில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள்.

இறந்துபோனதாகச் சீதா நினைத்த ரங்கன், டேனியல் தாமஸின் பின்புறம் நின்று கொண்டிருந் தான்.

டாக்டர் சத்யன், ''சீதா, இவர்தான் நம்மோடு நம் வீட்டில் தங்கப் போகும் விருந்தாளி; மிஸ்டர் ரங்கன்'' என்று சொன்னார்.

டேனியல் தாமஸ் புன்னகை புரிந்தபடி ''ஏதோ இறந்து போனவரின் ஆவிபோல் இருக்கிறார் அல்லவா! ஆமாம், அவர் இருந்திருக்க வேண்டியவர்தான். மயிரிழையில் உயிர் தப்பி விட்டார்!'' என்று சொன்னார்.

ரங்கன் எந்தவித உணர்சியுமில்லாது வெறித்துப் பார்த்தபடி நின்றான்.

''சீதா, இந்த மனிதனை யாரோ ஒரு பெண் துப்பாக்கியால் சுட்டியிருக்கிறாள். அதன் காரணமாக அவர் பழைய ஞாபகங்கள் பூராவும் இறந்திருக்கிறார். மனோதத்துவ முறையில் அவருக்கு வைத்தியம் செய்து பழைய ஞாபகங்களை அவருக்குத் திரும்பக் கொண்டு வரப் போகிறேன்!'' என்று பெருமையோடு சொன்னார் டாக்டர் சத்யன்.

''என்ன, மிஸ்ஸஸ் சத்யன்! உங்கள் கணவனால் இவருக்கு ஞாபகம் திரும்பவில்லையென்றால், அது யாராலும் திரும்பப் போவதில்லை!'' என்று கூறிவிட்டு டேனியல் தாமஸ் சீதாவின் முகத்தைக் கூர்ந்து கதனித்தார்.

# 15

தன் வாழ்க்கையில் இப்படியும் ஒரு திருப்பம் ஏற்படும் என்று சீதாவால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. ரங்கன் உயிரோடு இருக்கிறான்! ஞாபகம் பூராவும் இழந்து இருக்கிறான். அவனுக்கு வைத்தியம் செய்யப்போது என்னுடைய கணவன்! அந்த ரங்கன் இனி இந்த வீட்டில் தங்கப் போகிறான். நான் மனதார வெறுக்கும் ரங்கன் இனி ஒவ்வொரு நிமிஷமும் என் எதிரில் இருக்கப் போகிறான். கணவன் முயற்சியால் முடிவில் ரங்கனுக்கு ஞாபகமும் திரும்பி விட்டால், அப்ப என் கதி? ''இவள்தான் என்னைத் துப்பாக்கியால் சுட்டவள்! இவள்தான் தூத்துக்குடி கிரிமினல் வழக்கில் சம்பந்தப்பட்டவள். இவளை மணக்கத்தான் இவள் தந்தையோடு வழக்கில் மாட்டிக் கொண்டு சிறை சென்றேன்'' என்று அவன் சொல்ல எவ்வளவு நேரமாகும்?

ஆரம்பத்திலேயே நான் குற்றவாளியின் மகள் என்று கணவனிடம் கூறியிருந்தால் இப்போது நான் மன்னிப்பை எதிர்பார்க்க முடியும்! இவ்வளவு வருஷங்கள் உண்மையை மூடி வைத்துத் தவறான அனுமானத்தைக் கொடுத்ததே பெரும் குற்றம்! அடுத்ததாக ஒருவனைக் கொலை செய்ய முயன்ற குற்றம் வேறு! இதெல்லாம் உலகத்திற்குத் தெரிந்தால் எவ்வளவு கேவலம் என்று எண்ணித் துடித்தாள்.

இறந்த காலம் உருண்டு திரண்டு அலை அலையாக அவளைத் தண்டிக்கக் கோஷமிட்டு வருவது போன்ற பயம் ஏற்பட்டது.

''என்ன சீதா, ஒன்றும் சொல்லாமல் முழித்துப் பார்த்துக் கொண்டு நிற்கிறே?'' என்று கேட்டார் அவள் கணவன் சத்யன்,

என்ன சொல்வாள் சீதா? சீதா பதில் சொல்வதற்கு முன்னதாகவே டேனியல் தாமஸ் முந்திக் கொண்டார்.

''ஒரு வேளை உங்கள் மனைவிக்கு ரங்கனை முன்பே தெரிந்திருக்குமோ?'' என்று லேசாக வத்தி வைத்தான்.

''என்ன சார் உளருகிறீர்கள்! இந்த மாஜி கைதிக்கும் என் மனைவிக்கும் எப்படி அறிமுகம் இருக்க முடியும்?'' என்று கேட்டார் சத்யன்.

டேனியல் தாமஸ் அடுத்த விவரங்களைக் கிளறாமல் இருந்து விட்டார்.

இந்தச் சம்பாஷணையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டதாக ரங்கன் காணப்படவில்லை. ஒன்று மறியாத சிறு குழந்தைபோல் வரவேற்பு அறையில் மாட்டியிருந்த படங்களைப் பார்த்தபடி இருந்தான்.

சீதாவின் கண்ணோட்டத்தில் ரங்கன் இன்றுதான் நிர்மலமாகக் காணப்பட்டான். அவன் ஞாபகங்கள் மறைந்தவுடன், அவன் பாபமும் குரூர சுபாவமும் மறைந்து விட்டதுபோல் காணப்பட்டான்.

''கொஞ்சம் தாகமாயிருக்கு தண்ணி கிடைக்குமா?'' என்று வெகுளித்தனமாகக் கேட்டான்.

அப்போது ரங்கன் பேசிய விதம் அவள் கணவன் பேசியது போலவே வெகுளித்தனமாகக் கேட்டான்.

டாக்டர் சத்யன் ''சீதா! போய் ஐஸ் வாட்டர் எடுத்துக் கொண்டு வா!'' என்று கட்டளையிட்டார்.

சீதா ஐஸ் வாட்டர் எடுக்க ஃபிரிஜிடையரை நெருங்கினாள்.

ரங்கன் ''சீதா! சீதா!'' என்று இருமுறை தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

உடனே டேனியல் தாமஸ் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் ''என்ன மிஸ்டர் ரங்கன், சீதா என்ற பெயர் ஞாபகத்துக்கு வருகிறதா? எந்தச் சூழ்நிலையில் ஞாபகம் வருகிறது? சிந்தியுங்கள்'' என்றார்.

சீதா மூச்சை அடக்கியபடி அங்கேயே நின்றாள்.

அவள் கணவன் சத்யனும் "சீதா என்ற பெயருள்ள பெண்மணியை உங்களுக்குத் தெரியுமா ரங்கன்?" என்று கேட்டார்.

ரங்கன் புருவத்தை நெளித்துச் சிந்தித்தான்.

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லை சார்" என்று கூறி முடித்ததும்தான் சீதாவுக்கு உயிர் வந்தது. டேனியல் தாமஸின் முகத்தில் ஏமாற்றமும் ஏற்பட்டது.

"வருந்தாதீர்கள், டேனியல் தாமஸ், இம்மாதிரி ஞாபகமறதி சில நாட்கள், சில வாரங்கள், சில மாதங்களுக்கு மேல் நீடிக்காது. மிஸ்டர் ரங்கனுக்குச் சீக்கிரமே ஞாபகம் திரும்பி விடும். அப்புறம் இவரைச் சுட்டது யார் என்பது தெரிந்து விடும்!" என்று ஆறுதல் சொன்னார் சத்யன்.

சீதா ஒரு டம்ளரில் குளிர்ந்த தண்ணீரை ஊற்றிக் கொண்டு வந்து கொடுத்தாள்.

டேனியல் தாமஸ் சீதாவைக் கவனித்தபடியே உங்கள் திறமையில் எனக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது டாக்டர். நீங்களும் உங்கள் மனைவியும் சேர்ந்து எப்படியாவது ரங்கனுக்கு ஞாபகத்தை ஏற்படுத்துவீர்கள்" என்று சொன்னார்.

டாக்டர் சத்யன் பேஷண்ட் ரங்கனை மாடிக்கு அழைத்துச் சென்றார். வரவேற்பு ஹாலில் சீதாவும் டேனியல் தாமஸும் தனியே விடப்பட்டனர்.

"சீதா, நீ அதிர்ஷ்டக்காரி! இல்லாவிட்டால் ரங்கனுக்கு ஞாபகம் அற்றுப் போவானேன்! ஆனால் அதிர்ஷ்டம் தொடர்ந்து அடிப்பதில்லை!" என்று கூறி விட்டு வெளியேறினார்.

டேனியல் தாமஸ் அப்பட்டமாக டாக்டர் சத்யனிடம் ஏன் சீதாவின் பூர்வ வாழ்க்கையின் விவரங்களைக் கூறவில்லை என்று சீதாவுக்குப் புரியவில்லை.

டாக்டர் சத்யன், ஞாபகம் இழந்த ரங்கனை

மாடிக்கு அழைத்துப் போனார். ரங்கன் ஒரு குழந்தை போல் பராக்கு பார்த்தபடி மாடி பால்கனிக்குப் போனான்.

பக்கத்து வீட்டு அவுட் ஹவுஸில் வெளிப்புறமாகக் கமலா காத்திருந்தாள். அவளுடன் சீராளனும் நின்று கொண்டிருந்தான். எதேச்சையாகக் கமலாவின் பார்வை அடுத்த வீட்டு மாடி பால்கனிக்குத் திரும்பியது. அங்கு நின்று கொண்டிருந்த ரங்கனைப் பார்த்ததும் கமலா வீறிட்டலறினாள். அப்படியே மயங்கி சீராளன்மீது சாய்ந்தாள்.

அன்று இரவு இறந்து விட்டதாக நினைத்து எந்த ரங்கனைக்கொண்டு போய் பெட்டிக் கடையில் சேர்த்தார்களோ, அதே ரங்கன் உயிரோடு நின்று கொண்டிருப்பதைப் பார்த்த அதிர்ச்சிதான் கமலாவை மயங்கச் செய்தது.

சில மணி நேரம் கழித்துக் கமலா மறுபடியும் சீதாவின் வீட்டுக்கு வந்தாள்.

சீதாவின் கணவன் மாடியில் இருக்கிறான் என்று தெரிந்ததும், ''என்ன சீதா, மாண்டவன் மீண்டு விட்டானா?'' என்று கேட்டாள்.

''போடி. நாமதான் முட்டாள் தனம் செய்து விட்டோம். நம் அவசரத்திலேயும் பயத்திலேயும் ஆசாமி இறந்துட்டானா என்றுகூடப் பாராமல் போய் பெட்டிக் கடையிலே போட்டு விட்டோம்!'' என்றாள்.

''அப்போது அந்த ஆளு உன் புருஷனிடம் எல்லாம் சொல்லியிருப்பானே, அமைதியாக இருக்கியே!'' என்று தொடர்ந்து கேட்டாள் கமலா.

''அவன் எல்லாத்தையும் சொல்லித் தொலைச்சிருந்தான்னா எவ்வளவோ பரவாயில்லைடி. அவனுக்கு எல்லா ஞாபகமும் போயிடுச்சு. இன்ஸ்பெக்டர் அவனை என் புருஷனிடமே வைத்தியத்துக்கு அழைச்சிட்டு வந்திருக்கார்'' என்றாள் சீதா.

''ஏண்டி ஒன்று செய்வோமா?'' என்று கேட்டாள் கமலா.

''என்னடி என்ன?'' என்று விசாரித்தாள் சீதா.

''ஊமைத்தங்காய் அல்லது எட்டிக் கொட்டையை அறைச்சுக் கொடுத்தா ஆளுக்கு பைத்தியம் புடிச்சிடும் என்கிறாங்க. அவனுக்கு ஞாபகம் திரும்பினாலும் தாறு மாறாத்தாண்டி உளறுவான் உன் விஷயம் வெளியே வரவே முடியாது'' என்றாள்.

சீதா சோகம் கலந்தபடி சிரித்தாள். ''கமலா, நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். உண்மையை மூடி வைத்து அமைதி காண்பதில் நம்பிக்கை போய்விட்டது கமலா!'' என்றாள்.

''அப்படின்னா எல்லாத்தையும் உன் புருஷனிடம் சொல்லப் போறியா?'' என்று பீதியோடு கேட்டாள் கமலா.

''பூரா உண்மையையும் கூறத் துணிவில்லை. பேசாமல் நடப்பது நடக்கட்டும் என்று ஆண்டவன் பொறுப்பில் விட்டுவிட்டு இருக்கப் போறேன். ரங்கனுக்கு ஞாபகம் திரும்பவில்லை என்றால் நல்லது. ஞாபகம் திரும்பிவிட்டால் அப்புறம் கணவன் அளிக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்ளத் தயார்!'' என்று விரக்தியோடு கூறி முடித்தாள்.

ஒரு வார காலத்துக்கு டாக்டர் சத்யன் தன் காரில் ரங்கனை ஏற்றிக் கொண்டு சென்னையின் பல பகுதி களுக்கு அழைத்துப் போனார். ஏதாவது காட்சிகளைக் கண்டு ஞாபகம் வருமோ என்ற நம்பிக்கையில். அப்போ தெல்லாம் சீதாவையும் உடன் வருமாறு வற்புறுத்துவார். சீதாவும் செல்வாள். கட்டிப் போட்ட குழந்தை போல் ரங்கன் காரின் பின் ஸீட்டில் கிடப்பான். பழைய ரங்கனின் காமம் நிறைந்த பார்வையோ, அல்லது அந்த ரங்கனின் இளக்காரப் பேச்சோ எங்கு போய் மறைந்து விட்டது என்று புரியவில்லை. டாக்டரிடம் மட்டும்

மிகவும் பட்சமாக நடந்து கொண்டான்.

"டாக்டர், உங்களை முதன் முதலாகப் பார்த்த போதே நீங்கள் எனக்கு வேண்டியவர் என்ற எண்ணம் விழுந்தது" என்று சொன்னான்.

இந்த நிலையில் டாக்டர் சத்யனுக்குப் 'ப்ளூ' ஜுரம் பிடித்துக்கொண்டது. அப்போது அவருக்கு ஒற்றடம் கொடுப்பது, மருந்து கொடுப்பது போன்ற பணிகளை யெல்லாம் ரங்கனே செய்து வந்தான். சீதாவை எந்த வேலையும் செய்யவிடாமல் தடுத்தான்.

"டாக்டருக்கு உதவுவதில் எனக்குப் புரியாத ஒரு திருப்தி மிஸ்ஸஸ் டாக்டர்" என்று சொன்னான்.

யாரோ பணக்கார டாக்டர் பயலைப் பிடித்து விட்டோம் என்ற எண்ணமா உனக்கு? அவன் தாலி உன் கழுத்தில் தொங்கினாலும், உன் உடல் என்னுடையது!" என்று சவால் விட்ட ரங்கனா நம் கணவனுக்கு இப்படிப் பணிவிடை செய்கிறான் என்று ஆச்சரியப்பட்டாள்.

வரவர ரங்கன் மீதிருந்த பயமும் வெறுப்பும் சீதா வுக்குக் குறைந்தது. நல்ல வேளை! இவனைக் கொல்லா மல் ஆண்டவன் காப்பாற்றினாரே என்று நினைக்கும் போதே ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது.

டாக்டர் சத்யனுக்கு ஜுரம் குணமடைந்து ஒருநாள் ஓய்வுக்காகப் படுக்கையில் இருக்கும்போது அவர் தன் பெட்டியிலிருந்த பழைய தோல் பையை எடுத்து வரச் சொன்னார்.

டாக்டர் சிறுபிள்ளையாக அனாதை ஏழையாக இருந்தபோது அவர் அணிந்திருந்த உடைகள், அவருடைய சிறு வயதுப் போட்டோக்கள் அந்தப் பையில் இருந்தன. சத்யனின் தாய் அவைகளைப் பத்திரமாக வைத்திருந்தாள்.

எதற்கு அந்தப் பையைக் கணவன் கேட்கிறார் என்று ஆச்சர்யப்பட்டாள் சீதா.

பையைக் கொடுத்ததும் சத்யன் கூறிய வார்த்தை களில் இருந்து அது புரிந்தது.

"என்ன ரங்கன், நான் பிறவியிலேயே சீமான் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். சிறு பிள்ளையாக இருந்தபோது தெருவிலே சுற்றியவன்தான். நானும் என் அண்ணனும் கோவில் சாப்பாட்டை உண்டு காலம் கழித்தோம். நான் பள்ளியில் படிக்க வேண்டும் என்பதற்காக என் அண்ணன் என்னைவிடச் சில வருஷங் கள்தான் மூத்தவன், தெருவிலே பேப்பர் விற்றான், சோடா வண்டி தள்ளினான். விதி என்னைச் சீமான் வீட்டில் தள்ளியது.

என் அண்ணன் சந்திரனைச் சிறையில் தள்ளியது.

எனக்குப் பதினோரு வயது இருக்கும். என் அண்ண னுக்குப் பதினாறு வயது இருக்கும். அப்போது எனக்கு டைபாய்டு ஜுரம் வந்து ஆஸ்பத்திரியில் இருந்தேன். நான் பிழைப்பது துர்லபம் என்ற நிலையில் எனக்குப் பெரிய டாக்டரை அழைத்து வந்து வைத்தியம் பார்க்கத் துடித்தான். கையில் பணமில்லை.

"திருடியோ கொள்ளையடிச்சோ உன்னை வாழ வைப்பேன்!" என்று சொல்லி விட்டுக் கோயில் திரு விழாவுக்கு வந்திருந்த ஒரு சீமாட்டியின் கழுத்தில் இருந்த நகையை எடுத்து விற்று எனக்கு வைத்தியம் பார்த்தான். ஆனால் போலீஸார் அவனைப் பிடித்து விட்டனர்.

நகை இழந்த சீமாட்டிக்கு உண்மை தெரிந்ததும் அவள் ஆஸ்பத்திரிக்கு வந்து என்னைப் பார்த்தாள். அவளுக்குப் பிள்ளை இல்லை. ஆகையால் நானே அவள் பிள்ளையானேன்.

என் அண்ணன் சிறையில் வாடியதும், பிறகு அவன் விடுதலையானதும் எனக்குப் பல வருஷங்கள் தெரியாமலே வைத்திருந்தார்கள், என்னைச் சுவீகாரம் செய்து கொண்ட பெற்றோர்.

அப்புறம் அண்ணனைத் தேடினேன். அவன் எங்கு போனான் என்று தெரியவில்லை!'' என்று சொல்லி விட்டுச் சத்யன் தோல் பையிலிருந்து அவனது சிறு வயதுப் போட்டோவைக் காட்டினான்.

''இதோ பார் என் பக்கத்தில் நிற்பவன்தான் என் அண்ணன் சந்திரன். தன்னைச் சிறையில் தள்ளிக் கொண்டு, என்னைச் செல்வத்தில் தள்ளியவன்'' என்று காட்டினான்.

ரங்கன் அப்படியே அந்தப் படத்தைப் பார்த்தான். அவன் உடல் நடுங்கியது. உதடுகள் துடித்தன. ஞாபகங் களை இழந்த ரங்கன் மனதில் புரியாத, விளங்காத புதைந்து போன ஞாபகங்கள் குபுகுபுவென்று எழுந்தன.

''டேய் தம்பி! சத்தியமாடா நீ? என் சத்திப் பயலாடா, இப்போ பெரிய மனுஷனாயிட்டே!'' என்று கூறியபடி சத்யன்மீது சாய்ந்தான்.

சத்யன் திகைத்தான். அதைவிட அதிகமாகச் சீதா திகைத்தாள்!

## 16

முற்றிலும் எதிர்பாராத திருப்பத்தை விதி அளிக்கும் என்று சீதா கொஞ்சமும் எதிர்பார்க்க வில்லை.

ஆரம்ப முதலே அவள் தந்தையின் வாழ்வில் குறுக் கிட்டு, அவருக்கு யமனாகத் தோன்றிய ரங்கன் அவளை அனாதையாக்கி சென்னைக்கு ஓட வைத்த ரங்கன்—அவள் மனவெறுப்பெல்லாம் திரண்டு உருவம் பெற்ற மனிதனாகிய ரங்கன்—அவளுடைய கணவனின் மூத்த சகோதரனா? அவள் காதல் உருவமும், அவள் வெறுப் பின் உருவமும் ஒரு தாய் மக்களா? அவளுடைய தெய்வீக

மான அன்பு உறையுமிடத்தின் அருகிலேயேவா அவள் வெறுப்பும் உருவாக வேண்டும்!

இதுவும் டேனியல் தாமஸினால் நடத்தப்பட்ட சூழ்ச்சி நாடகமாக இருக்குமோ? இல்லை, இருக்கவே முடியாது! டேனியல் தாமஸுக்கு அவளுடைய பூர்வீகம் தெரியுமே அல்லாது கணவன் சத்யனுடைய பூர்வீகம் தெரிய நியாயமில்லை! தெரிந்த ஒரு விஷயத்தை இது நாள் வரை மூடி வைக்கக் காரணம் எதுவும் இல்லை. அவள் கண்ட காட்சி உண்மையாகத்தான் இருக்க வேண்டும்!

மிக மிக ஆரம்ப காலத்து ஞாபகங்களை சில துணி களையும் புகைப் படத்தையும் பார்த்தவுடன் திரும்பப் பெற்ற ரங்கன் என்ற சந்திரனுக்குச் சமீப காலத்து நிகழ்ச்சிகளைப் பற்றிய ஞாபகங்கள் திரும்ப எத்தனை நிமிடங்கள் பிடிக்குமோ?

இப்படி நினைத்தவுடன் அவள் மனத்தைப் பீதி பிடித்துக் கொண்டது. இன்னும் சில விநாடிகளில் அவளுடைய வாழ்வை அவள் இழக்கப் போகிறாள் என்ற எண்ணம் ஊர்ஜிதமாயிற்று.

சிறு பிள்ளைப் பருவத்தில் இழந்த அண்ணன் மீது சத்யனுக்கு எவ்வளவு அன்பு என்பதை அவள் நன்றாக உணர்ந்திருந்தாள்.

''அண்ணன் எனக்கு எண்ணெய் தேய்ப்பான். எனக்குச் சோளம் சுட்டுத் தருவான். பள்ளிக்கு எனக்குப் புத்தகம் தூக்கி வருவான். அவன் எனக்குத் தந்தையும் தாயுமானான். வசதி வந்த நிலையில் இருக்கும் நான் அவனைத் தேடிப் பிடித்து வாழ்வளிக்க முடியாமல் இருக்கிறேனே!'' என்று சத்யன் பலமுறை அவளிடம் சொல்லி இருக்கிறான்.

அவள் வாழ்வைக் கெடுத்த ரங்கன்தான் அந்த அண்ணனாக இருப்பான் என்று அவளால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

சீதா இவ்வாறு சிந்தித்துக்கொண்டு இருக்கும்போது, அண்ணனும் தம்பியும் பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்ற நிலையில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்ணீர் விட்டபடி நின்றனர். பிறப்பின் பிணைப்பு என்ற பந்தத்தின் முன் சீதா அங்கு நிற்பதே அவர்களுக்குத் தெரியவில்லை.

இருவரும் அந்த அறையை மறந்தனர். அங்கிருந்த சீதாவை மறந்தனர். ஒருவித மயக்கம் அந்தச் சகோதரர்களை ஆட்கொண்டது.

சதயன்தான் முதல் முதலாக அந்த மயக்கத்திலிருந்து விடுபட்டான்.

''அண்ணா, உன்னை எங்கெல்லாம் தேடினேன் தெரியுமா? உன்னைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை!'' என்றான்.

''தம்பி, உன்னால் எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? சிறையில் இருந்தபோது சிறை அதிகாரிகளைப் பல முறை உன்னைப் பற்றி விசாரித்தேன் ''என் தம்பி எங்கு இருக்கிறான்? அவன் பிழைத்து விட்டானா? உயிரோடு இருக்கிறானா?'' என்று.

''நீ நல்ல வசதியான இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டதாக மட்டும் சொன்னார்கள். உன்னை அழைத்துப் போனவரின் பெயரைச் சொல்ல மறுத்து விட்டார்கள். உனக்கு வாழ்வு கொடுத்தவர்கள் எதிர் காலத்தில் உனக்குத் திருட்டு அண்ணன் தொடர்பே வேண்டாமென்று நினைத்தார்கள் போலும்'' என்றான்.

''நான், சந்திரன் என்ற பெயரில்தான் உன்னைத் தேடினேன். ரங்கன் என்ற பெயர் மாற்றம் எனக்குத் தெரியாது'' என்று டாக்டர் சத்யன் வருந்தினான்.

''சிறுவனாக இருந்து சிறையிலிருந்து வெளிவந்த நான் பழைய பெயரை மறைத்து வாழ்வதுதான் சரி என்று பெயர் மாற்றிக் கொண்டேன்'' என்று பதில் கூறினான் ரங்கன்.

"கடைசியாக திருநெல்வேலி பாங்கு சொந்தக்காரர் ஒருவர் என்னைச் சென்னையில் சந்திக்க நேர்ந்தது. அவரிடம் நான் பேச்சு வாக்கில் பால்யத்தில் இழந்த என் அண்ணனைப் பற்றிப் பேச்சுக் கொடுத்தேன். அவர் என்னிடம் விவரங்களை விசாரித்தார். ஒரு வாரம் கழித்து எனக்கு ஒரு லெட்டர் எழுதினார். அதில் அவர் ஒரு நபர்மீது எனக்குச் சந்தேகம். ஒரு வேளை அவன் உங்க அண்ணனாக இருக்கலாம்; எதற்கும் நேரில் வந்தால் முடிவு செய்யலாம் என்று எழுதியிருந்தார். கடிதம் வந்தபோது வடஇந்தியாவில் இருந்தேன். ஊர் திரும்பியதும் கடிதத்தைப் பார்த்துத் திருநெல்வேலிக்கு வந்தேன். அதற்குள் அந்தப் பாங்குச் சொந்தக்காரர் ஒரு கள்ளக் கடத்தல் முயற்சியில் இறந்து விட்டதாகவும், அது பற்றிய வழக்கும் முடியும் தருவாயில் இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். மனம் உடைந்து ஊர் திரும்பும் போதுதான மதுரை ஸ்டேஷனில் என் எதிர்கால மனைவியைச் சந்தித்தேன்" என்று கூறினான் டாக்டர் சத்யன்.

விஷயம் அவள் தந்தையில் வந்து தொடும்போது சீதாவால் அங்கு நிற்கவே பிடிக்கவில்லை. மெல்ல ஹாலை நோக்கி நடந்தாள்.

அப்போதுதானா இன்ஸ்பெக்டர் டேனியல் தாமஸ் அங்கு வர வேண்டும்?

அவர் "உடனே சத்யனையும் ரங்கனையும் பார்க்க வேண்டும்" என்றார்.

கணவன் இருக்கும் அறை நோக்கி அவர் நகர்ந்தார்.

டேனியல் தாமஸ் அறையில் நுழைந்ததும், சத்யன் உற்சாகத்துடன் ரங்கன் ஞாபகத்தில் ஏற்பட்ட புது விளைவுகளைப் பற்றிக் குறிப்பிட்டான். ரங்கன் வேறு யாருமல்ல, தன்னுடைய சகோதரன் சந்திரன்தான் என்று சொன்னான்.

டேனியல் தாமஸ் அதிர்ச்சியால் அயர்ந்து போனார் சில விநாடிகளுக்கு. இவ்விதத் திருப்பத்தை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அதிர்ச்சி தெளிந்ததும் அவர் மனத்தில் ஒரு திட்டம் உருவாகியது. எப்போது ரங்கனுக்குத் தன் சுய நினைவு ஏற்பட்டதோ, அப்போது அவன் சீதாவை அடையாளம் தெரிந்து கொள்வதில் கஷ்டம் இருக்காது என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

''இந்தச் சந்தோஷச் செய்தி உங்கள் மனைவிக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்குமே...!'' என்றார்.

உடனே சத்யன் இடைமறித்தான். ''அடடா! மறந்தே போய் விட்டேன். இந்தச் சந்தோஷ சமாசாரம் இன்னும் என் மனைவிக்குக் கூடச் சரியாகத் தெரியாது. இப்போதுதான் நிகழ்ந்தது. இதோ அவளைக் கூப்பிடுகிறேன்'' என்று கூறி ''சீதா! சீதா!'' என்று அழைத்தான்.

ஹாலில் உட்கார்ந்திருந்த சீதா நடுக்கத்துடன் எழுந்தாள். கொலைக்களத்துக்கு அழைத்துச் செல்லப்படும் கைதிபோல் அடிமேல் அடி வைத்து நகர்ந்தாள்.

கணவன் அறைக்குள் அடி எடுத்து வைக்குமுன்பே டேனியல் தாமஸ் எதிர்ப்பட்டார்.

''மிஸஸ் சத்யன், ஒரு சந்தோஷ சமாசாரம்! ரங்கன் உங்கள் கணவனின் மூத்த சகோதரன். காணாமற்போன சகோதரனை இந்தப் போலீஸ் இலாக்கா கிடைக்கச் செய்து விட்டது. அடுத்தபடியாக அவனைச் சுட்ட ஆளையும் கண்டு பிடித்து விட்டால் எல்லாம் பூர்த்தியாகி விடும்!'' என்று கிண்டலாகக் கூறினார்.

சீதா அவர் வார்த்தைகளுக்குக் காது கொடுக்காமலே அறையில் நுழைந்தாள்.

அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

ரங்கன் திரும்பிப் பார்த்தான். அவன் பார்வையிலே ஒரு குழப்பம்! கண்களைக் கொட்டியபடி ரங்கன் சீதாவைப் பார்த்தான்.

## 17

ரங்கன் எப்போது சீதாவைச் சுட்டிக் காட்டி 'என்னைச் சுட்டவளே' 'என்னை மணக்க வேண்டியவளே' என்று சொல்லுவானோ என்ற பீதியுடன் காத்திருந்தாள் சீதா! ரங்கன் தன் இடத்திலிருந்து சீதாவை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தான். டாக்டர் சத்யன் உவகையோடு, "சீதா, ரங்கன் என் காணாமற்போன சகோதரன். எல்லா ஞாபகங்களையும் இழந்தவனுக்கு, பால்ய ஞாபகங்கள் திரும்பி விட்டன. இளமைப் பருவத்து ஞாபகங்கள்தான் எப்போதும் பசுமரத்து ஆணிபோல் ஆழமாகப் பதிவன. இன்னும் சில நாட்களில் அவனுக்கு மற்ற ஞாபகங்களும் திரும்பி விடும், சீதா! விதி விசித்திரமான வகையில் என்னை என் சகோதரனோடு சேர்த்து விட்டது" என்று கூறினார். சீதாவுக்கு என்ன சொல்வதெனப் புரியவில்லையாயினும் ஒப்புக்காக "ரொம்ப சந்தோஷம். எல்லாம் நல்லபடியாக முடிய வேண்டும் என்றுதான் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்" என்றாள். டேனியல் தாமஸ் அர்த்தபுஷ்டியோடு அவளைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

டாக்டர் சத்யன் ஆவலுடன் அண்ணனை நோக்கித் திரும்பினார்.

"அண்ணா, நன்றாக முயற்சி செய்து சிந்தித்துப் பார். எது வரையில் உன் ஞாபகங்கள் நிற்கின்றன? நீ சிறையிலிருந்து வெளி வருகிறாய்... அப்புறம்?"

"நான் உன்னைத் தேடுகிறேன். ஆஸ்பத்திரியி லிருந்து உன்னை அழைத்துச் சென்று விட்டதாகக் கேள்விப்படுகிறேன். என்னுடைய திருட்டுக்கேஸ் நடத்திய இன்ஸ்பெக்டரிடம் போய் விசாரிக்கிறேன்...... உன்னை அழைத்துச் சென்றவர்களைப் பற்றி மழுப்பு கிறார். அப்புறம் பிரமை பிடித்தவன்போல் திரிகிறேன். பிறகு பல ஊர்களில் சுற்றி வருகிறேன். ஒரு யாழ்ப் பாணத்து முஸ்லீம், யூனஸ் என்று ஏதோ பேர், அவனுடன் பழக்கம் ஏற்படுகிறது. அப்புறம் பல நபர்கள். ரங்கூன், பெனாங், சிங்கப்பூர் சென்ற ஞாபகமெல்லாம் கனவுக் காட்சிகள்போல் தெளிவில்லாமல் தெரிகின்றன. எது முதல், எது பின்பு என்று தெரியவில்லை. பிடிப்பே இல்லாத ஒரே விதமான நிகழ்ச்சிகளாக ஒன்றுக்குப் பின் ஒன்றாகப் பின்னிக் கிடக்கின்றன..." என்று கூறிவிட்டு நிறுத்தினான்.

"கூட்டோடு கூடாக, உடனே சிந்தித்துப் பார்! நன்றாக யோசித்துப் பார்! அன்பு, ஆசை, பாசம் இம்மாதிரி உணர்ச்சிகள் தூண்டுகோலாக இல்லாமல், வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகள், உண்பது, உடுப்பது, தூங்குவது, சம்பாதிப்பது போன்ற இவை வலுவாக மனதில் பதிவது இல்லை. மிருக வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் மேலெழுந்தவாரியாக மனதில் பதியும். அதனால்தான் அவை கோர்வை இல்லாத நிழல் படங்கள் போல் தெரியும். அசாதாரணமான அன்பு, அசாதாரணமான வெறுப்பு, எல்லை கடந்த பீதி, உணர்ச்சி-இவைகள்தான் மனதில் ஆழமான கறை ஏற்படுத்தும்!

அண்ணா! நன்றாக யோசித்துப் பார். நீ யாரை யாவது கண்டு பயந்திருக்கிறாயா? யாரையாவது வெறுத்திருக்கிறாயா?" என்று டாக்டர் சத்யன் கேட்டார்.

''நீங்கள் யாரையாவது கண்டு உங்கள் மனத்தைப் பறிகொடுத்திருக்கிறீர்களா? எந்தப் பெண்ணாவது உங்கள் மனத்தில் நிரந்தரமான கிளர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறாளா?'' என்று ஆவலுடன் கேட்டார் டேனியல் தாமஸ்.

சந்திரன் தன் இருக்கையை விட்டு எழுந்தான்.

தர்மசங்கடமான ஒரு நிலைக்குத் தன்னைக் கொண்டு வந்து நிறுத்துவதற்குரிய கேள்விகளைக் கேட்ட இன்ஸ்பெக்டர் டேனியல் தாமசைப் பொசுக்கி விடலாம் போலிருந்தது, சீதாவுக்கு.

சந்திரன் என்ற ரங்கன் தீவிரமாகச் சிந்தித்தபடி அங்குமிங்கும் அறையில் நடந்தான்.

டாக்டர் சத்யன் ஆவலுடன் தன் அண்ணனையே நோக்கியபடி நின்றார்.

ஓரிரண்டு முறை ரங்கன், சீதா உட்கார்ந்திருக்கும் இடத்தை நோக்கிப் பார்த்தான். தன் புருவங்களை நெரித்தான்.

சீதாவுக்கு நறுக்கென்று மனதில் பயம் தோன்றியது.

ஒரு வினாடி ரங்கன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். உடனே 'சட், இருக்காது' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

டேனியல் தாமஸ் ஆவலுடன் ''என்ன இருக்காது என்று சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

ரங்கன் சீதாவைப் பார்த்துவிட்டு, டேனியல் தாமசை நோக்கி உச்சக் குரலில் கத்தினான். ''என்னை வதைக்காதீர்கள் டேனியல் தாமஸ்! என்னைக் கொஞ்சம் சும்மா விடுங்கள்'' என்றான்.

''அண்ணா, சிந்திக்க வேண்டாம். சும்மா ஓய்வுடன் உட்காரு'' என்றார் சத்யன்.

''இல்லை, தம்பி! ஏதோ வெறுப்பு ஞாபகங்கள் எழுகின்றன. உருவங்கள் தெளிவாக இல்லை. அதோடு இன்பமான நல்ல ஞாபகங்களும் எழுகின்றன. எந்த

இடத்தில், எந்த முகம், என்ன நடந்தது என்று நினைத்துப் பார்க்கும்போது எனக்குத் தலை சுற்றுகிறது. அடிவயிற்றை என்னமோ செய்கிறது. நான் எதற்காகத் தம்பி இப்படி ஞாபகங்களைக் கிளற வேண்டும்? உன்னை என் தம்பி என்று கண்டு கொண்டேன். அது ஒரு இன்பமான ஞாபகம். அது எனக்குப் போதாதா? மிருகங்கள் போல் ஞாபகங்கள், சிந்தனைகள் இல்லா விட்டால் மனிதன் எவ்வளவு நிம்மதியாக இருப்பான்...!'' என்று அலுத்துக்கொண்டு தலையில் கை வைத்து உட்கார்ந்தான்.

''இல்லை அண்ணா. நீ இப்போதுதான் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும். இன்னும் சில மணி நேரங்களில் மறுபடியும் உன் ஞாபகங்களுக்குத் திரை விழுந்து விடலாம். அதற்குள் நீ விவரங்களைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். நான் கிழக்கத்திய நாடுகளின் பெயர்களைச் சொல்கிறேன். உனக்கு ஏதாவது ஞாபகம் ஏற்படுகிறதா சொல்.''

ரங்கன் அப்படியே சிந்தித்தபடி நின்றான்.

டாக்டர் சத்யன் ''கொழும்பு, கண்டி, சிங்கப்பூர், பெனாங்கு, ரங்கூன், மாண்டலே...'' என்று சொல்லி வந்தபோது ரங்கன் ''தம்பி நிறுத்து!'' என்று சொல்லிச் சுவற்றில் மாட்டியிருக்கும் காலண்டரை நோக்கிச் சென்றான்.

அந்தக் காலண்டரில் ஒரு சீனப்பெண்மணி சீன உடையில் உடல் கவர்ச்சி வெளிப்படும்படி உட்கார்ந் திருந்தாள்.

ரங்கன் அந்தக் காலண்டரில் இருக்கும் மங்கையைப் பார்த்துவிட்டுச் சீதாவைத் திரும்பிப் பார்த்தான்.

டேனியல் தாமஸும் டாக்டர் சத்யனும் காலண்டர் பெண்ணின் உருவத்தையும், சீதாவின் உருவத்தையும் மாறி மாறிப் பார்த்தனர்.

டாக்டர் சத்யன் ''ஆமாம், காலண்டரில் உள்ள சீன உடை மாதுக்கும், சீதாவுக்கும் முகச் சாயலில் ஒரு ஒற்றுமை இருக்கிறது!'' என்றார்.

ரங்கன் ''ஆமாம்'' என்று சொல்லி விட்டுச் சீதாவைப் பார்த்தான்.

''இப்போது என் கடந்த கால வாழ்க்கையில் நடந்த இரண்டு சம்பவங்கள் லேசாக ஞாபகத்திற்கு வருகின்றன. ஒன்று மாண்டலே நகரத்தில் நடந்தது. மற்றது திருநெல்வேலியில் நிகழ்ந்தது...'' என்று சொல்லி நிறுத்தினான்.

சீதா பயங்கர முடிவு நெருங்கி விட்டது என்பதை உணர்ந்தாள்.

டேனியல் தாமஸ் ஆவலுடன் ''மாண்டலேயில் நடந்தது என்ன? திருநெல்வேலியில் நிகழ்ந்தது என்ன?'' என்று கேட்டார்.

## 18

ரங்கன் நிதானமாகத் திருநெல்வேலியில் நிகழ்ந்த நிகழ்ச்சியை வர்ணிக்க ஆரம்பித்தான்.

''திருநெல்வேலியில் ஒரு கடை. அது ஒரு பெரிய பலகாரக் கடை என்று நினைக்கிறேன். அதன் முதலாளி ஒரு வயதானவர். அவர் எனக்கு அந்தக் கடையில் வேலை தந்தார்...'' என்று கூறிவிட்டு நிறுத்தினான் ரங்கன்.

''அந்த முதலாளியின் பெயர் என்ன தெரியுமா?'' என்று கேட்டார் சத்யன்.

பெயர் தெளிவாக இல்லை. அவருக்கு ஒரு மனைவி. இளம் மனைவி! நான் இரவுக் கணக்கை முதலாளியிடம் ஒப்புவிக்கப் போகும் போதெல்லாம் அவர் அருகில்

அவள் நின்றுகொண்டிருப்பாள். முதலாளி நல்லவர்; அதிகம் குற்றம் சொல்ல மாட்டார். ஆனால் அவர் மனைவி, வேலைக்காரர்கள் மீது சீறி விழுவாள். என் கணக்கில் சிறு பிசகு இருந்தாலும் அதைப் பெரிது பண்ணிப் பேசுவாள். 'இப்படி ஒரு கணக்கனை வைத்திருந்தால் கடை உருப்பட்டது மாதிரிதான்' என்று சொல்வாள். எனக்கு அவளைக் கண்டாலே பயம். நல்ல சம்பளம் வரும் வேலையிலிருந்து, இவள் பேச்சைக் கேட்டு என்னை முதலாளி நீக்கிவிட்டால் என்ன செய்வது என்று அச்சம் அடைந்தேன்.

''ஒருநாள் இரவு நான் கணக்கை எடுத்துக்கொண்டு சென்றபோது முதலாளி வீட்டில் இல்லை. அவருடைய இளம் மனைவி மட்டும் இருந்தாள்.

''முதலாளி வெளியூர் போயிருப்பதாகவும் இன்னமும் வரவில்லை என்றும் சொன்னாள். சரி, கடைக்குத் திரும்புவோம் என்று அடி எடுத்து வைத்தேன். 'முதலாளி இரவு ரயிலில் திரும்பினாலும் திரும்பலாம். அவர் வந்தவுடன் கணக்கைக் காட்டி விட்டுப் போகக் கூடாதா? அதுவரை தங்குவது உங்களுக்கு முடியாதோ கணக்கரே!' என்று கிண்டலாகக் கேட்டாள். 'சரி இருந்து முதலாளியைப் பார்த்து விட்டுப் போகிறேன்' என்று கணக்குப் புத்தகங்களுடன் உட்கார்ந்தேன்.

முதலாளியின் மனைவி காப்பி கொண்டு வந்து கொடுத்து விட்டு உள்ளே போய் விட்டாள். காப்பியைக் குடித்துவிட்டுக் காத்திருந்தேன். எத்தனை நேரம் காத்திருந்தேன் என்று எனக்குத் தெரியாது. அப்படியே கண் அயர்ந்து விட்டேன்.

''நல்ல தூக்கத்திலிருந்து என்னை யாரோ எழுப்புவது போன்ற உணர்வு ஏற்படவும் அலறி அடித்துக்கொண்டு எழுந்தேன். எதிரே முதலாளியின் மனைவி அமர்ந்திருந்தாள். அவள் 'கூச்சல் போட்டு

ஊரைக் கூப்பிடாதீங்க!' என்றாள். 'முதலாளி இன்னும் வரவில்லையா?' என்று கேட்டேன். 'அவர் இன்று வர மாட்டார்!' என்று சொல்லிவிட்டு ஒருவிதமாகச் சிரித்தாள்.

''அப்போதுதான் அவள் ஆடை ஒழுங்கில்லாமல் இருப்பதையும் அவள் கண்களில் ஒருவிதப் பயங்கர ஒளி வீசுவதையும் கண்டேன்.

''அன்று நான் முதலாளிக்குத் துரோகம் இழைத்தேன். என் கணக்கில் தினமும் குற்றம் சொல்லி வந்தவள் இப்படி ஏன் நடந்துகொண்டாள் என்பது எனக்குப் புரியவில்லை. என்னைப் பார்த்த அன்றே அவளுக்கு என் மீது ஆசை ஏற்பட்டு விட்டதாம். அதை வளர விடாமல் தடுக்க அவள் என் கணக்கில் குற்றம் கற்பித்து என்னை வேலையிலிருந்து நீக்க நினைத்தாளாம். நானாகப் பயந்து வேலையை விட்டு விடுவேன் என்று எதிர்பார்த்தாளாம். ஆனால் என் பசிக் கொடுமை அவ்வளவு நிந்தனைகளையும் பொறுத்துக் கொண்டு அந்தக் கடையில் வேலை பார்க்கச் செய்தது. முடிவில் அன்றிரவு என்னைத் தனிமையில் சந்தித்ததும் அவள் மனதில் ஆசை பூகம்பம் போல் வெடித்து, நாணத்தை இழக்கச் செய்ததாம்.

''அப்புறம் தினமும் நாங்கள் முதலாளிக்குத் தெரியாமல் சந்தித்தோம். ஒரு நாளைக்கு ஒரு முறை, இரு முறை, மூன்று முறை என்று சந்திப்புகள் அதிக மாகிக் கொண்டு போனாலும், அவள் ஆசை தணிய வில்லை. எனக்கு அவளிடமிருந்து எப்படித் தப்புவது என்று புரியவில்லை. இந்தச் சூழ்நிலையில் ஒரு நாள் அதிகாலையில் அவள் திடீரென்று நான் வேலை செய்து கொண்டிருந்த பலகாரக் கடைக்கு வந்தாள். தூங்கிக் கொண்டிருந்த என்னைத் தட்டி எழுப்பி, 'நேற்று இரவு என் கணவருக்கு மார்வலி வந்தது. அவர் படுக்கையில்

படுத்தபடி 'மருந்து... மருந்து...' என்று கதறினார். வழக்கமாக நான் அவருக்கு எதிர்ப்புற அலமாரியிலிருந்து மருந்தும் தண்ணீரும் எடுத்துக் கொடுப்பேன். ஆனால் நேற்று பேசாமல் இருந்து விட்டேன். அவர் கதறினார். நான் பேசாமல் இருந்து விட்டேன். அவர் மெள்ள நகர்ந்து அலமாரிக்குச் சென்றார். நகர்ந்த சிரமத்திலேயே அவர் மருந்து சாப்பிடுவதற்கு முன் இறந்து விட்டார்!' என்று நிதானமாகச் சொன்னாள். அவள் முகம் கொலைகாரியின் முகம்போல் தெரிந்தது. என்னை ஒரு கொலைகாரி என்றுதானே நினைக்கிறாய்? அந்தக் கொலையை உனக்காகச் செய்தேன். உனக்கும் அந்தக் குற்றத்தில் பங்கு உண்டு. பலகாரக் கடையை விற்று விட்டு இருவரும் ஊருக்குப் போய் விடுவோம்!' என்றாள்.

''எனக்கு அப்புறம் அங்கு இருக்கவே பிடிக்கவில்லை. நான் அன்றிரவே அவளிடமோ, யாரிடமுமோ சொல்லாமல் அந்த ஊரை விட்டே ஓடி விட்டேன், படகில் ஏறி...!'' என்று கூறிவிட்டு நிறுத்தினான் ரங்கன்.

டேனியல் தாமஸ் முகத்தில் சந்தோஷத்துக்குப் பதிலாக ஏமாற்றமே இருந்தது. ரங்கன் கூறிய திருநெல்வேலி வரலாற்றில் அவருக்குத் திருப்தி இல்லை.

அதே சமயத்தில் சீதாவுக்கு மன நிம்மதி ஏற்பட்டது.

ரங்கன் அவள் தந்தையைப் பற்றியோ, அவளைப் பற்றியோ முற்றிலும் மறந்து விட்டான் என்பது தெளிவாகியது.

டேனியல் தாமஸ், ''மாண்டலேயில் ஏதோ நிகழ்ந்தது என்று சொன்னீர்களே...... அது ஞாபகத்துக்கு வருகிறதா...?'' என்று கேட்டார்.

''அதுவும் ஒரு பெண் விஷயம்தான். அவள் சீனப் பெண்மணி. அவள் முகம் சரியாக ஞாபகமில்லை. அவள் தந்தையோடு எனக்குத் தொடர்பு இருந்தது. அவர் ஒரு

கம்பெனியிலிருந்து பணம் எடுத்து விட்டார். அவருக்கு இரண்டு நாட்களில் அந்தக் களவாடிய தொகையை ஈடு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. நான் அவரைக் கள்ளக் கடத்தலில் ஈடுபடுத்திப் பணம் சம்பாதித்துத் தருவதாகச் சொன்னேன். அதற்காக அவர் பெண்ணை எனக்குத் திருமணம் செய்விக்கும்படி சொன்னேன். அவர் ஒத்துக் கொண்டார்... அப்புறம் எனக்கு ஞாபகம் இல்லை.

''ஏதோ கடற்கரையில் இரவு நானும் பெரியவரும் அந்தப் பெண்ணும் காத்திருப்பதாக ஞாபகம். அலைகளின் சப்தம்! போலீஸ் நடமாட்டம்... ஒரு பாழடைந்த விடுதி... குண்டுகள் வெடிக்கின்றன. அப்புறம்... அப்புறம் எனக்கு ஒன்றுமே புரியவில்லை...'' என்று கூறிவிட்டுத் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டான் ரங்கன்.

டேனியல் தாமஸ் ஒருவிதப் புதுத் தீர்மானத்தோடு காணப்பட்டார். அதைக் கண்ட சீதா கலக்கமடைந்தாள்.

டேனியல் தாமஸ் கனைத்துக் கொண்டு டாக்டர் சத்யனை நோக்கி,

''ஏன், டாக்டர்! ரங்கனின் திருநெல்வேலி ஞாபகங்கள் மாண்டலேயுக்கும், மாண்டலே ஞாபகங்கள் திருநெல்வேலிக்கும் பொருந்தும்படி இருக்க முடியாதா? அதாவது ரங்கன் மாண்டலேயில் நிகழ்ந்ததாகக் கூறும் நிகழ்ச்சிகள், திருநெல்வேலியை அடுத்த தூத்துக்குடிக் கடற்கரையில் நிகழ்ந்திருக்கலாம் அல்லவா?'' என்று கேட்டார்.

டாக்டர் சத்யன் சிறிது யோசித்துவிட்டு ''அப்படியும் இருக்கலாம்'' என்றார்.

உடனே டேனியல் தாமஸ் ''எனக்கு ஒன்று தோன்றுகிறது. தூத்துக்குடியைச் சேர்ந்த கடற்கரையில் ஒரு கள்ளக் கடத்தல் நாடகம் மறுபடி நிகழ்த்தினால்,

ரங்கன் ஞாபகங்கள் திரும்பலாம் அல்லவா?'' என்றார்.

சீதாவுக்குப் பகீரென்றது சத்யன் ''அது ஒரு எக்ஸலண்ட் ஐடியா! அந்தச் சீனப் பெண்மணிக்கு ஒரு நகல், அவள் தந்தைக்கு ஒரு நகல் தயார் செய்து, கடற்கரையில் கடந்த காலக் காட்சிகளை மறுபடியும் நிகழ்த்துவோம்'' என்றார்.

டேனியல் தாமஸ் சீதாவை வெற்றிப் புன்னகையோடு பார்த்தார். ''அந்தக் கடந்த காலக் காட்சியைத் தத்ரூப மாக நிகழ்த்த முடியும் என்று எனக்கு நம்பிக்கை இருக் கிறது!'' என்றார்.

## 19

நள்ளிரவு வேளை. தூத்துக்குடி கடற்கரை அந்த பாழடைந்த பங்களா. ஆனால் பல வருஷங்கள் உருண்டோடி விட்டதற்குச் சான்றாக அந்த பங்களா வைச் சுற்றி இன்னும் அதிகமாகப் புதர் மண்டிக் கிடந்தது. அந்தப் பங்களாவின் பின் பகுதி இடிந்து கிடந்தது.

டாக்டர் சத்யனும் சீதாவும் பங்களாவை நெருங்கும் போதே சீதாவுக்குக் கை கால்களில் நடுக்கம் ஏற்பட்டது. அவள் அவளுடைய தந்தையோடு அங்கு வந்த முதல் தடவை கூட இப்படிப் பயப்படவில்லை. அப்போது அவள் சிறுமி. காலேஜிலிருந்து வெளிவந்த நிலையில் இரவில் பங்களாவுக்கு வந்தபோது அது லேசாகப் பயம் கலந்த நூதன அனுபவமாக இருந்தது.

ஆனால் இப்போதோ...? இந்தப் பரிசோதனை வெற்றி பெற்று, ரங்கனுக்கும் ஞாபகம் திரும்பிவிட்டால், அவள் கணவனோடு அனுபவித்து வரும் சொர்க்க வாழ்க்கையையே இழக்கும் நிலை நிலை ஏற்படும்.

''முதல்முறை இந்தப் பங்களாவில் அடி எடுத்து வைத்தபோது தந்தையை இழந்தேன். இப்போது கணவன் அன்பை இழக்கப் போகிறேனா?''

அவள் வாழ்வில் அவள் கணவன் சத்யனின் அன்பை விடச் சிறந்தது வேறு ஒன்றும் இருக்க முடியாது.

சீதாவின் உடல் அவளையும் அறியாமலே சிலிர்த்தது.

உடனே சத்யன் ''பயப்படாதே சீதா! இது நிஜக் கள்ளக் கடத்தல் அல்ல, வெறும் நாடகம்'' என்று அவளுக்குத் தேர்தல் மொழிகள் சொன்னார்.

இன்னும் மிகச் சிறிய வயதிலேயே நிஜக் கள்ளக் கடத்தல் காட்சியைப் பார்த்திருந்த சீதாவுக்குச் சிரிப்பு வந்தது.

''ஏன் சிரிக்கிறாய் சீதா?'' என்றார் சத்யன்.

சீதா பதில் கூறுவதற்கு முன்பே ஒரு புதரிலிருநது டேனியல் தாமஸ் வெளி வந்தார். ''இந்தச் சூழ்நிலையில் உங்கள் மனைவிக்குச் சிரிப்பு வர வேண்டுமென்றால், உங்கள் மனைவியின் மன உறுதியைப் பாராட்டத் தான் வேண்டும்'' என்று இரு பொருள்படும்படி பேசினார் டேனியல் தாமஸ்.

அடுத்தபடியாக டேனியல் தாமஸ் சத்யனையும் சீதாவையும் அந்தப் பங்களாவின் ஹால் வழியாக மாடி அறைக்கு அழைத்துப் போனார்.

அந்த மாடி அறையில் கட்டிலும் நாற்காலிகளும் அன்று கிடந்த படியே இன்றும் கிடந்தன. அவற்றின் மீது நிறையப் புழுதி படிந்திருந்தது. மூலையில் வைக்கப் பட்டிருந்த கண்ணாடி பாட்டில்கள் கூட அப்படியே மூலையில் இருந்தன. அதே அறையில் இப்போது ரங்கன் ஜன்னல் வழியாகக் கடலைப் பார்த்தபடி நின்றிருந் தான்.

முதல் தடவையின்போது இருள் இருந்தமையால்

கடல் அலையின் இரைச்சல் மட்டும் கேட்டது. ஆனால் இப்போதோ முழுநிலவின் ஒளியில் கடல் தகதகவென்று மின்னியது.

சீதா அறையை ஒரு முறை சுற்றிப் பார்த்தாள். பழைய ஞாபகங்கள் அவள் மனதில் குப்பென்று குவிந்தன.

அவள் தந்தை அவளிடம் பேசிய சம்பாஷணைகள் யாவும் அப்படியே ஞாபகத்துக்கு வந்தன.

''சீதா, அப்பாவுக்குப் பசியாயிருக்கு. அப்பாவுக்குக் கூடச் சாப்பாடு போட மாட்டாயா?'' என்ற வார்த்தைகளும், பிறகு அவர் அவசர அவசரமாகச் சாப்பிட்டுமுடித்து விட்டு அழுததும் ஞாபகத்துக்கு வந்தன.

''ஏம்ப்பா அழறீங்க?'' என்று சீதா கேட்டதும், அவர் ''அதிக அன்பாலே வீணானவனம்மா நான்! என் வாழ் நாள் பூராவும் உண்மையை நெருங்கினவர்களிடம் கூட மறைத்து வாழ்ந்து இப்போது மாட்டிக் கொண்டேம்மா!'' என்ற வாக்கியங்கள் சீதாவுக்கு அவள் நிலையை வர்ணிப்பது போல் இருந்தது.

அவளும் அவள் தந்தையைப்போல் ஒரு உண்மையை வெகு நாள் தன் கணவனிடம் மூடி வைத்த காரணத்தினால்தானே இன்று இப்படி அவதிப்பட நேருகிறது!

தான் தந்தைக்கேற்ற மகள் என்று நினைத்தபோது கண் கலங்கியது.

''இன்னிக்கு நீ போடும் சாப்பாடு என் கடைசிச் சாப்பாடாயிட்டா...'' என்ற வாக்கியங்கள் அவளை 'ஓ'வென்று அலறவே வைத்தது.

அன்று அவளிட்ட சாப்பாட்டோடு சென்றவர், உலகத்தை விட்டே சென்று விட்டாரே!

அழும் சீதாவைப் பார்த்து ரங்கனும் திரும்பினான், சத்யனும் திரும்பினான்.

டேனியல் தாமஸும் முதல் முறையாக இரக்கத்

தோடு ''மிஸ்டர் சத்யன்! மன்னிக்க வேண்டும். இம் மாதிரி இடங்களுக்கு உங்களை வர வழைத்திருக்கக் கூடாது...'' என்றார். உடனே ''வீரய்யா!'' என்று அழைத்தார்.

படிக்கட்டு வழியே யாரோ ஏறி வரும் சப்தம் கேட்டது.

சீதா கதவுப்புறம் திரும்பினாள். அங்கு இரு உருவங்கள் நடந்து வந்தன. முதல் உருவம் வீரய்யன். அன்று ரங்களையும் அவள் தந்தையையும் பற்றிப் போலீஸுக்குத் தகவல் கொடுத்த அதே வீரய்யன்! இப்போது மிகவும் கிழவனாகக் காணப்பட்டான். பற்களை இழந்த அவன் இருளிலிருந்து வெளியே வந்து பொக்கை வாயைக் காட்டியபடி நின்றான்.

''எல்லாம் தயாரா இருக்கு, இன்ஸ்பெக்டர் சார்!''

அப்போது அவன் பின்னால் நின்ற உருவம் இருளி லிருந்து வெளிச்சத்துக்கு வந்தது.

சீதா அதிர்ச்சி அடைந்தாள்! அந்த உருவம் அவள் தந்தையைப் போன்ற உருவம். அன்று முடிவு நாளில் அவள் தந்தை அணிந்திருந்த அதே உடைகளை அந்த உருவம் அணிந்திருந்தது.

வீரய்யன் ''இந்த ஆளு இறந்துபோன சிவசங்கரம் பிள்ளை மாதிரியே இருக்காருங்க'' என்றான்.

''சிவசங்கரம் பிள்ளை'' என்ற பதத்தைக் கேட்ட வுடன் ஏதோ உணர்வு தோன்றியவன் போல் ரங்கன் திரும்பிப் பார்த்தான்.

ரங்கனின் பார்வை சீதாவின் தந்தை சிவசங்கரம் பிள்ளையின் நகல்மீது நின்றது.

அவனுக்குள் ஒரு சிறு அதிர்ச்சி ஏற்படுவதை உணர்ந் தான். ரங்கன் அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு சீதாவைத் திரும்பிப் பார்த்தான்.

உடனே தலையைத் திருப்பிக் கடற்கரையைப்

பார்த்தான். அவன் ஜன்னல்புறம் பார்த்தபடியே "இன்ஸ்பெக்டர்! நாடகத்தை ஆரம்பிக்கலாமே!" என்றான்.

## 20

"நாடகத்தை ஆரம்பிக்கலாமே" என்று ரங்கன் கூறியதும் இன்ஸ்பெக்டர் டேனியல் தாமஸ் ஒருவிதப் புன்னகையோடு பின்வருமாறு கூறினார்.

"நாடகத்தின் முதல் கட்டத்தில் ரங்கனும் மிஸ்டர் சத்யனும்தான் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

சத்யன் திகைப்புடன் இன்ஸ்பெக்டரைப் பார்த்தார்.

"கவலைப்படாதீர்கள், சத்யன்! நான் இன்று இரவு நடத்தப்போகும் நாடகம், இதே இடத்தில் பல வருஷங்களுக்கு முன்பு உண்மையில் நடந்த காட்சி. அந்தக் காட்சியின்படி சிவசங்கரம் பிள்ளை என்ற பேங்கர் அவர் மகளோடு இங்கு வந்தார். சிவசங்கரம் பிள்ளையின் கூட்டாளி அவர் மகளிடம் ஆபாசமான காதல் கடிதங்களைக் கொடுத்து, அதை எழுதச் சொன்னான். அது மட்டுமல்ல, அவள் அவனை மணந்து கொள்ளச் சம்மதம் என்பதாக உறுதியும் எழுத்து மூலமாக வாங்க நினைத்தான். இதற்குப் பிரதியாக அந்தக் கூட்டாளி கள்ளக் கடத்தலில் கிடைத்த சில லட்ச ரூபாய்களைச் சிவசங்கரம் பிள்ளைக்குக் கொடுத்து அவர் பண முடையைத் தீர்ப்பதற்கு ஒப்புக்கொண்டான்..."

சத்யன் உடனே குறுக்கிட்டார். "சிவசங்கரம் பிள்ளையின் கூட்டாளியின் பெயர்...?"

"அவன் பெயர் ரங்கன்!" என்றார்.

சத்யன் திடுக்கிட்டான். ரங்கனும் ஒருவிதக் குழப்பத்தோடு இன்ஸ்பெக்டரைப் பார்த்தான்.

''சிவசங்கரம பிள்ளையின் மகளாக என் மனைவி சீதாவை நடிக்கச் சொல்கிறீர்களே, அவள் பெயர் என்னவென்று தெரியுமா?'' என்று சத்யன் ஆவலோடு கேட்டார்.

சீதா சத்யனைப் பயத்தோடு பார்த்தாள்.

இன்ஸ்பெக்டர், ''அந்தப் பெண் பெயர் மட்டும் சரியாக ஞாபகத்தில் இல்லை'' என்றார்.

உடனே இன்ஸ்பெக்டர் எழுதிக் கொடுத்த வசனங் களைப் படித்தபடி ரங்கன் சீதாவிடம் காதல் கடிதங் களைக் கொடுத்து எழுதச் சொன்னான்.

சீதாவுக்குக் கடந்த காலக் காட்சி மீண்டும் நிகழ்வது போல் இருந்தது.

அவள் தந்தை வேடம் தாங்கியவன், அன்று அவள் தந்தை ஆத்திரப்பட்டதுபோல் ஆத்திரப்பட்டான். பிறகு தந்தை வேடம் தாங்கியவனும் ரங்கனும் அவள் கணவனும் அவளை மாடி அறையில் தனியே விட்டுச் சென்றனர்.

சில விநாடிகளில் அதே வீரய்யன் பாலை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்து அவளைப் பருகச் சொன்னான்.

சீதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது, இன்ஸ்பெக்டர் ஒரு சிறு விஷயத்தைக் கூட மறக்கவில்லையே என்பது தான்.

வீரய்யன் பல வருஷங்களுக்கு முன் அவளுக்குப் பால் கொண்டு வந்து கொடுத்தபோது கேலியாகச் சிரித்தது போல் இப்பவும் சிரித்தான்.

அவன்தான் அன்று போலீஸ் உளவாளியாக இருந்து அவள் தந்தையையும் ரங்கனையும் காட்டிக் கொடுத்த வன் என்பதில் சந்தேகமில்லை. இன்று வீரய்யன் கீழே இறங்கிப்போகும் முன்பு சீதாவிடம் பின்வரும் வார்த்தை களைக் கூறியதுதான் சீதாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

''அம்மா! அன்று நடந்தது உண்மை நிகழ்ச்சி. இன்று நடப்பது அதன் நகல்போன்ற நாடகம். இரண்டுக்கு மிடையே எவ்வளவு வருஷங்கள் வித்தியாசம். அந்த நிகழ்ச்சியில் பங்குகொண்ட மூன்று பாத்திரங்கள் மறுபடியும் நாடகத்தில் பங்கு கொள்வதுதான் ஆச்சர்யம்! ரங்கன், நீங்கள், நான் மூவருக்கும் இது புதிதல்லவே!'' என்று அவன் கூறிவிட்டுக் கீழிறங்கினான்.

வீரய்யன் தன்னை அடையாளம் தெரிந்து கொண்டான் என்பது சீதாவுக்குப் புரிந்தது. நடப்பது நடக்கட்டும் என்று சட்டுத் துணிவோடு மாடி ஜன்னலருகில் சென்று சீதா நின்றாள்.

சில விநாடிகளில் ரங்கனும் சிவசங்கரம் பிள்ளை வேடம் போட்டவனும் ஒரு பெட்டியைத் தாங்கியபடி பங்களா நோக்கி நெருங்கினர்.

தந்தை வேடம் தாங்கியவன், ''வீரய்யா!'' என்று கூப்பிட்டான்.

நிசப்தம் நிலவியது. பதில் இல்லை, அன்றுபோல்.

சீதா தன்னையும் மறந்து கீழே ஓடி வந்தாள். அதே சமயத்தில் அவள் தந்தை வேடம் தாங்கியவன், ''வீரய்யன் எங்கே போயிட்டான்? காரில்லாமல் எப்படி இந்தப் பெட்டியைத் தூக்கிட்டுப் போறது?'' என்று சலித்துக் கொண்டான்.

உடனே டேனியல் தாமஸ் புதர் அருகேயிருந்து துப்பாக்கியுடன் வெளி வந்தார். தந்தை வேடம் தாங்கியவனை நோக்கி வெத்துக் குண்டுகளால் டுமீல்... டுமீல்... என்று சுட்டார்.

தந்தை வேடம் தாங்கியவன் தரையில் விழுந்தான். சீதா தன்னையும் மறந்த நிலையில் வீரிட்டலறி விழுந்தாள்.

ரங்கன் ஓடிவந்து அவளைத் தாங்கிப் பிடித்தான்.

சீதாவும் ரங்கனும் ஒருவரையொருவர் பார்த்தனர்.

ரங்கன் கண்களில் ஒருவிதப் புது ஒளி இருந்தது.

தந்தை வேடம் தாங்கியவன் தரையிலிருந்து சிரித்தபடி எழுந்தான்.

டேனியல் தாமஸ் சிரித்தபடி ரங்கனைப் பார்த்து, "உங்களுக்கு ஞாபகம் திரும்பி இருக்க வேண்டுமே" என்றார்.

ரங்கன் வேதனையோடு இன்ஸ்பெக்டரையும் சீதாவையும் மாறி மாறிப் பார்த்தான்.

வேறு புதரிலிருந்து சத்யன் வெளி வந்தார். சத்யன் முகத்தில் கவலைக் குறிகள் நிறைந்திருந்தன.

சத்யன், "அண்ணா! ஞாபகம் திரும்பி விட்டது!" என்றார்.

ரங்கன் வேதனையோடு, "இந்த நாடகம் பயனுள்ள நாடகம்தான், ஞாபகம் திரும்பி விட்டது" என்று சொல்லிக் கொண்டே சீதாவை நோக்கினான்.

சீதா உயிர் வாழ்வதைவிடச் சாவதே மேல் என்று எண்ணிக் கொண்டாள்.

## 21

ரங்கன், ஞாபகம் திரும்பிவிட்டது என்று சொன்னதும், இன்ஸ்பெக்டர் ஆவலுடன் ரங்கனைக் கேட்டார்.

"நீங்கள் இப்போது சொல்லலாமல்லவா, உங்களை யார் சுட்டது என்பதுபற்றி?" என்று ஆவலுடன் வினவினார்.

ரங்கன் தரையைக் குழப்பத்துடன் நோக்கினான்.

"இன்ஸ்பெக்டர்! சில மணி நேரங்களுக்கு என்னிடம் ஒன்றும் கேட்காதீர்கள். எனக்கு இப்போது ஓய்வு தேவை. எங்காவது சில மணி நேரம் தூங்கினால்

தேவலாம் என்று தோன்றுகிறது'' எனக் கூறிவிட்டு ரங்கன் பங்களாவை விட்டு நடக்க ஆரம்பித்தான்.

சத்யனும் இன்ஸ்பெக்டரும் ரங்கனைப் பின் தொடர்ந்தனர்.

இன்ஸ்பெக்டர் டேனியல் தாமஸ், ''நாளை காலை தான் சென்னைக்கு ரயில். அது வரையில் நீங்கள் தங்கு வதற்கு இடம் பார்த்து வைத்திருக்கிறேன். வாருங்கள்!'' என்று சொல்லிக் காருக்கு அழைத்துச் சென்றார்.

காரில் எல்லோரும் ஏறினதும், கார் வேகமாகத் தூத்துக்குடி டவுனைத் தாண்டிச் சென்றது.

சத்யன், ''இன்ஸ்பெக்டர் சார், கார் போய்க் கொண்டிருக்கிறதே, நீங்கள் பார்த்த இடம் தூத்துக் குடியில் இல்லையா?'' என்று கேட்டார்.

இன்ஸ்பெக்டர் சாவதானமாக, ''இல்லை; நான் பார்த்திருக்கும் இடம் திருநெல்வேலியில். சீக்கிரமே சென்று விடலாம்'' என்றார். கார் டிரைவரை வேகமாக ஓட்டச் சொன்னார்.

திருநெல்வேலி வரும் வரையில் காரில் அமர்ந்திருந்த நபர்கள் யாருமே எதுவும் பேசவில்லை. அவரவர் சிந்தனையில் தோய்ந்திருந்தனர். ரங்கன் கண் மூடிக் கொண்டு கார் முன் சீட்டில் சாய்ந்திருந்தான். திரும்பிய ஞாபகங்களில் அவன் மனதைச் செலுத்தினானா, தூங்கினானா என்பது அவனுக்குத்தான் தெரியும்! சீதா பின் ஸீட்டில் அமர்ந்தபடி வருத்தத்துடன் தன் கணவனது முகத்தைப் பார்த்தபடி இருந்தாள்.

ஆனால் அவள் கணவன் டாக்டர் சத்யனோ ஜன்னலுக்கு வெளியே பார்த்தபடி அமைதியாக இருந்தான்.

கார் திருநெல்வேலி டவுனை அடைந்ததும், அது சீதாவுக்குத் தெரிந்த பழக்கமான தெருக்கள் வழியே சென்றது. முடிவில் அது மிகவும் பழக்கமான தெரு

வழியே நுழைந்ததும், பழைய ஞாபகங்கள் சீதாவை வேகமாகப் பற்றிக்கொண்டு வேதனை அளித்தன. கார், அந்தக் காலத்தில் அவள் தந்தை வாழ்ந்த வீட்டின் முன் நின்றதும் சீதாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

சீதா செல்லமாக வளர்க்கப்பட்ட அந்த வீட்டினுள் நுழைந்தாள். ரங்கனும் நுழைந்தான். அது அவனுக்கும் பழக்கமான வீடு அல்லவா!

ஆனால் அவன் முகத்தில் தூக்கத்தைத் தவிர வேறு எந்தக் குறியும் தோன்றவில்லை.

''இது ஒரு காலத்தில் பேங்கர் சிவசங்கரம் பிள்ளை என்பவரது வீடு. இப்போது வேறு ஒருவர் வசம் இருக்கிறது. அவர் இப்போது ஊரில் இல்லை!'' என்று இன்ஸ்பெக்டர் கூறிவிட்டு எல்லோரையும் உள்ளே அழைத்தார்.

சீதாவும் சத்யனும் ஓர் அறைக்குள் சென்றனர். அங்கு இரண்டு கட்டில்கள் போடப்பட்டிருந்தன. இருவரும் கட்டிலில் அமர்ந்தனர்.

ரங்கன் வேறு அறையில் சென்று படுத்துக் கொண்டான்.

இன்ஸ்பெக்டர் அர்த்தத்தோடு, ''ரங்கன், உங்களுக்கு இந்த வீட்டைப்பற்றி ஞாபகம் வருகிறதா?'' என்று கேட்டார்.

ரங்கன் பதில் சொல்லவில்லை. ''எனக்குத் தூக்கம் வருகிறது. காலையில் பேசிக் கொள்வோம்'' என்றான்.

இன்ஸ்பெக்டர், ''அப்படியே ஆகட்டும். நாளைக்குக் காலையில் வருகிறேன்'' என்று சொல்லி விட்டு அந்த வீட்டைவிட்டு வெளியேறினார்.

வீட்டை விட்டு வெளியேறிய இன்ஸ்பெக்டர் ஒரு முறை வீட்டைப் பார்த்தார். அவர் மனக் கண்முன் கடந்த கால ஞாபகங்கள் தோன்றின.

அவர் தீண்டாத வகுப்புச் சிறுவனாக ஆதரவில்லாது

அந்த வீட்டில் நுழைந்ததும், சிவசங்கரம் பிள்ளை டேனியல் தாமஸை ஆதரவோடு அழைத்து வீட்டில் அநுமதித்ததும், மறுபடி ஞாபகத்துக்கு வந்தது.

சிவசங்கரம் பிள்ளையின் பிரத்யேகமான சிரிப்பொலி டேனியல் தாமஸுக்கு ஞாபகம் வந்தது.

''தம்பி, நீ தாழ்த்தப்பட்ட வகுப்பிலேயிருந்து மதம் மாறியிருக்கே என்பதுக்காக, நீ என் வீட்டிலே இருக்கிறது என் ஜாதிப் பிள்ளைமார்களுக்குப் பிடிக்கல்லே. நாளைக்கு நீயே லட்சக்கணக்கா சம்பாதிச்சேன்னு வச்சுக்க, இல்லை பெரிய ஆபீசராயிட்டே, அப்போ இதே பிள்ளைமார்கள் உன்னிடம் பேசுவாங்க'' என்று அவர் கூறியதற்குச் சிறுவனாக இருந்த டேனியல் தாமஸ் பதில் கேள்வி கேட்டான்.

''அய்யா, அப்பா அம்மா இல்லாத என்னை வீட்டுலே வச்சு ஆதரிக்கிறீங்க! பணத்தைக் கொடுத்து அனுப்பிடலாமே! பந்துக்கள், வேணுங்கிறவங்களிடம் ஏன் கெட்ட பேரு உங்களுக்கு?'' என்று கேட்டான்.

அதற்குச் சிவசங்கரம் பிள்ளை சிரித்தார்.

''தம்பி, தாமஸ்! உனக்குப் பணம் கொடுத்தா அது பிச்சை. உன்னை வீட்டிலே மகன் மாதிரி வச்சு வாழ வச்சா, அது ஆண்டவனுக்குச் செய்யற பூஜை மாதிரி! எனக்குச் சீதான்னு ஒரு குழந்தை இருக்கு. அது மேலே உயிரையே வச்சிருக்கேன். அந்தக் குழந்தையின் எதிர் காலத்திலே நான் இல்லாமல் போனா, தாய் தந்தையில்லாத உனக்கு நான் செய்த உதவியை நினைச்சு ஆண்டவன் அதைக் காப்பாத்துவான்! தம்பி தாமஸ், நீ கிறிஸ்தவன் உனக்கு இது நல்லா மனசிலே இருக்கணும். நாம் பிறத்தியாருக்குக் கொடுக்கிறதுதான் நம்ம சொத்து!'' என்று சொன்னார்.

கடந்த காலக் காட்சியும் சிவசங்கரம் பிள்ளை கூறிய வார்த்தைகளும் நினைவுக்கு வந்ததும், டேனியல் தாமஸ் ஒருவிதக் குழப்பம் அடைந்தார். சீதாவின் நில்ல

அவர் மனதில் வேதனையைத் தந்தது.

ரங்கனுக்கு ஞாபகம் வந்து, தன்னைத் தாக்கிக் கொல்ல நினைத்தது சீதா என்று அவன் கூறினால், அவள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே அவர் கடமை!

இதே நேரத்தில் சீதா தன் அறையில் படுத்திருக்கும் கணவன் முகத்தைப் பார்த்தாள். இன்னும் சில நிமிஷங் களில் ரங்கன் தன் சகோதரனிடம் சீதா யார் என்று சொல்லி விடுவான்.

இத்தனை வருஷங்களாக ஒரு பொய்மீது கட்டப் பட்ட அவள் இன்ப வாழ்க்கை தகர்ந்து விடும்! இவ்வளவு நாள் அன்பு காட்டி இன்பம் கொடுத்தவரிடம் பொய் சொல்லி ஏமாற்றி இருக்கிறோமே, இனிமேல் அவர் தன்னை நம்புவாரா, தம்மோடு வாழத்தான் இசைவாரா என்று நினைத்து மனம் புழுங்கினாள்

## 22

சீதா எழுந்தாள். தூங்கும் கணவன் முகத்தை நோக்கினாள்.

களங்கமில்லா முகம். சீரிய பண்புக்குக் கண்ணாடி போல் அமைந்த முகம். அந்தக் கண்ணாடியில் அவள் வாழ்ந்த பொய் வாழ்வின் அலங்கோலம் பிரதிபலித்தது.

இவ்வளவு வருஷங்களாகத் தான் யார் மகள் என்று சொல்லாது அந்த நல்லவரை ஏமாற்றித் துரோகம் புரிந்ததை எண்ணி மனம் நெகிழ்ந்தாள். இரு உடல், ஓர் உள்ளம் என்று தாம்பத்ய உறவைப் பற்றி நினைக்கும் இந்த ஒளிவு மறைவு இல்லா உத்தமரிடம் உண்மையை ஒளித்து வாழ்ந்ததை நினைத்து அழுதாள்.

அவரை எழுப்பி அவரிடம் உண்மையை, அழுது

புலம்பி வெளிப்படுத்தி விடலாமா என்று அவளுக்குத் தோன்றியது.

சிவசங்கரம் பிள்ளையின் மகள் சிறையில் சில நாள் இருந்தவள் என்பதை மட்டும்தான் அவள் மறைத்திருக்கிறாள் என்று அவர் எப்படி நம்புவார்? அவள் எல்லா விஷயத்திலும் ஏமாற்றுக்காரி என்றுதானே அவருக்கு எண்ணம் ஏற்படும்! அவள் ஒழுக்கத்தைப் பற்றிக் கூடச் சந்தேகிக்கலாம். எதிர்காலத்தில்-எதிர்காலம் என்று ஒன்று இருந்தால்—அவருக்கு ஒரு விநாடி அமைதி கூட இருக்காதே!

ரயிலில் சந்தித்து அவரோடு கலந்த அன்றே உண்மையைச் சொல்லியிருந்தால்......! அல்லது அவரது வளர்ப்புத் தாயைச் சந்தித்த போதாவது சொல்லியிருந்தால்? ஒரு பொய் இப்போது ஆயிரக்கணக்கான பொய்களுக்கு அல்லவா தாயாகிவிட்டது!

குந்திதேவி, குழந்தை கர்ணன் பிறந்த விஷயத்தை மறைத்து விட்டு, பிறகு பாரதப் போர் தொடங்கும் நிலையில், அவள் பெற்ற ஒருவனும் மற்ற ஐவரும் ஆயுதம் தாங்கி நின்றபோது கர்ணனிடம் சென்று வரம் கேட்கும் நிலையில் துடித்ததுபோல் சீதா துடித்தாள். குந்தி தேவிக்காவது வெட்கத்தை விட்டுத் தன் மகனிடம் சென்று உறவாடும் துணிவு இருந்தது. ஆனால் சீதாவுக்கு ஏது அந்தத் துணிவு? வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் ஒரே வழிதான் அவள் மனத்துக்குத் தோன்றியது.

அவள் வாழ்வைக் கெடுக்க வந்தவனே, அவள் வாழ்வை வளப்படுத்திய கணவனின் மூத்த சகோதரனாகத் தோன்ற வேண்டுமா?

கண்ணீர் சிந்தியபடி அவள், தூங்கும் கணவன் பாதத்தில் கடைசி முறையாகத் தன் தலையைப் பணித்தாள். தன் கண்ணீரால் பாதத்தைக் கழுவி, மௌனமாகப் பாதத்தில் பாவ மன்னிப்புக் கேட்டாள்.

கண்ணீர் பட்ட காரணத்தினாலோ என்னவோ டாக்டர் சத்யன் பாதங்கள் சிலிர்த்தன. அவன் திரும்பிப் படுத்தான்.

சத்யன் விழித்துக் கொண்டு விட்டானோ என்று சீதா ஒரு விநாடி அச்சமடைந்தாள்.

ஆனால் நிர்மலமாகத் தூங்கும் அவன் முகத்தைப் பார்த்து விட்டு நிம்மதியுடன் அறையை விட்டு வெளியே வந்தாள்.

அவள் குழந்தைப் பருவத்தில் இன்பமாக விளையாடி மகிழ்ந்த வீடு. அவள் மனத்தில் தந்தையின் திளைத்து முழுகிய நினைவுகள் வந்தன. உரத்த குரலில் ''சீதாக் கண்ணு'' என்று கூப்பிட்டபடி அவள் தந்தை கையில் பூந்தி பொட்டலத்தோடும் மல்லிகைச் செண்டுடனும் வீட்டில் நுழைவது அவள் ஞாபகத்துக்கு வந்தது.

மெல்ல நகர்ந்து, அந்தக் காலத்தில் அவள் தந்தையின் அறையாக இருந்த ஹாலில் நுழைந்தாள். அந்தப் பெரிய அறையில் இப்போது சோபாக்கள் இல்லை. அவர் எப்போதும் உட்கார்ந்து ஆடும் ஊஞ்சல் இல்லை. ஊஞ்சல் கம்பிகள் தொங்கிய இடத்தில் இரும்பு வளையங் களைப் பார்த்த சீதாவின் மனத்தில் கடந்த காலக் காட்சி உருவாயிற்று.

அவள் தந்தையின் கரத்திலே திருக்குறள். சிவசங்கரம் பிள்ளை கூறுகிறார்: ''மனுஷன் கவரிமான் மாதிரி வாழணும்; இல்லே சாகணும்! கவரிமான் தேகத் திலே இருந்து ஒரு ரோமம் விழுந்து விட்டால் அது வாழாது! உடனே இறந்து போயிடும். அதுபோல மனிதனும் நிலைகுலைந்த பின் மானங்கெட்டு வாழக் கூடாது. தன் நிலை தாழாமையும் அந்நிலை தாழ்ந்தக் கால் உயிர் வாழாமையும் மானமெனப்படும்!'' என்று கூறி விட்டு நகைக்கிறார்.

''ஆம், உண்மை. அவர் கடனாளி! பாங்க் பணத்தை எடுத்தவர் என்று ஊரானுக்குத் தெரியுமுன்பே இறந்து

விட்டார்...'' என்று தனக்குத்தானே கூறிக் கொண்டு மறு முறையும் இரும்பு வளையத்தைப் பார்த்தாள் சீதா.

விசித்து விசித்து அழுதாள்.

''அப்பா... நான் இளமையில் சிறப்பாக வாழ்ந்தது இந்த வீட்டிலே. நான் உயிர்விட வேண்டுமென்று தான் விதி என்னை இங்கே கொண்டு வந்து விட்டது. அப்பா, நீங்கள் ஆடிய ஊஞ்சலைத் தாங்கிய இரும்பு வளையங்கள் இன்று என் உயிரற்ற உடலைத் தாங்கட்டும். அப்புறம் ரங்கன் என் கணவனிடம் என்ன கூறினால் என்ன? உலகம் என்னைப் பார்த்து என்ன சொன்னால் என்ன? தொங்கும் என் உடலைப் பார்க்கும்போது டேனியல் தாமஸின் வெற்றிப் புன்னகை அர்த்தமற்றதாகிவிடும் அல்லவா...!''

அங்கே போட்டிருந்த ஒரு ஸ்டூலின் மீது ஏறிச் சேலையின் தலைப்பை அதில் செருகி முடி போட்டாள், சீதா.

## 23

விட்டத்தில் தொங்கும் இரும்பு வளையங்களில் சீதா சேலையை எறிந்த மறுநிமிடமே பின்புறமிருந்து ஒரு முரட்டுக் கை அவளைப் பிடித்தது.

டேனியல் தாமஸ்தான் மறைந்திருந்து எல்லா வற்றையும் கவனித்துவிட்டுத் தற்கொலை நோக்கம் புரிந்து கொண்டதும் தடுக்கிறார் என்று சீதா நினைத்துக் கொண்டாள்; திரும்பிப் பார்க்கவும் தைரியம் இல்லாமல் கண்களை மூடிக்கொண்டாள்.

''சீதா, நீ உயிரைவிடத் தேவையில்லை!'' என்ற கனிவான குரல் கேட்டுத் திகைத்தாள்.

திகைப்போடு திரும்பினாள்.

எதிரே நின்று கொண்டிருந்தது அவள் கணவன் அல்ல; அவளுடைய கணவனின் சகோதரன் ரங்கன்!

அந்த இரவின் தனிமையில் சீதா அவனோடு அருகில் நிற்கவே அச்சமடைந்தாள். அவளுடைய அச்சத்தை ரங்கன் கவனித்தான்.

''அந்த ரங்கன் இறந்து விட்டான் சீதா! நீ சுட்ட குண்டினால் சில நாட்கள் நான் ஞாபகம் இழந்திருந்தேன். என் உள்ளத்தில் வாழ்ந்த மிருகத்தை நிரந்தரமாக இழந்து விட்டேன். என் உள்ளத்தில் மிருக உணர்ச்சி இல்லை. என் சகோதரன் மனைவியாகிய நீ இன்று என் மகள் போல் காட்சி அளிக்கிறாய்'' என்றான்.

அவன் பார்வையில் மருட்சி இருந்தது; பயங்கரம் இல்லை, கனிவு இருந்தது; கோபம் இல்லை.

''நான் உண்மையைச் சத்யனிடம் கூறிவிடுவேன் என்று பயந்துதானே இதற்குத் துணிந்தாய்? நான் உண்மையைக் கூறுவதாக இருந்தால், தூத்துக்குடி கடற்கரையில் அந்தப் பாழடைந்த பங்களாவில் என் ஞாபகங்கள் திரும்பியபோதே இன்ஸ்பெக்டரிடம் கூறியிருப்பேனே! கூறத்தான் நினைத்தேன்; ஆனால் கூறவில்லை. ஏன் தெரியுமா? நீ என் தம்பி மனைவி! தம்பி படிக்க வேண்டும். படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதற்காக நான் திருடலானேன். ஆனால் ஆண்டவன் என் உதவி இல்லாமலேயே அவனுக்கு வாழ்வைக் கொடுத்து விட்டான். அழகான கற்புள்ள மனைவியையும் கொடுத்து விட்டான். அதுவே எனக்குப் போதும்! தம்பிக்கு எதுவுமே தெரிய வேண்டாம். நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. நீ போய்ப் படுத்துக் கொள்'' என்றான் ரங்கன்.

சீதா நடுக்கத்துடன் கணவன் படுத்திருக்கும் அறையில் போய்ப் படுத்தாள்.

மறுநாள் காலையில் அவள் கண் விழித்தபோது வெகு நேரம் ஆகியிருந்தது. கணவன் அந்த அறையில் இல்லை.

அறையின் வெளிப்புறம் கையில் ஒரு கடிதத்துடன் அவள் கணவன், இன்ஸ்பெக்டர் டேனியல் தாமஸிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

சீதாவைப் பார்த்ததும் சத்யன் ஒன்றும் பேசவில்லை. டேனியல் தாமஸ்தான் பேசினார்.

''மிஸஸ் சீதா, மிஸ்டர் ரங்கன் இந்தக் கடிதத்தை எழுதி வைத்து விட்டு எங்கோ போய்விட்டார்...'' என்று சொல்லிவிட்டுக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தார்.

''தம்பி!... எனக்கு ஞாபகம் திரும்பி விட்டது. அதோடு உண்மையும் புரிந்து விட்டது. எந்தப் பெண்ணும் என்னைச் சுடவில்லை. திடீர், திடீர் என்று எனக்குச் சித்த ஸ்வாதீனம் இல்லாமற் போய்விடும். அப்போது நான் என்னையும் உலகத்தையும் வெறுத்துப் பயங்கரமாக ஏதாவது ஒன்றைச் செய்யத் துடிப்பேன். அம்மாதிரி நிலையில்தான் நான் அன்று சென்னைக்கு வந்தபோது என்னையே சுட்டுக்கொண்டு விட்டேன். இம்மாதிரி மூளைக் கோளாறு உள்ள நான் உன் அருகில் இருந்து உன் வாழ்வைக் கெடுக்க விரும்பவில்லை. நான் அமைதி தேடிப் போகிறேன். நீயும் உன் மனைவி சீதாவும் நிறைவோடும் மகிழ்வோடும் நீண்ட காலம் வாழ வேண்டும்.

இப்படிக்கு,
ரங்கன்.''

கடிதத்தைப் படிக்குமுன்பே சத்யன் அறைக்குள் சென்று விட்டார். அதைப் பயன்படுத்திக் கொண்ட டேனியல் தாமஸ், ''சீதா, நான் உன்னைத் தவறாகச் சந்தேகித்ததற்கு என்னை மன்னித்து விடு'' என்று கூறிவிட்டு விடைபெற்றார்.

சீதா நிம்மதியோடு கணவன் இருக்கும் அறையில் நுழைந்தாள்.

சத்யன் அவளை நிமிர்ந்து பார்த்தார். அதில் ஒருவிதப் பரிதாப உணர்ச்சி இருந்தது. சீதா துணுக் குற்றாள்!

சத்யன் தரையைப் பார்த்தபடி, ''நீ தானே அண்ணாவைச் சுட்டவள்? சிவசங்கரம் பிள்ளை மகள் நீ தானே?'' என்றார்.

சீதா கல்லாய் நின்றாள்.

''பைத்தியக்காரி! ஆரம்பத்திலேயே என்னிடம் உண்மையைக் கூறியிருந்தால் என்ன? உன்னை நான் மணந்தபோது நீ ஒரு கன்னிப் பெண் என்பது கூட எனக்குத் தெரியாதா? நான் ஒரு டாக்டராக இருந்து இது கூடவா எனக்குப் புரியாது? உன் தந்தையின் செயலுக்காக உன்னை வெறுப்பேனா நான்? சீதா, நேற்று நீ அண்ணாவோடு பேசும்போது நான் விழித் திருந்தேன். முன்பே எனக்கிருந்த சந்தேகம் அப்புறம் ஊர்ஜிதமாயிற்று. விடிவதற்குள் அண்ணா போய் விட்டான்!''

சீதாவால் நிற்க முடியவில்லை.

''என்னை மன்னித்து விடுங்கள்!'' என்று கூறிக் காலில் விழுந்தாள்.

சத்யன் அவளைத் தூக்கி நிறுத்தி ஆறுதலாக அணைத்துக் கொண்டான். அதன் பின் இருவரும் ரயில் நிலையத்துக்கு வந்து ரயில் ஏறினார்கள்.

அதே வண்டியில் கமலாவும் சிராளனும் ஏறியது சீதாவுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

கமலா ரகசியமாகச் சீதாவின் காதில், ''அவர் என்னை மணந்து கொண்டார். என் வயிற்றில் வளரும் சிசுவுக்குத் தகப்பனாகச் சம்மதித்து விட்டார். அது சிசுவின் குற்றமல்ல என்று சொல்கிறார்'' என்று கூறினாள்.

சீதா சீராளனை மதிப்புடன் பார்த்தாள்.

''ஆரம்பத்திலேயே உண்மையைக் கூறிவிடுவது நல்லது'' என்று முணுமுணுத்தாள்.

டாக்டர் சத்யன் சற்றுத் தொலைவில் ஜன்னல் வழியே வயல்களைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். அவர் சிந்தனை, மின்னல் போல் வந்து காற்றோடு போய்விட்ட அண்ணன்மீது லயித்து நின்றது.

## 24

லாட்டரியில் லட்சம் ரூபாய் பரிசு விழுந்து, அதைப் பெற்று மகிழ்வுடன் பாங்கில் போட, அந்தப் பாங்கு ஒரே வாரத்தில் முழுகிப் போனால் எத்தனை வேதனையாக இருக்கும்! கண்ணிழந்தான் பெற்று அதை மீண்டும் இழந்தது போன்ற நிலையில்தான் டாக்டர் சத்யன் இருந்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு காணக் கிடைத்த-பழகக் கிடைத்த-தம் அண்ணன் மின்னல் வேகத்தில் மறைந்து விட்டதை நினைந்து நினைந்து சத்யன் உள்ளுற மருகினார்.

கணவன் சத்யன் சீதாவிடம் அன்பாகத்தான் நடந்து கொண்டார். ஆனால் பழைய நிலையை-துடிப்பை-அவரிடம் காண இயலவில்லை.

தன்னுடைய சென்ற காலத்தை நினைத்துத் தன் கணவர் அப்படி நடந்து கொள்கிறாரோ என்று சீதாவுக்கு ஓர் ஐயம் உண்டாக நெஞ்சைத் துளைத்துக் கொண்டிருந்தது.

டாக்டர் சத்யனின் உள்ளத்தை அப்படித் துளைத்து, மன நிம்மதியை இழக்கச் செய்தது—அவருக்கு அவருடைய

அண்ணன்மீது இருந்த பாசமும், மீண்டும் அவர் காணாமற் போன கவலையுமே.

இந்த நிலையில் திடீரென்று ஒரு நிகழ்ச்சி நடந்தது. சத்யன் ஒரு நாள் மாலை ஆஸ்பத்திரியிலிருந்து வரவில்லை. கணவன் எங்கே சென்றிருப்பார், என்ன காரணம் என்று தெரியாமல் சீதா துடித்தாள்.

பத்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் சத்யன் காலையில் வாடிய முகத்தோடு, காரில் வந்துஇறங்கினார். சீதா ஓடிப்போய் அவரை வரவேற்றாள்.

அதற்குள் வேறு ஒரு காரும் அங்கே வந்து நின்றது. அதிலிருந்து இரண்டு நர்ஸுகளும் இரண்டு வேலையாட்களும், மெலிந்த காவி உடை அணிந்த ஓர் உருவத்தைத் தூக்கிக் கொண்டு போய் வலது கோடி அறையில் படுக்கையில் கிடத்தினர்.

படுக்கையில் கண்மூடிப் படுத்திருந்தவர் ரங்கனே தான். மெலிந்து மஞ்சள் நிறத்தோடு சாவை எதிர் நோக்கிக் கிடந்தான் அவன். நடுங்கிய வண்ணம் சீதா அறைக்குள் சென்றாள். அவனது தோற்றத்தைக் கண்டு கண் கலங்கி நின்ற சீதாவிடம், ''அண்ணனுக்குப் புற்று நோய்!'' என்று சத்யன் கவலை தோய்ந்த குரலில் கிசுகிசுத்தபோது அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

இறுதியில் அண்ணன் தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தானே என்ற ஆறுதலுடன் டாக்டர் சத்யன், ரங்கனுக்குத் தன் திறமை முழுதும் உபயோகித்து இரவும் பகலும் சிகிச்சை செய்தார். வேளா வேளைக்கு டாக்டர் போட்ட ஊசி அவன் வலியை மறக்கச் செய்து தூக்கத்தை அளித்தது. எனினும் சாவை நோக்கி, அவன் வேகமாக நகர்ந்து கொண்டிருந்தான்.

அன்று சத்யன் ரங்கனது உடலில் ஊசி மூலம் மருந்தை செலுத்திக் கொண்டிருந்தார். ரங்கன் திடீரென்று பேச ஆரம்பித்தான்.

"அறியாப் பொண்ணு வாழ்விலே குறுக்கிட்ட பாவம்தான் என்னை இப்படித் துடிக்க வைக்கிறது! தன் கற்பனைக் காப்பாத்திக்க என்னைச் சுட்ட அவள், இன்று என் உயிரைக் காப்பாத்த உன்னோடு நின்னு ஒத்துழைக்கறதைப் பார்த்நா என் நெஞ்சம் கலங்கறதுடா சத்யா..." அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை. பிரகாசத்துடன் எரிந்த விளக்கு திடீரென அணைந்தது. அதோடு சீதாவின் இறந்த காலமும் மறைந்தது. ஒரே ஒரு பொய் சொல்லப் போய் அவள் பட்ட துன்பம் அன்றோடு தொலைந்தது. 'சொர்க்க'த்தில் புயல் ஓய்ந்து, அமைதி நிலவியது.

நிறைந்தது